# இந்து ஒளி

# HINDU OLI

அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

Quarterly of
All Ceylon Hindu Congress

தீபம் - 14

சுடர் - 01



## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

## நினைவுச் சிறப்பிதழ்


## தமிழ் மக்களுக்கு விமோசனமும் நிம்மதியும் வேண்டி பிரார்த்தனை
## இந்து ஒளி - தீபாவளி சிறப்பிதழ் வெளியீடு (17.10.2009)




சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் நந்திக்கொடி ஏற்றி வைக்கிறார்.



மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை உரை யாற்றுகிறார்.



சுவாமி சர்வரூபானந்தா மகராஜ், தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் சிறப்புரையாற்றுகிறார்கள்.



இந்து ஒளி சிறப்புப் பிரதிகள் வழங்கப்படுகின்றன.





இந்து ஒளி சிறப்புப் பிரதிகளை தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளிடமிருந்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ அதிபர் திரு. பொன். விமலேந்திரன் ஆகியோர் பெற்றுக்கொள்கிறார்கள்.

உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

-திருச்சிற்றம்பலம்-

## தேவாரம்

(சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது)

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி லானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே!

## திருவாசகம்

(மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது)

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையை
புல்லிப் புணர்வ தென்று சொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே!

## திருவிசைப்பா

(கருவூர் தேவர் அருளியது)

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம் நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல் பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணம் கோயில் கொண்டாயே!

## திருப்பல்லாண்டு

(சேந்தனார் அருளியது)

தாதையைத் தாளற வீசியது சண்டிக்கு
அண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போன கமு மருளிச்
சோதி மணி முடித்தாமமும் நாமமும்
தொண் டர்க்கு நாயகமும்
பாதகத் திற்குப் பரிசளித் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

(சேக்கிழார் அருளியது)

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி!

-திருச்சிற்றம்பலம்-


உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 14 சுடர் – 01

விரோதி வருடம் கார்த்திகைத் திங்கள் 26ஆம் நாள்

12.12.2009


## நாவலர் இன்றிருந்தால்...

"யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்கள் ஓர் அவதார புருஷர். இடையிருட் கடைக் காலத்தில் விடியும் முன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோல தமிழகத்தில் தளருஞ் சைவமுந் தமிழுந் தழைய, அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவர். முன்னே பல காலங்களிலுந் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒருமுகமாக பழங்கடனைத் தீர்த்து, என்றுந் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் என்றால் அது மிகையாகாது" என்ற வார்த்தைகளில் தமிழ்நாட்டு அறிஞர், பேராசிரியர் சோமசுந்தரபாரதியார் தமிழகத்தை ஈழநாட்டிற்கு கடமைப்படுத்திய பேருபகாரியாக ஆறுமுகநாவலர் பெருமானின் பெருமையை சிறப்பாக எடுத்துக் கூறியிருந்தார்.

அத்தகைய பெருமைமிக்க நாவலர் பெருமானுக்கு "இந்து ஒளி"யின் இந்த சிறப்பிதழை அர்ப்பணிப்பதில் அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.

நாவலரின் தலைசிறந்த பணிகளில் ஒன்றாக பதிப்புப் பணி விளங்குகிறது. அவ்வழியில் நின்று மாமன்றமும் இந்து ஒளி இதழினை கடந்த பதின்மூன்று வருட காலமாக ஒழுங்காக வெளியிடுவதுடன், காலத்துக்குக் காலம் பல நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் மாமன்றம் வெளியிட்டிருக்கும் "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" நூலும் குறிப்பிடற்பாலது.

"நாவலர் இன்றிருந்தால்..." என்ற எண்ணம் நிச்சயமாக மனத்திரையில் எழாமல் இல்லை. எமது சமுதாயத்தில் நடக்கும் சீர்குலைவுகளைக் கண்டித்து பிரசாரம் செய்திருப்பதோடு, நாட்டில் எமது மக்கள் படும் வேதனைகளையும் சோதனைகளையும் பாரெல்லாம் வாழும் இந்து சமுகத்திற்கு எடுத்துரைத்து அவர்களை கண்விழிக்கச் செய்திருப்பார்.

இந்த இக்கட்டான காலத்திலும், இந்நாட்டில் இந்து மத அமைப்புகளினது ஒன்றியமாக – உச்ச நிறுவனமாக, நாவலர் பரம்பரையில் வந்தவர்கள் என்று நிம்மதியடையக்கூடிய வகையில் மக்கள் துயர்துடைக்க மாமன்றம் செய்து வரும் நாடறிந்த பணிகளை பாரெல்லாம் போற்றுகின்றது. தொடர்ந்தும் எமது சேவைகள் மேலே எடுத்துச் செல்லப்பட வேண்டும். எமது மக்களுக்கு எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றி வைக்க எம்மாலானவற்றை செய்வோம்.

எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் பிரார்த்தனையாகும். இதற்காக இறையருளை வேண்டுவோமாக!

# இந்தச் சுடரில்...


- பஞ்சபுராணங்கள் 1
- விநாயகர் அவதாரம் 4
- நாவலர் பெருமானின் நாமம் சைவம் உள்ளவரை வாழும் 5
- வேத சிவாகம நெறிகளை வாழ வைத்த நாவலர் பெருமான் 6
- தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் அருந்தொண்டாற்றிய நாவலர் 7
- நாவலர் பாடல்பெற்ற சிவஸ்தலம் 8
- நாவலரின் சமுதாயப் பணிகள் 9
- நாவலரும் பைபிளும் 11
- பக்திரசம் ததும்பும் திருவெம்பாவை 12
- திருவெம்பாவை [விளக்கத்துடன்] 13
- திருப்பள்ளியெழுச்சி [விளக்கத்துடன்] 17
- மார்கழியின் மகிமை 19
- திருவாதிரையும் திருவெம்பாவையும் 20
- சிந்தனைக் கதைகள் 21
- பெரிய புராணக் கதைகள் 22
- சக்தி வழிபாட்டின் தனித்துவம் 23
- அறமுணர்த்தும் நந்தி 25
- மனிதப் பிறவியின் மகத்துவம் 28
- மாமன்றத்தின் அஞ்சலி 29
- பெரியார் சரவணமுத்து 30
- மணிவிழா கண்ட மனோகரன் 32
- வைகுண்ட ஏகாதசி 33


**அடுத்த சுடர்**

**விரோதி வருடம்**

தை – பங்குனி

## வாழ்த்து

அறனொடு அன்பும் வாழ்க அகிலமும் செழித்து வாழ்க!
மறையவர் குழாத்தினோடு அடியவர் குழாமும் வாழ்க!
கறைமிடற் றண்ணலார் தன் கருணையு மருளுமோங்கி
இறையருள் தன்னா லெல்லா உயிர்களும் நீடுவாழ்க!

# இந்து ஒளி


அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விரோதி வருடம் ஐப்பசி – மார்கழி இதழ்
கார்த்திகைத் திங்கள் 26 ஆம் நாள்
12.12.2009



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. த. மனோகரன்



ஒரு பிரதியின் விலை ரூபா 30.00
வருடாந்தச் சந்தா [உள்நாடு] ரூபா 120.00 [தபாற் செலவு தனி]
வருடாந்தச் சந்தா [வெளிநாடு] US டொலர் 10.00



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி எண் : 2434990, தொலைநகல் : 2344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.


# HINDU OLI


**Aipasi -- Markazhi Issue of**
**ALL CEYLON HINDU CONGRESS**
12th December 2009



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Dr.. Kumarasamy Somasundaram
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. Kandiah Neelakandan
Mr. D. Manoharan



Price : Rs. 30.00 Per copy
Annual Subscription (Inland) Rs. 120.00 (Postage Exclusive)
Annual Subscription (Foreign) U. S. $ 10.00 (Including Postage)



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 2434990, Fax No.: 2344720


Next Issue :
**Thai - Pankuni**


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுச் சிறப்பிதழ்

**சைவப் பெருமகனார் நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர் அவர்களது குருபூசை - நினைவுச் சிறப்பிதழாக மலரும் இந்த "இந்து ஒளி"யை சைவமொடு தமிழ் வளர்த்த நாவலர் பெருமானுக்கு காணிக்கையாக சமர்ப்பணம் செய்வதில் மாமன்றம் பெருமையடைகிறது.**

## நாவலரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5ஆம் நாள் (18.12.1822) புதன்கிழமை பிறந்தார். தந்தையார் பெயர் ப. கந்தப்பிள்ளை, தாயார் பெயர் சிவகாமியார்.

இவர் ஐந்தாவது வயதில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடமும் நல்லூர் வேலாயுத முதலியாரிடமும் ஆரம்பக் கல்வியைக் கற்றார். 1834ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (பின்னர் மத்திய கல்லூரி என அழைக்கப்பட்டது) ஆங்கிலக் கல்வி கற்கத் தொடங்கினார். அதேவேளையில் இருபாலை நெ. சேனாதிராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் தமிழ் கற்றார். 1841ஆம் ஆண்டில் யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் தமிழ், ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றார்.

நாவலர் 1847 மார்கழி மாதத்தில் வண்ணை வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபத்திலே சமயச் சொற்பொழிவு செய்ய ஆரம்பித்தார். அவரது வேதாகம மொழிபெயர்ப்பை ஒப்புவிப்பதற்காக பேர்சிவல் பாதிரியாருடன் 1848ஆம் ஆண்டு முதலாவது இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார். அதே ஆண்டு ஆவணி மாதத்தில் யாழ். வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஸ்தாபித்தார். 1848 புரட்டாதி மாதத்தில் வெஸ்லியன் மிஷன் கல்லூரியின் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

1849ஆம் ஆண்டு ஆடி மாதம் அச்சியந்திரம் வாங்குவதற்காக இரண்டாவது இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார். அந்தவேளையில்தான் திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

1854ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் மூன்றாவது இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார். தொடர்ந்து 1858ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் நான்காவது இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார். அப்போது சென்னையில் வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையை ஸ்தாபித்தார். சென்னையில் தங்கியிருந்த காலத்தில், சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவுவதற்கான ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார். 1862 பங்குனி மாதம் யாழ்ப்பாணம் திரும்பிய ஆறுமுகநாவலர், அதே ஆண்டு வைகாசி, ஆடி மாதங்களில் வண்ணை சைவ வித்தியா சாலையிலும் பருத்தித்துறை சித்தி விநாயகர் கோயிலிலும், சிதம்பரத்தில் சைவ வித்தியாசாலை நிறுவுவதற்காக சைவ அன்பர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். சைவ அன்பர்களிடமிருந்து நிதியுதவிகள் கிடைத்தன.

1864ஆம் ஆண்டு தை மாதத்தில் ஐந்தாவது இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார். அதே ஆண்டு ஐப்பசி மாதத்தில் சிதம்பரத்தில் சைவ வித்தியாசாலையை ஸ்தாபித்தார். ஆறு வருட காலத்தின் பின், 1870 மாசி மாதம் யாழ்ப்பாணம் திரும்பினார். 1872ஆம் ஆண்டில் யாழ். வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கில வித்தியாசாலையையும், கோப்பாய் புலோலி ஆகிய இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் நிறுவினார்.

ஆறுமுகநாவலரின் சமய, சமூக கல்விப் பணிகள் சிறப்பாகத் தொடர்ந்தன. சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வந்தார். 1879ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையின் போது நிகழ்த்திய நாவலரின் சொற்பொழிவே, இவரது இறுதி நிகழ்வாக அமைந்திருந்தது. சிறிதுகால சுகயீனத்தின் பின்னர், பிரமாதி வருடம் கார்த்திகைத் திங்கள் 21ஆம் நாளன்று (5.12.1879) மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.

இவ்வருடம் ஆறுமுகநாவலரின் 130வது நினைவு தினத்தை சைவப்பெருமக்கள் அனுஷ்டிக்கிறார்கள். இம்மாதம் (டிசம்பர்) 5ஆம் திகதியன்று இவரது நினைவு தினமும், 8ஆம் திகதியன்று குருபூசைத் தினமுமாகும்.

# விநாயகர் அவதாரம்

க. கயிலாயநாதன்



பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.
- திருஞானசம்பந்தர்

இந்து மதம் விரிவானது. இறைவன் அறுவகைச் சமயத்தார்க்கும் அவரவர் பொருளாய் நின்று அருள்பாலிக்கின்றான். அறுவகைச் சமயங்களுள் சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன அடங்கும். இவற்றுள், கணபதியை முழுமுதல் கடவுளாக ஏற்றிப் போற்றும் சமயம் காணாபத்தியம் எனப்படும்.

கணபதி எனின் பூதகணங்களுக்குப் பதி அல்லது தலைவர் எனப் பொருள்பெறும். இப்பெருமைபெற்ற கணபதியை வர அருளியவன், வலிவலமுறை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறையே என்று மேலுள்ள சம்பந்தர் தேவாரம் அம்பலப்படுத்துகின்றது. உமை, பிடியதன் (பெண் யானை) உருவத்தைக் கொள்ள, சிவபிரான் மிகு கரியது (ஆண் யானை) வடிவுகொண்டு தனதடி வழிபடுவோரின் இடரைக் கடியவே, கணபதியை இறைவர் அருளினான் என்று சுருக்கமாகவும் விளக்கமாகவும் மேலுள்ள தேவாரம் தெரிவிக்கின்றது.

இக்காரணத்தைத் தவிர வேறு காரணங்களையும் புராணங்கள் புகல்கின்றன. இவற்றுள் முக்கிய காரணமாக, கயமுகாசுரனைக் கொன்று, அவன் வருத்திய தேவர் துயர் துடைக்கவே விநாயகர் தோன்றினார் என்பர்.

மாகதன் என்னும் முனிவருக்கும், விபுதை என்னும் இராட்சதைக்கும் கயமுகாசுரன் மைந்தனாக வந்துதித்தான். சிவபக்தியில் திளைத்த இவன், பரமசிவனை நினைந்து தவம் செய்து வரம் பெற்றான். தேவர்களைத் தான் ஆட்சிபுரியவும், அவர்கள் அடிமையாக தனக்கு ஏவல் செய்யவும் ஆவலோடு அருள் பெற்றான். தேவர்கள் எதிர்த்து தன்னுடன் போர் செய்ய முடியாமலும், அவர்களாலோ பூதங்களாலோ மனிதர்களாலோ விலங்குகளாலோ இறவாதிருக்கவும், திறமான வரம் பெற்றான். ஆனால், ஆணவம் ஆரைத்தான் விட்டது! ஆணவம் அசுரன் தலைக்கேற, தேவர்கள் பாவிகளாயினர். வருத்தம் தாங்குமுடியாது தேவர்கள் தேவாதி தேவரிடம் முறையிட்டனர். இவ்விடர் கடியவே, விநாயகரை யானை முகத்தோடு, யானை முகத்தனான கயமுகனைக் கொல்லவும், தேவர்கள் அல்லல் அகலவும், பரமசிவன் படைத்தனன்.

எவ்வகை ஆயுதத்தாலும் கொல்லமுடியாத அசுரனைக் கொல்ல, வேழமுகத்தோனிடம் ஆழப் பாயும் ஆயுதம் ஒன்று உண்டு. இதுவே, விநாயகரின் வலப்புறத் திருக்கரத்திலே இருக்கும் ஒரு கொம்பு. இதை ஒடித்து, அசுரன்மீது எறிந்து அவனை வதைத்தான் கருணாமூர்த்தி கணபதி. இதனால் இவருக்கு **ஒற்றைக் கொம்பன்** என்ற திருநாமமும் வருவதாயிற்று.

கயமுகாசுரன் பெற்ற அடுத்த வரம் இறவாமையாகும். இறவா வரம்பெற்ற அசுரன் உருமாறிப் பெருச்சாளியாய் போரைத் தொடர்ந்தான். இதனால், விநாயகர் பெருச்சாளிமீது ஏறி அதை அடக்கினார். ஆணவ வடிவுகொண்ட கயமுகன் பெருச்சாளியாய் மாறியதால், இது ஆணவத்தின் அடையாளமானது. இதன்மேல் அமர்ந்த வேழமுகத்தோன் ஆணவத்தை அடக்கி, மலபரிபாகம் செய்யும் விமலனானார்.

பிறப்பற்ற விநாயகருக்கு **சிந்தாமணி விநாயகர், பாலச் சந்திர விநாயகர்** என்று, பல தோற்றங்கள் பலவாறு புராணங்கள் பகரினும், சிவபெருமானின் வேறாகாத ஒளித் திருமேனியே விநாயகக் கடவுளின் உருவம் என்பது புராணக் கதைகளுக் கெல்லாம் அடிப்படையான பொதுக் கருத்து. வேண்டுவார் வேண்டுவதாயும் ஈசன் உயிர்கள் மீதுள்ள தனிப்பெருங் கருணையால், அடியவருக்கு உகந்த திருமேனி தாங்கி, விநாயகக் கடவுளாகவும் விளங்கி, விக்கினங்களை விலக்கி அருள்புரிகின்றார் என்பதே அடிப்படைத் தத்துவம். இதனாலேயே, விக்னேஸ்வரர் என்ற பெயரும் விநாயகருக்கு உண்டு.

விநாயகர் என்ற திருப்பெயர் வி+நாயகர் எனப் பிரிந்து 'வி' எனின் இல்லாத என்றும், 'நாயகர்' எனின் தலைவர் என்றும் பொருள்பெற்று "தனக்கு மேலில்லாத தலைவர்" என்பதை விளக்கும். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய் சிவகணங்களின் பதியாய் (தலைவராய்) விளங்குவதால், 'கணபதி' என்றும் நன்றே நவில்வர்.

*(நன்றி : விநாயகர் அகவல் விரிவாக்கம்)*

**(2009.12.22ம் திகதி விநாயக சஷ்டி விரதமாகும்)**



## நாவலரை நாம் நினைந்தால் வாழ்வு வெல்லும்

நாவலரை நாம் மறந்தால் நன்றிகொன்ற
பழி நம்மைச் சூழ்ந்து கொள்ளும்
நாவலரை நாம் நினைந்தால் நன்மைபல
பொங்கி நம் வாழ்வு வெல்லும்
நாவலரை நாம் கற்றால் நற்றமிழும்
சைவமும் நமை வாழ வைக்கும்
நாவலரை நாமுணர நல்ல தமிழ்
நூல் பதித்தான் தம்பிகனக ரத்தினந்தானே!

- வித்துவான் க. ந. வேலன்

(பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் எழுதிய "ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும்" என்ற நூலுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரத்திலிருந்து)



# நாவலர் பெருமானின் நாமம்
# சைவம் உள்ளவரை வாழும்




செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

*உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்*

*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*


சைவமும் தமிழும் வாழ்வதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருமகன் நல்லைநகர் நாவலர்பெருமான் . இவர் இறைவனுடன் கலந்து நூற்று முப்பது ஆண்டுகள் நிறைவடைகிறது. இம் மண்ணில் எத்தனை மனிதர்கள் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். ஆனால் ஒரு சிலரே நூற்றாண்டுக்குப் பின்னும் நாம் வழிபடும் தெய்வநிலையில் போற்றப்படுகிறார்கள். நாவலரைப் பொறுத்தவரை மனிதர்களுக்கு அப்பால் இன்றும் தெய்வமாக வழிபாடு செய்யப்பட வேண்டியவர் என்பதனை எந்த சைவ சமயத்தவரும் மறுக்க இயலாது. எத்தனையோ பேர் பிரமச்சாரியாக துறவியாக பற்று அற்றவர்களாக வாழ்ந்து போயிருக்கிறார்கள். நாவலரைப் பொறுத்தவரை தன்னுடைய ஆத்மாவிற்கு விடுதலை கேட்டு துறவு பூண்டவர் அல்லர், எல்லாச் சைவ மக்களின் வாழ்வுக்கும் வழிகாட்டியதோடு வாழ்வுக்கு பின்னால் நல்லகதியை ஒவ்வொருவரும் அடைவதற்கான வழிகாட்டியவர். ஈழத்திரு நாட்டில் மெய்ச் சமயமாகிய சைவத்திற்கு ஆபத்து வந்த வேளை தனியொருவராக நின்று சைவத்தை நிலைபெறச் செய்த உத்தம ஞானி என்றால் மிகையாகாது. 57 வருடங்கள் வாழ்ந்த நாவலர் சைவசமயமும் செந்தமிழ் பண்பாடும் நிலைபெறுவதற்கு சீரான அத்திவாரத்தை ஏற்படுத்தினார்.

அந்நியர் வருகையால் பலநூறு சைவத் திருக்கோயில்கள் அழிக்கப்பட்டன. கல்வியின் பேராலும் உத்தியோகத்தின் பேராலும் மதமாற்றம் வேகமாக நடைபெற்ற வேளை துடித்தெழுந்தவர் நாவலர். உயர் தொழிலுக்காக வசதி படைத்தவர்கள் மதம் மாறினர். ஏழைகள் வாழ்வதற்கு ஆதாரம் தேடி பிறமத வலையில் அகப்பட்டனர். இந்நிலையில் சைவசமயம் தத்தளித்தது. நாவலர் பெருமான் சைவசமயத்தையும் செந்தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த்தெடுப்பதற்கு அகத்திலே திட்டமிட்டார். அதைப் புறத்திலே செயற்படுத்த முதலில் கல்விச் சாலையைக் கட்டினார். சுதேசிகளுக்கு சொந்தமாகப் பாடசாலைகள் உருவாக வேண்டும் என உரத்து உணர்த்தினார். அழிந்து போன கோயில்கள் அனைத்தும் கட்டப்பட வேண்டும் என ஊர் ஊராக சென்று பிரசாரம் செய்தார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேச்சரம் முதல் திருக்கேதீச்சரம் வரை மீளவும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என பிரசுரங்கள் வெளியிட்டு மக்களை விழிப்படையச் செய்தார். ஏட்டிலே உள்ள சைவசமய புராண காப்பியங்கள், அறநூல்கள் நவயுகத்திற்கு பொருத்தமான வகையில் அச்சேற்றி பைபிளுக்கு ஈடாக எம்மிடம் எத்தனை தெய்வீகச் சொத்துக்கள் உண்டு என்பதனை உலகுக்கு உணர்த்தினார். பாய்க் கப்பலில் இந்தியா சென்று அச்சியந்திரம் வாங்கி எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களை தானே அச்சேற்றி பாதுகாத்த இப் புனிதப் பிறவியை எப்பிறப்பில் காண்போம். எம்மண்ணில் பிரசங்கமரபை ஏற்படுத்தி இன்னும் அத்துறை வாழ விதி செய்த வித்தகர் நாவலருக்கு நாம் என்ன கைமாறு செய்வோம். இன்று ஈழத்திரு நாட்டில் திருநீற்றுப் பொலிவோடு சைவமக்கள் வாழ்வதற்கு வழிசமைத்தவர் நாவலர் பெருமான். சைவப் பாடசாலைகள் இன்று நாடு முழுவதும் கொடி கட்டிப்பறக்கிறது. கொழும்பு சைவ மங்கையர் கழக பாடசாலையில் கற்ற மாணவி அகில இலங்கை ரீதியில் உயர்தரப் பரீட்சையில் முதல் பெறுபேறு எய்துள்ளார். இச் செய்தி சைவத்தமிழருக்கு பெருமிதம் தருகிறது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்றவர்கள் நூற்றுக்கணக்கானோர் இன்று உயர்கல்விமான்களாக விளங்குகிறார்கள். இப்பாடசாலைகளின் பிறப்பிற்கு மூலகாரணமாக விளங்குபவர் யார்? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இத்தனைக்கும் மூலகாரணமாக விளங்குகின்ற நாவலர் பெருமானை நாம் நன்றியோடு போற்ற வேண்டும். எங்கும் தமிழறிஞர்கள் வாழலாம், தூய செந்தமிழ் நடை இன்னும் மாசுபடாமல் இருப்பது நாவலர் பிறந்த மண்ணிலே மட்டும் என்பதை உலகத் தமிழறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். செந்தமிழ் நடையை, இலக்கணமரபை, பதிப்பித்தல் பணியை, கல்வி வழங்கல் முறையை தனித்துவத்தோடு பாதுகாத்து தந்தவர். இப் பரோபகாரிக்கு உலகம் உள்ள வரை நன்றியோடு விழா எடுத்து வழிபாடு செய்யவேண்டியது எம்கடன் ஆகும்.

"கார்த்திகை மா சத்துமகங் காசினிக்குச் சைவநிலை
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச் – சீர்த்திமிக
மேவு தமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்ற திருநாள்"

-சி. வை. தாமோதரம்பிள்ளை

திங்களணி செஞ்சடையான் செய்யபுகழ் வையகமீ
தெங்குமினி தோங்கச்செய் பெம்மானே – தங்குபுக
ழூறுமுக நாவலனே யன்பினிலைப் போற்றாதார்
வேறறங்கள் செய்தல் விழல்.

- மகாவித்துவான் சபாபதிநாவலர்

# வேத சிவாகம நெறிகளை வாழவைத்த நாவலர் பெருமான்

பிரம்மஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா
*சமஸ்கிருத விரிவுரையாளர்,*
*சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*

சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தையெனவும், ஐந்தாம் குரவர் எனவும் சிறப்பிக்கப்பட்டு வரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமயத்திலே வேத சிவாகம நெறியால் வழுவாதொழுகும் சிறந்த சைவசமய பிரசாரகராவார்.

விவாகம், சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்யாபிஷேகம் என்னுமிவைகளைப் பெற்றுள்ளவர்கள் சிவதீட்சையில்லாத வைதிகப் பிராமணர் கையாலேயே விபூதி வாங்குதலைக் கண்டு, இது சிவாகம விரோதமென்று துணிந்து, அதனை நீக்கக் கருதி, அவர்களிடத்தே விபூதி வாங்காத ஒரு நியமத்தை ஆறுமுகநாவலர் கொண்டிருந்தார்.

ஆதலின், சிவதீட்சையுடையோர் அஃதில்லாதாரை வணங்கு தலும், அவர்களைச் சிரார்த்தம் முதலிய பிதிர் காரியங்களுக்கு வரித்தலும், அவர்களின் கையாலே விபூதி வாங்குதலும், அவர்களைக் கொண்டு சிவாகமப் பிரமாணங்களுடன் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பெற்ற கோயில்களிலே பூசை, திருவிழாக்கள் செய்வித்தலும் பிறவுமாகிய இவைகளெல்லாம் வேத சிவாகம நெறிகளுக்கு விரோதமென்பதையும், இப்படிச் செய்வோர் யாதொரு பயனையும் அடையமாட்டார்கள் என்பதையும் ஆறுமுக நாவலர் வலியுறுத்தி வந்ததுடன், தனது பிரசாரங்களிலே ஆணித் தரமாகச் சொல்லியும் வந்தார்.

## நெறிகளை நிந்தை செய்த அந்தணர்கள்

ஆறுமுகநாவலரின் பிரசாரங்கள் எழுச்சி பெற்று வரும் காலத்தில் குறிப்பாக ஈழநாட்டிலே வாழ்ந்த அந்தணர்கள் சமூகமும் வைதிக நெறி, சிவாகம நெறி என இரு சம்பிரதாயங்களை வலியுறுத்தி முன்னெடுத்து வந்தது. வேதநெறியால் வந்த வைதிகப் பிராமணர்கள் சிலர் தம்மிடத்திலே விபூதி வாங்காமை யினால் அவர்மேற் கோபங்கொண்டு, புறம்பே அவரைத் (நாவலர் பெருமானை) தூஷித்தார்கள். அத்துடன் நில்லாது சிவ பெருமானின் திருமேனியையும், ஆன்மாக்களுக்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தை உதிப்பித்து மோட்ஷத்தைக் கொடுக்கும் இயல்பினையுடைய சிவாகமங்களையும் நிந்தித்தார்கள். அவர்கள் செய்யும் நிந்தைகளைச் சில பிரபுக்கள் (அக்கால அரசியற் தலைவர்கள்) கேட்டு, மேலும் சிவாகம நெறியை நிந்தை செய்யும் படியும் வைதிகப் பிராமணர்களை ஏவிவிட்டார்கள்.

## நாவலரின் செயற்பாடு

சிவாகம நிந்தையையும், சிவனடியார் நிந்தைகளையும் ஒருபோதும் பொறுக்கமாட்டாத சைவப்பிரசாரகரான ஆறுமுக நாவலர், துந்துபி வருடம் மாசி மாதம் பத்தொன்பதாம் திகதி (1862) தமது வித்தியாசாலையிலே வேதம் பொது நூலென்றும், ஆகமம் சிறப்பு நூலென்றும் வைதிக நெறி மார்க்கத்திலொழுகுவோர் புண்ணிய லோகங்களை அடைவார்களென்றும், சிவாகம நெறி மார்க்கத்திலொழுகுவோர் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்திகளையும் சாயுச்சியமாகிய பரமுத்தியையும் அடைவார் களென்றும், அநேக பிரமாணங்களை எடுத்துக்காட்டி விளக்கம் கொடுத்து பிரசங்கித்தார்.

## வைதிகப் பிராமணர்களின் செயற்பாடு

ஆறுமுகநாவலரின் இப்பிரசங்கத்துக்கு விரோதமாகி வைதிகப் பிராமணர் சிலர், பிரபுக்களை அணுகி, அவர்களுடைய உதவியினாலே வைதிக நெறியைப் பின்பற்றுபவர்களே உயர்ந்தவர்கள் என்றும், அவர்களை சிவாகம நெறியைப் பின்பற்றுபவர்கள் வழிபடலாமென்றும், தாங்கள் பரார்த்த பூஜை செய்ய விதியுண்டு என்றும், தம்மைப் பின்பற்றி வருகின்றவர் களுக்கு பிரபுக்களின் அனுசரணையுடன் பல வெகுமதிகளையும் கொடுத்து சிவாகம நெறியாளர்களுடன் விவாதங்களுக்கும் முன்வந்தார்கள். ஆனால் வைதிக நெறியில் வந்த அந்தணர்கள் விவாத சபையில் எழுந்து நாவலருக்கு முன் பேசுவதற்கு சக்தியற்றிருந்தார்கள்.

## ஜனங்களின் தெளிவு

இவைகளையறிந்த சாதாரண ஜனங்கள் நாவலர் சொல்வதே சாஸ்திர சம்மதமெனவும், தங்களை அலைத்தவர்களாகிய வைதிகப் பிராமணர்கள் சொல்வது அசம்மதம் எனவும் தெளிந்து கொண்டார்கள்.

தெளிவு ஏற்படவே வைதிகப் பிராமணர்களுக்கு கௌரவம், வந்தனம் செய்து வந்த அநேகர் அவற்றைச் செய்யாது விட்டார்கள். வைதிகப் பிராமணர்களைக் கொண்டு பரார்த்த பூஜை செய்வித்த கோயிலதிகாரிகளுள் அநேகர் வைதிகர்களை நீக்கிச் சிவப் பிராமணர்களைக் கொண்டு பூஜை செய்விக்கத் தொடங்கினார்கள்.

வைதிகப் பிராமணர் கையாலே விபூதி வாங்கும் வழக்கத்தையுடைய சிவதீட்சை பெற்ற அநேகமானோர், அவர்கள் கையாலே விபூதி வாங்காது விட்டார்கள். இந்தப் பிரசாரம் தீட்சை பெற்றோருக்கு மரியாதை நடத்தலையும், அவர்கள் சைவர்களாகவே வணங்கப்படுதற்கு யோக்கியதையுடை யவரென்று சிவாகமங்களிலே சொல்லப்பட்டிருத்தலையும் அறிந்த வைதிக நெறியைப் பின்பற்றி வந்த பிராமணர்கள் அநேகர் சிவதீட்சை பெற்று சிவபூஜை செய்து சிவாகம நெறியைப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

## வேத சிவாகம நெறிகள் சிறப்புப் பெற்றமை

ஈழநாட்டிலே சிவாகம நெறியும், ஆராய்ச்சியும், சிவபூஜைச் சிறப்பும், தேவார திருவாசக பாராயண ஓசையும், சிவபூஜைக்கு இன்றியமையாத சிறப்புள்ள பூஜை மணியின் ஓசையும் சிறப்புடன் பரவத் தொடங்கின.

வைதிக நெறி மார்க்கமும், சிவாகமநெறி மார்க்கமும் இணைந்து வேத சிவாகம நெறியாக சிறப்புடன் தழைத்தோங்கத் தொடங்கியது. சைவசமயத்தை பரப்புவதற்கென்றே திருவவதாரஞ் செய்த சைவப் பிரசாரகராகிய ஆறுமுகநாவலர் பெருமானும் வேதசிவாகம பேதமின்றி இரண்டையும் ஒன்றிணைத்து, வேத சிவாகம நெறிகளாக சிறப்புடன் வாழவைத்து திறம்படச் செய்தவர் என்பது புலனாகின்றது.

# தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் அருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலர்


த. மனோகரன்
உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்,
மாமன்ற கல்விக் குழுச் செயலாளர்


"வீறு கொண்ட இந்து சீர்திருத்தக்காரர்" என்று சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் போற்றிப் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர் ஆறுமுகநாவலர் அவர்கள். தமிழ் மொழிக்கும், இந்து சமயத்திற்கும் பல்வேறு வழிகளில் செயற்பட்டு எழுச்சியும், பெருமையும் சேர்த்தவர் என்பதுடன் மட்டுமன்றி இலங்கைத் தமிழ் மக்களது பண்டைய பாரம்பரிய இருப்பை வரலாற்று ரீதியில் உறுதிப்படுத்தவும், அரசியல் தலைவர்கள் நேரிய வழியில் செயற்பட்டு மக்களுக்குத் தொண்டாற்றவும் நாவலர் பெருமான் பாடுபட்டார்.

யாழ்ப்பாணம் நல்லூரிலே கந்தப்பிள்ளை, சிவகாமியம்மை தம்பதிக்குப் புத்திரனாகப் பிறந்த ஆறுமுகத்திற்கு நாவலர் என்ற பட்டத்தை தமிழ்நாடு திருவாடுதுறை ஆதீனம் வழங்கிக் கௌரவித்தது. அன்றுதொட்டு ஆறுமுகநாவலர் என்று அழைக்கப்படலானார். கடல் கடந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் நாவலர் பெருமை பெற்றதன் மூலம் இலங்கைத் தமிழ் நாடும் பெருமைபெற வழியேற்றப்பட்டது.

தமிழ் மொழியறிவை மேம்படுத்துவதற்காக இலவச வகுப்புகளை நடத்தி தமிழ் மொழியார்வத்தை ஏற்படுத்தினார். அத்துடன் சம்பிரதாய சடங்குகள் மட்டுமே சமயம் என்று எண்ணிச் செயற்பட்ட மக்களிடத்தில் சமயத் தத்துவங்களை விளக்கி சமய நம்பிக்கையையும், அதன் மூலம் சமய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்துமுகமாக சமயப் பிரசாரங்களைப் பயிற்றுவிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தினார். நாவலர் அன்று தொடங்கிய இத்திட்டம் இன்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒன்று என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய ஆறுமுகநாவலர் பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளை ஏற்று பைபிளைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தார். அப்பணியை ஆற்றியதன் மூலம் கிறிஸ்தவ சமயம் தொடர்பான பூரண அறிவைப் பெறும் வாய்ப்பைப் பெற்றார்.

பல சமய அறிவைப் பெற்றதன் மூலம் சைவசமயம் தொடர்பாக அந்நிய சமயத்தவர்களால் தவறாகவும், இழிவாகவும் பரப்பப்பட்ட செய்திகளுக்குத் தகுந்த பதிலளிக்கும் ஆற்றலைப் பெற்றவராக விளங்கினார். இவரது வாதங்கள் மூலம் சைவசமயத்திற்கெதிரான வாதங்கள் முறியடிக்கப்பட்டன. ஆனாலும், நாவலர் ஒரு மத வெறியராக இல்லாமையால் பிற சமயநூலான பைபிளை தமிழ் மொழியில் மொழி பெயர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழிக்கல்விக்கும், இந்து சமய அறிவை வளப்படுத்துவதற்குமாக ஆறுமுகநாவலரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் 1848 ஆம் ஆண்டில் சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது போன்று அவரால் 1864 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது. அந்நியர் ஆட்சிக்காலத்தில் நமது பாரம்பரிய கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு திட்டமிட்ட முன்னோடி என்ற பெருமையை ஆறுமுகநாவலர் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

திருவிளையாடற்புராண வசனம், பெரிய புராண வசனம், இலக்கண வினாவிடை, இலக்கணச்சுருக்கம், நன்னூற்காண்டிகை, பாலபாடங்கள், இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, நன்னூல்விருத்தி, பிரயோகவிவேகம், சைவவினாவிடை, சிவாலய தரிசனவிதி, புட்பவிதி, நித்தியகருமவிதி, சிதம்பரமான்மியம், சைவசமய நெறியுரை, தருக்க சங்கிரகம், கோயிற்புராண உரை, திருமுருகாற்றுப்படை உரை ஆகிய நூல்களை ஆக்கித்தந்தவர் ஆறுமுகநாவலர்.

அத்தோடு திருவாசகம், பதினொராந்திருமுறை, அகத்தியர் தேவாரத்திரட்டு, சிவஞான போதச் சிற்றுரை ஆகிய நூல்களை அச்சில் பதிப்பித்து நூலுருக்கொடுத்தவரும் அவரே. அவற்றுடன் பாரதம், திருக்குறள், பரிமேலழகர் உரை, சேது புராணம், திருக்கோவையார் உரை என்பனவும் இவரது முயற்சியாலே நூலுருப்பெற்றன.

அந்நிய சமயிகள் சைவசமயத்தை இழிவாகப் பரிகசித்த போது அதற்குத் தகுந்த பதிலளித்து அவர்களது வாதங்களை முறியடிப்பதில் வெற்றிகண்டவர் நாவலர் பெருமான். மித்தியாவாதம், சுப்பிரபோதம், சைவதூஸணபரிகாரம், நிருசனம் முதலிய கண்டன ஆக்கங்களை இதன் பொருட்டு வெளியிட்டார்.

சமூகப்பிரச்சினைகள் தொடர்பிலும், அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் நாவலர் பெருமான் கவனம் செலுத்திக் கருத்துக்கள் வெளியிட்டுள்ளார். அவை கட்டுரைகளாகவும், கண்டனங்களாகவும் வெளிப்பட்டன. அவை தொகுக்கப்பட்டு "நாவலர் பிரபந்தம்" என்ற பெயரில் வெளிவந்தன. சமயத்துடன் கல்வி, சமூக, அரசியல் நலனுக்காகவும் உழைத்தவர் ஆறுமுகநாவலர்.

இவற்றிற்கும் மேலாக ஆறுமுகநாவலருக்குச் சிறப்புச் சேர்ப்பது இலங்கையில் இந்துக்களதும், தமிழர்களதும் தொன்மை வரலாற்றையும், பண்டைய இருப்பின் சிறப்பையும் வெளிக்கொண்டு வந்த அவரின் பாரிய பணியே என்பதை மறந்து விட முடியாது.

ஒரு இனத்தின், சமயத்தின் பண்டைய வரலாற்றை உறுதிப்படுத்தும் சான்றுகள் மிகப் பெறுமதிவாய்ந்தவை. அந்தவழியிலே நாவலர் பெருமான் பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பவற்றை மீள வெளியுலகத்திற்கு தெரியச் செய்தவர் என்ற சிறப்புக்குரியவராகின்றார். இதன் மூலம் வரலாற்று ஆய்வாளர் என்ற நிலையிலும் போற்றப்படும் தன்மையைப் பெறுகின்றார்.

> ஆறுமுக நாவலன்சீ ரான்றதமிழ்க் காவலன்மெய்
> வேறுபடும் பொய்மதத்தோர் மேவலன்றன் – வீறுபுகழ்ச்
> சைவப்பிர காசவித்யா சாலைமிக வோங்கிடுக
> வெவ்வெவ் பகலு மினிது
>
> – அ. சிவசம்புப் புலவர்

“யாழ்ப்பாணச்சமயநிலை” என்ற பிரசுரத்தில் அவர் பின்வருமாறு மக்களைத் தெளிவு படுத்தியுள்ளார்.

“சைவசமயிகளே, தேவாரம் பெற்ற சிவத்தலங்கள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுளொன்றாகிய திருகோணமலைக்கு சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்திற்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்று இருக்கின்றன” என்றும்.

“மன்னாருக்குச் சமீபத்தில் மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன் பொந்து ஒன்று உள்ளது. அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது. அதனைச் சென்றடையுங்கள்” என்றும் கூறியுள்ளார்.

வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட புராண, இதிகாசகால பழம்பெரும் சிவாலயங்கள் இரண்டும் மீளெழுச்சி பெற்ற இலங்கை வாழ் இந்துக்களின் பண்டைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த நாவலர் ஆற்றிய பணி மகத்தானது.

ஆறுமுகநாவலர் சமயம், மொழி, கல்வி, சமூகம், அரசியல் வரலாற்று ஆகிய சகலமுறைகளில் கவனம் செலுத்தித் தமிழ், இந்துமக்களது நெஞ்சிலே நிரந்தர இடம் பெற்றுவிட்டார். தூய நோக்கில் அர்ப்பணித்துச் செயற்பட்ட நாவலர் பெருமான் வையத்துள் வானுறையும் தெய்வமாகப் போற்றப்படுகின்றார்.

# நாவலர் பாடல்பெற்ற சிவஸ்தலம்

அராலியூர் (அமரர்) வெ. சு. நடராசா

ஐந்தாங் குரவர் எனப் போற்றப்படும் ஆறுமுகநாவலர் பாடல்பெற்ற சிவஸ்தலம் அராலி மேற்கில் உண்டு. இவ்வூருக்கு வண்ணபுரம் என்று மறுநாமமுண்டு. இங்கே கோயில் கொண்டருளியிருக்கும் பெருமானது பெயர் விசுவநாதர். அம்மையார் பெயர் விசாலாட்சி. தற்போதுள்ள ஆலயம் 1773ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி அத்திவாரமிடப்பட்டது. காசியம்பதியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கமே இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. நாவலர் பெருமானது பாமாலையின் வரலாற்றை கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியவர்கள் தமது “நாவலர் பெருமான்” என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“நள வருஷம் சித்திரை மாதம் ஐந்தாம் தேதி (ஏப்ரல் 1856) வண்ணபுரம் என்னும் நாமம் கொண்ட அராலியில் விநாயகரை – செல்லையாக் குருக்கள் பிரதிஷ்டை செய்தார். செல்லையாக் குருக்கள் கோயில் ஆதீனஸ்தர்! அர்ச்சகர். சைவாகம அறிஞர். அவர் நாவலரை அழைத்தார். இச்சமயங்களில் நாவலர் சிறப்பான காணிக்கை நிவேதனம் கொண்டு செல்வதுண்டு. நாவலர் பட்டு, பழம் முதலியன கொண்டுவரும்படி வேலையாளரிடம் கேட்டிருந்தார். அவன் மறந்து போனான். வண்ணபுரத்துக்கும் நல்லூருக்கும் ஏழு மைல் இடைத்தூரம் சென்றுவர நேரமில்லை. அந்த ஊரிலும் காணிக்கைக்குரிய பொருட்கள் கிடைக்காது. ஆகையால் நாவலர் பூமாலைக்கும் கனிகளுக்கும் பதிலாக முக்கனியிலும் பாமாலை புனைந்து சூட்டினார். மூன்று பாமாலைகள் – ஒன்று சித்தி விநாயகருக்கு; இரண்டு விசுவநாதருக்கு, மூன்று விசாலாட்சியம்மைக்கு.

## அராலி சித்தி விநாயகர் விருத்தம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்





### சித்தி விநாயகர் துதி

சீரேறு கருணையுரு வாயவிசுவேசனோடு திகழ்விசா லாட்சி தந்த
செல்வமே யடியவர்க ளினிதுண்ண வுண்ணத் தெவிட்டாத தென்னமுதமே!
பேரேறு மறிவிச்சை தொழிலென்றுமதமூன்று பெருகு மானந்த வடிவே,
பிரணவப் பொருளே யெனுன் னுறவேயெ துள்ளமே பேசியிரு கண்ணின் மணியே!
காரேறு பெருமானொ டயன்முதலி யாவருங் காணரிய நினதிரண்டு
கழல்பணிந் திடின்மகப் பேறுமுத லியாவையும் கைகட்ட லரிதாகுமோ?
வாரேறு களபயரி மனவருவு முபயமூலை வலவையுள மகிழ் கொழுநனே
வண்டுமது வுண்டலவு தண்டலை யராலிநகர் வாழ்சித்தி வேழமுகனே!



### விசுவநாதர் துதி

உலகெலர மாகிலே றாயுடனு மாய்நின்ற உண்மையறி வின்ப வடிவே
ஓங்குமீ சனாதி சத்தியஞ் சகமே மெய் யுருவெனக் கொண்ட முதலே
அலகிலாமுற்றறிவ முதலறு குணங்களா றங்கமென வுடைய யரனே
அவனிமுதன் மூர்த்தமெட் டுடையவனாய்ச் சர்வாதியட்டநா மங்கொள்சிவனே!





### விசாலாட்சியம்மை துதி

கொன்பூத்த விமயப் பொருப்பதவு புதல்வியே போதாவா னந்த வடிவே!
பொலுமென் னான்கறம் வளர்த்தருளு மன்னையே போகுவரவற்ற பெருமானே
கொன்பூத்த அயில்வேற் குமாரனைத் தந்தநிர்க்குணவிடப் பாலம் மையே
கொலவுவரை யாதியைஞ் சத்திவடி வாய்நின்றகோதின் கருணா வாரியே
மின்பூத்த கொடியிடை கொள் சயசலகலை மகள்பணிவு மேன்மையுறுமா
தேவியே, மிக்கபா மான்சாத் திடுமடியர் வேண்டுவன
தென்பூத்த நினதுபத மலரிறைஞ் சிடுமடியர் சிந்தித்த வரமருள் செய்வாய்;
செங்கமல மலர்வாணி தங்கிடுமராலி நகர் திகழ்விசா லாட்சி யுமையே!

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சமுதாயப் பணிகளும் சமூக நோக்கும்

*பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்*
பேராதனைப் பல்கலைக்கழகம்

### நாவலரின் சமுதாயப்பணி

நாவலரின் சமுதாயப் பணியினைப் பின்வருமாறு பதித்து நோக்கலாம்.

1. ஆகம விரோத நடவடிக்கைகளைக் களைய முற்படல்
2. கஞ்சித் தொட்டித் தருமம்
3. வேளாண்மைப் பணி
4. அரசியல் பங்கு
5. ஆலய புனருத்தாரணம்.

### ஆகம விரோத நடவடிக்கைகளைக் களைய முற்படல்

நாவலரின் ஆகம விரோத நடவடிக்கைகளைக் களையும் முயற்சிகளில், சைவ மக்களிடம் காணப்பட்ட குறைபாடுகளும் ஆலய சீர்கேடுகளும் முக்கிய இடம் பெற்றிருந்தன. ஆலயக் கிரியைகள் ஆகம விதிக்கமையாமை, தேவார திருவாசகம் முதலான திருமுறைகளும் பண்ணோடு பாடப்படாமை, பார்ப்பனர், கோயிலாளர், சைவக்குருமார்கள், உருத்திரங் கணிகையர் முதலானோரின் ஒழுக்கக்கேடு, சதுர்க்கச்சேரி நடத்தல், வாணவேடிக்கை, பிறர் மனை நயத்தல், வரவு செலவு காட்டாமை, விடிய விடிய வைபவங்கள் நடத்தல், பொய், களவு, மதுபானம் அருந்துதல், சூது, வெற்றிலை, பாக்கு போடுதல் முதலான விடயங்களை நாவலர் கண்டித்தார். இவை ஆலயங்களில் நடைபெற்றாலென்ன, பொது வைபவங்களில் நடைபெற்றாலென்ன தனி மனித குடும்ப சூழலில் நடைபெற்றாலென்ன யாவும் மனித வாழ்வுக்குத் தீங்கு பயப்பதோடு, சமுதாய வாழ்வின் ஒழுங்குமுறையைக் கெடுத்துவிடும், என நாவலர் நம்பினார். எனவே, நாவலர் மக்களிடமிருந்து இவற்றைக் களைவதில் மிகுந்த கரிசனை உடையவராக விளங்கினார் எனலாம்.

### கஞ்சித் தொட்டித் தருமம்

1876 ஆம் ஆண்டு ஈழநாட்டின் வடபிரதேசம் பெரும் வரட்சிக்குட் பட்டிருந்தது. நெல், குரக்கன் முதலான தானிய வகைகளும், பிற பயிர் வகைகளும் மழையின்றி அழிந்தொழிந்தன, இதனாலே நாட்டில் பஞ்சம் தலைதூக்கியதுடன் பொருட்களின் விலைவாசியும் உயர்ந்து சென்றது. இலை, குழை புற்று மண் முதலானவற்றைச் சாப்பிட்டு, உயிர் வாழவேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர், பஞ்சமும், கொடிய வரட்சியும் சேர்ந்து மக்களிடத்தே கோதாரி நோயை ஏற்படுத்தின. இந்நோயால் மக்கள் அல்லல் பட்டனர். பலர் மாண்டொழிந்தனர். பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி, அராலி முதலான இடங்கள் கோதாரி நோயால் பெரிதும் பாதிப்புக்குள்ளாயின. இந்நிலையில் நாவலர் எவ்வித வேறுபாடுகளும் காட்டாது, களத்தில் இறங்கி, பட்டினியால் வாடும் மக்களுக்குக் கஞ்சிவார்க்க முற்பட்டார். இவரது முயற்சிக்கு இக்காலத்தில் எழுந்த பத்திரிகைகளும், உயர் அதிகாரிகளும் ஆதரவளித்தன. கஞ்சி தொட்டியில் ஊற்றப்பட்டு பின் ஒவ்வொருவருக்கும் வார்க்கப்பட்டமையால் இதனைக் கஞ்சித் தொட்டித் தருமம் என அழைத்தனர். வண்ணார் பண்ணை கொழும்புத் துறை முதலான இடங்களை மையமாகக் கொண்டு கஞ்சித் தொட்டித் தருமம் நடைபெற்றன. 1877 ஆம் ஆண்டு மார்கழிமாதம் வரையும் இக் கஞ்சித் தொட்டித் தருமம் நீடித்தது. காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களால் இத் தருமம் முடிவடைந்திருக்கலாம். நாவலரின் சமுதாயப் பங்களிப்பில் கஞ்சித் தொட்டித் தருமம் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளதெனலாம்.

### வேளாண்மை பணி

1876 ஆம், 1877ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் பஞ்ச நெருக்கடியைத் தொடர்ந்து, சேர், வில்லியம் கிறெகறி என்னும் ஆளுனரால் ஏற்படுத்தப்பட்டதே கந்தளாய் வேளாண்மைத் திட்டமாகும். இதன் அடிப்படையிலே, யாழ்ப்பாணத்தில் "யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வேளாண்மைச் சங்கம்" உதயமானது. பங்குகளின் அடிப்படையில் முகாமைத்துவம் வழங்கப்பட்டது. நாவலர் இவ்வேளாண்மைச் சங்கத்தால் சைவ, தமிழ் மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற முடியும் என்ற காரணத்தால் கூடுதற் பங்குகளை வாங்கி அதன் முகாமையாளரில் ஒருவராகச் சேர்ந்துகொண்டார். பின்னர் இச்சங்கத்தின் பயன்பாட்டினை மக்களுக்கு வெளிப்படுத்தும் பொருட்டுத் தமது சைவப்பிரகாச வித்தியாசாலையிலே பொதுக்கூட்டங்களைக் கூட்டிப் பிரசங்கித்தார். 1879இல் முதன்முதலில் ஏற்பட்ட தேசிய இனவாதப் போக்குகள் காரணமாக நாவலர் தமது சமூகநலப் பணிச் செயற்பாடுகளை கை விட நேர்ந்தது. 1877ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்குப்பின் ஏற்பட்ட மழையினைத் தொடர்ந்து மக்கள் விதைப்பதற்கு விதைநெல் தேவைப்பட்டது. யாழ்ப்பாண ஏச்சன்ட் துவைணந் துரையிடமும் இலங்கை ஆளுனரிடமும் முறையிட்டார். நாவலரின் வேண்டுகோள் கருத்திற் கொள்ளப்படாத நிலையில் நாவலர் சட்டநிரூபணசபைத் தமிழ்ப்பிரதிநிதி சேர் முத்துக்குமார சுவாமி அவர்களின் துணையோடு வேண்டிக் கொண்டார். அவரது வேண்டு கோள் நிறைவேற்றப்பட்டது. வடபகுதி விவசாயிகளுக்கு நெல் வழங்கப்பட்டது. துவைினந்துரை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய ஊழல்கள் அனைத்தையும் இலங்கை ஆளுனர்மூலம் பிரித்தானியாவுக்குத் தெரிவித்தார்.

### அரசியற் பங்கு

ஈழநாட்டிலே தொடர்ச்சியான சைவப் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் சைவ மரபிலே வந்த பிரதிநிதி ஒருவர் சட்டநிரூபண சபையிலே அங்கம் வகித்தல் வேண்டும் என்ற காரணத்தினால், தனது நண்பரான பிறிற்றோவுக்கும் தமக்கும் அவ்வப்போது சில முரண்பாடுகள் ஏற்பட்ட போதும் பிறிற்றோவின் ஆளுமையை அங்கீகரிக்காது, பொன்னம்பலம் இராமநாதனைச் சட்ட நிரூபண சபைக்குத் தெரிவதில் ஆர்வங்காட்டிய பாங்கு முக்கியமான வரலாற்று நிகழ்ச்சியென்றே குறிப்பிடல் வேண்டும். நாவலர் இல்லேல் சேர் பொன் இராமநாதன் என்றொருவரை வரலாறு நினைத்துப் பார்க்க முடியாது. அவர் "இந்துக்களின் சீர்த்திருத்தவாதி நாவலர்" எனக் கூறியமை இங்கு நினைவுக் கூறத்தக்கது.

**கல்வி என்பது அறிவாலும் பயிற்சியாலும் முறையாகப் படிப்பது; கேட்பதாலும், அனுபவத்தாலும் வரக்கூடியது. அதனை வாங்கவோ, விற்கவோ முடியாது. அதனால்தான் "வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது, கள்ளத்தால் தீராது, கொடுத்தாலும் நிறைவொழிய குறைபடாது" என்றெல்லாம் கல்வியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் நம் முன்னோர். (பக்தி)**

## ஆலயப்பணி

நாவலர் பொதுமக்களால் வழிபாடியற்றப் பெற்ற புராதன ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டுமென்பதிலும் மக்களால் வழிபடப்படும் ஆலயங்கள் ஆகம சிற்ப சாத்திர விதிமுறைக்கு அமைந்த வண்ணமாக நடைபெற வேண்டுமென்பதிலும் கரிசனை உடையவராக விளங்கினார். ஈழநாட்டிலே பாடல் பெற்ற தலங்கள் அழிபாடடைந்திருப்பதைக் கண்ணுற்ற நாவலர் அவற்றைப் புனருத்தாரணம் செய்யவேண்டும் என்பதை 1872ஆம் ஆண்டு வெளியிட்ட யாழ்ப்பாணச் சமயநிலை என்ற பிரசுரத்தில் வற்புறுத்தியுள்ளார். நாவலர் திருக்கேதீச்சரத்தைப் புனருத்தாரணஞ் செய்ய முற்பட்டபொழுது அவரின் பரமவைரியும், நண்பருமான துவைனிரைத்துரை அரசாங்க அதிபராக இருந்தமையால் அவ்வருஞ் செயலை அவரால் செய்யமுடியவில்லை. இதனாலே, யாழ்ப்பாணத்திலே கீரிமலையிலுள்ள புராதன சிறப்புமிக்க சிவன் கோயிலைப் புனருத்தாரணஞ் செய்ய முற்பட்டார். 1878ஆம் ஆண்டு வைகாசிமாதம் இக்கோயிலின் புனருத்தாரணத்தின் அவசியம் பற்றிய விக்கியாபனத்தை வெளியிட்டார். 1879ஆம் ஆண்டு ச. இரகுநாத சாஸ்திரியார் (சோதிடர்) சோமிநாதர் (சிற்பாசிரியர்) கா. சபாபதிக் குருக்கள் முதலானோர் களுடன் சேர்ந்து கோயில் கட்டுவதற்கான நிலத்தைக் குறித்துச் சென்றார். ஆயினும், நாவலரின் காலத்தில் இவ்வாலயத்தின் புனருத்தாரண வேலைகள் முற்றுப்பெறவில்லை. பின்னர், சைவ உதயபானு, இந்துசாதனம் ஆகிய பத்திரிகைகளின் பிரசாரத்தாலும், நீர்வேலி சங்கர பண்டிதர், வண்ணை வை. ஆறுமுகம்பிள்ளை ந. ச. பொன்னம்பலபிள்ளை, முதலானோர்களின் அனுசரணையாலும் கீரிமலைச் சிவன்கோயில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது. நாவலர் ஆகம விரோதக் கிரியை முறைகள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் நடப்பதைக் கண்டு கண்டித்தமை போன்று, வண்ணார் பண்ணைக் கதிரேசன் கோயில் ஆகம முறைக்கும், சிற்ப சாத்திர விதிமுறைக்கும் விலக்காகக் காணப்பட்டிருப்பதைக் கண்டித்தும் 1879ஆம் ஆண்டு ஆடிமாதம் "வண்ணார் பண்ணைச் சிவன் கோயில்" என்ற துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டார். சிவன் கோயிலுக்குத் தென் பக்கத்திலே கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டிருப்பதைக் காரணகாரியத் தொடர்பு காட்டிப் பிரசுரமொன்றை வெளியிட்டார். ஈழநாட்டின் வடபகுதியிற் காணப்பட்ட சிறிய பெரிய கோயில்கள் அனைத்தும் நாவலின் கண்டனங்களுக்குட்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள, ஆகம ஒழுங்குகளை இயன்றமட்டும் கடைப்பிடித்து வந்தமையினாலேயே வடபகுதியிற் சிறந்த ஆலயங்கள் தோன்றலாயின. ஈழத்தின் வடபகுதியிலே ஆகம நெறிகளுக்குட்பட்டுக் கட்டியெழுப்பப்பட்ட ஆலயங்களும், கட்டியெழும்பப்படும் ஆலயங்களும் நாவலர் ஆலயங்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களின் சின்னங்களே எனலாம்.

எது எவ்வாறு இருப்பினும் இன்று காணப்படும் ஆலயங்கள் பலவற்றுள்ளும் நாவலரால் கண்டிக்கப ் பட்ட விடயங்கள் திருத்தமடையாது தன்னிச்சையோடு நடைபெற்று வருவது சைவசமயிகள் பலரும் அறிந்தவொன்று. அவற்றுள் ஒன்றினை இங்கு குறிப்பிடலாம்.

"மூல மூர்த்தி அல்லாத கோயில் கோயிலாகாது. மூல மூர்த்தியாவது சிலை வடிவினதாய் அட்டபந்தனஞ் செய்யப்பெற்று அசைவில்லாதாய் உள்ள மூர்த்தி. இது அசல எனப்படும். இந்நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கற்பக் கிரகத்தினுள்ளே இருக்கிற மூர்த்தி வெள்ளி யினாலே செய்யப் பெற்றதாய் அபிஷேக முதலியவைகளின் பொருட்டுத் தன்னிடத்தினின்றும் பிறிதிடத்துக்குப் பெயர்வதாய் உள்ள சல மூர்த்தி இது மூர்த்தியாகுமா?"

(நல்லூர்க் கந்தசுவாமி கோயில்-முதலாம் பத்திரிகை)

எனும் நாவலர் கூற்று சைவசமயிகளால் மனங் கொள்ளப் பட வேண்டியதொன்றாகும்.

## நாவலரின் சமூகநோக்கு

சமயப்பணியினையும் சமுதாயப் பணியினையும் தனிமனிதரான நாவலர் தமது அஞ்சாமை, வீரம், நேர்மை, உழைப்பு, ஒழுக்கம், கல்வி, அறிவு ஆகிய உள்ளார்ந்த பண்புகளையும், தமது பொருள் முதலையும் மக்களின் ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பினார். ஆனாலும், ஈழத்து முற்போக்கு விமர்சகர்களி லொருவர் "இந்து மதத்தைப் பேண முயன்ற நாவலர் அச்சமுதாய அமைப்பையும் பேண முயன்றாரென்பதில் ஆச்சரியம் ஏற்படமுடியா தென்பர்" பிறிதோர் தமிழ் இலக்கிய விமர்சகர் "ஆறுமுகநாவலரின் பணியினை நோக்கும் போது அது சமயத்தின் நிலக்களத்தை உடையது என்பதை மனங்கொள்ளல் அவசியமாகின்றது" என்பர். சாதி அமைப்பைத் தகர்த்துச் செல்வாக்கும் அதிகாரமுள்ள புதிய மேன்மக்கள் கூட்டம் பலதுறைகளிலும் தோன்றியபொழுதும் அந்த மண்ணில் வர்ணாச்சிரம தர்மம் புதிய புரட்சிவாதிகளால் அடியோடு தகர்க்கப்பட்டு விட்டன என்று கூறுவதற்கில்லை. பிறப்பினால் உயர்வு - தாழ்வு கற்பிக்கும் சமூகவர்க்கம் இன்றும் இருந்துகொண்டே தான் இருக்கின்றது. உண்மையில் நாவலரின் சமூகம் பற்றிய கருத்து பின்வருமாறு அமையும்.

"சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தினுஞ் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி யுத்தி அநுபவ மூன்றுக்கும் முழுமையும் விரோதம், உலகத்துக்குச் சாதிபேதம் இருப்பது போலச் சற்சமயமாகிய சைவசமயத்திலும் முதற் சாதி, இரண்டாஞ் சாதி, மூன்றாஞ் சாதி, நாலாஞ்சாதி நீசசாதியெனச் சமயநடை பற்றி ஐந்து சாதி கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாத முறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சீவன் முத்தர் சிவமேயாவர் இனிச் சிவஞானிகள் முதற்சாதி, சிவயோகிகள் இரண்டாஞ் சாதி, சிவக்கிரியாவான்கள் மூன்றாஞ் சாதி, சிவசரியாவான்கள் நாலாஞ்சாதி, இந்நெறிகளில் வராதவர்கள் நீசசாதி."

தமிழ் உலகில் யாரும் சிந்திக்காத வகையில் தனக்கென புதிய சமூகம் பற்றிய புதிய பார்வையின் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தவர் நாவலர். இது நாவலருக்கு மாத்திரமல்ல அதுவே சைவர்களின் கோட்பாடாகவும் அமையும். நாவலரை உயர்குலப் பாதுகாவலனாகக் கொள்வதோ சாதிமானாகக் கருதுவதோ எத்தகைய பொருத்தமுடையது. சுத்த சைவன் ஒருவன் வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடுகள் பற்றிச் சிந்திக்கமாட்டான். சைவம் ஒருபொழுதும் வர்க்க நிலைப்பாடு பற்றிச் சிந்தித்ததில்லை. அது ஓர் ஆத்மாவின் பிறப்பு இறப்பற்ற முடிவுநிலைகளை அடையும் வழிகளைப்பற்றியே பெரிதும் பேசுகின்றது. நாவலர் வாழ்ந்த காலகட்டத்திலும் அறிவிற்குறைந்தோரால் சமூகமுரண்பாடுகள் பேணப்பட்டன, பேணப்படுகின்றன. இச்சமுதாயத்திலே சமூக மாற்றங்களை நாவலர் ஏற்படுத்த முற்படாமை பெருங்குறைபாடாக வலிந்து அவர் மேல் குற்றஞ் சுமத்துதல் பொருத்தமுடைய தன்று. மேலும், நாவலர் எந்த நிலையிலும் இந்து மதம்பற்றிய பேசியதில்லை. அவர் சைவம், சைவர்களின் மேம்பாட்டிற்காக உழைத்தார். ஆனாலும், வைணவம் பற்றி ஆங்காங்கே சில கருத்துக்களை உதிர்த்துள்ளார் என்பது இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும்.

நாவலரின் சமுதாயக் கோட்பாடுகள் பற்றி மனங்கொள்ளுவதற்கு, ஈழத்தின் முற்போக்கு விமர்சகர்களில் ஒருவரான திரு. சி. தில்லைநாதன் தரும் கருத்தினை இங்கு சுட்டிக் காட்டுதல் அவசிய மானதாகும்.

**எங்கெங்குஞ் செந்தமிழ்நா லெங்கெங்குஞ் சைவமத**
**மெங்கெங்கும் பக்திநெறி யேறியவே – யெங்கெங்கு**
**நண்ணியசீ ராறுமுக நாவலனல் லைப்பதிவா**
**ழண்ணலுளத் தின்கருணை யால்.**

- அ. சிவசம்புப் புலவர்

"சீர்திருத்தவாதிகள் எனப்படுவோர் பொதுவாக மரபுவழி அமைப்புக்களின் பெருமைகளைப் போற்றிச் சார்ந்து நின்று முன்னிலை மீட்புக்கு முயல்வார்களேயன்றிப் புதிய அடிப்படை மாறுதல்களுக்காகப் போராடுவதில்லை, முன்னைப் பெருமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலே நடைமுறையிற் கெட்டியாகி விட்ட பழக்கவழக்கங்களைக் களைய அவர்கள் முயற்சி மேற்கொள்வர்; முன்னைப் பெருமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஒழுகுபவர் களைக் கண்டித்துத் திருத்த எத்தனிப்பர். முன்னிருந்த நிலைக்கு இடையூறு நேராத வகையில் ஒழுகுவதற்கு அவசியமான விழுமியங்களைப் பொதுமக்களிடையே பரப்பவும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வர். முந்தியவற்றுக்கு முரணாகவும் அவற்றைப் பலவீனப்படுத்தும் வகையிலும் புதியன புகுமிடத்து இரண்டிற்குமிடையில் இணக்கம் காண்பதற்கும் பண்டையமைப்புக்குக் கேடு நேர்வதைத் தடுக்க அவசியமான சீர்திருத்தங்களை வலியுறுத்துவதற்கும் சீர்திருத்தவாதிகள் முன்வருவர்,"

முடிவாக நாவலரின் அடிப்படைநோக்கம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாக அமைகின்ற கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்பதேயாகும். கல்வி என்பதற்குத் தமிழ் கற்பித்தல் என்று பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாவலரின் பள்ளிக் கூடங்களில் வடமொழி, ஆங்கிலம், தமிழ் மொழி ஆகிய மொழிக்கல்வியும், பௌதீக நூல்கள், உலகியல் நூல்கள் முதலானவைகளும் கற்பிக்கப்பட்டன என்பதை மறத்தல் கூடாது.

நாவலர் தம் பணியினைத் தமிழ் மக்கள் எல்லோரும் சைவர்கள் என்ற கருத்தினை முழுமையாக மனங் கொண்டு, சாதி, சமய பேதங்களை மறந்து, அவரவர் தரங்களிலே இறங்கி அவர்களோடு கலந்து சமய, சமுதாயப் பணிகளை ஆற்ற விளைந்தார். அத்தகையதொரு நோக்கு, சைவசமய நிலை பேறுக்கும், சைவசமயக் கல்வி வளர்ச்சியின் துரிதத்திற்கும், சைவசித்தாந்தக் கோட்பாட்டின் பரம்பலுக்கும் சமூக ஒழுகளாற்றுக்கும், சுதேசியத்திற்கும், தேசிய ஒருமைபாட்டிற்கும் வழிவகுத்ததோடு, நாவலர் ஈழநாட்டின் தமிழர் சமுதாய சமய வரலாற்றில் "ஒரு நூற்றாண்டின் யுகபுருஷர்" என மக்கள் போற்றித் துதிக்கக் காலாக அமைந்திற்று எனலாம்.

**(கடந்த வருடம் (2008) நாவலர் நினைவு தினத்தையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்ட பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் அவர்களது "ஆறுமுகநாவலர் வரலாறு - ஒரு சுருக்கம்" என்ற நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது.)**

# நாவலர் பார்வையில் திருக்குறள்

*வி. லாவண்ணியா*

திருக்குறளைத் 'தமிழ் வேதம்' எனப் போற்றியவர் நாவலர் பெருமான்.

திருவள்ளுவரைத் 'தமிழ் வழங்கும் நிலமெங்கும் நல்லறிவுச் சுடர் கொழுத்திய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்' எனப் புகழ்ந்து கூறியவரும் நாவலர் அவர்களே!

திருக்குறளை பரிமேலழகர் உரையுடன் பிழையறப் பதிப்பித்த முதல்வர் என்ற சிறப்பு நாவலருக்கே உரியதாகும். தமிழகத்தில் தமிழ்ப் பேரறிஞராகத் திகழ்ந்த மறைமலையடிகள் தம் இளமைக் காலத்தே திருக்குறளைப் பயில்வதற்கு நாவலர் பதிப்பித்த உரையே பெருந்துணையாக அமைந்ததென்பதை நினைவு கூர்ந்துள்ளார்.

# நாவலரும் பைபிளும்

*கனக ஸ்ரீதரன்*

நல்லை நகர் ஆறுமுகநாவலர் அவர்கள் தனது பன்னிரண்டாவது வயதில் தமிழ்க் கல்வியை முடித்துக் கொண்டு ஆங்கிலக் கல்விக்காக யாழ்ப்பாணம் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்தார். ஆங்கில மொழி அறிவையும் அவர் மிக விரைவிலேயே கற்றுக்கொண்டார். அதனால் அப்பாடசாலையில் முதல்வராய் இருந்த சங்கைக்குரிய பீட்டர் பேர்சிவல் அவர்கள் நாவலரை ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும்படி கேட்டுக்கொண்டார். நாவலர் அவர்கள் கீழ் வகுப்புக்களுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புக்களுக்கு தமிழும் கற்பித்தார்.

இவருடைய ஆங்கிலப் புலமையை மெச்சிய பாதிரியார் விவிலிய நூலை மொழிபெயர்க்கும் பணியை நாவலரிடம் ஒப்படைத்தார். தனது சமய அனுட்டானங்களைச் செய்வதிலும், சைவசமய பிரசார வேலைகளைச் செய்யவும் தனக்கு சுதந்திரம் வேண்டும் என்ற நிபந்தனையுடன் வேலையை ஒப்புக் கொண்டார். நாவலரையன்றி வேறுயாரும் இப்பணியை திறம்படச் செய்ய மாட்டார்கள் என்பதை அறிந்த பாதிரியாரும் நிபந்தனையை ஏற்றுப் பொறுப்பை ஒப்படைத்தார்.

இம்மொழிபெயர்ப்புக்காக விவிலிய நூலைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்கு நாவலர் பெருமான் கிறிஸ்தவ நூல்கள் பலவற்றையும் படிக்கவேண்டியிருந்தது. மொழிபெயர்ப்பு வேலை முடிந்ததும் பேர்சிவல் பாதிரியார் நாவலரை அழைத்துக் கொண்டு சென்னைக்குச் சென்றார். அங்கே தமிழரைத் துரும்பாகப் பார்த்தார்கள். அங்கேயும் பண்டிதர் குழுவொன்று பைபிளை மொழிபெயர்த்து வைத்திருந்தது. எனவே இரு மொழிபெயர்ப்புகளும் ஒப்பு நோக்கப்பட்டன. அப்பொழுது பல இடங்களில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. எனவே இவ்விரண்டு மொழிபெயர்ப்புகளுள்ளும் சிறந்தது எது என்பதைத் தேர்ந்தெடுக்குமாறு சென்னையிலிருந்த அறிஞர் மழவை மகாலிங்கய்யர் அவர்களிடம் அவை ஒப்படைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத் தமிழே சிறந்தது என்று மகாலிங்கய்யர் சான்று வழங்கியதோடு மொழிபெயர்த்தவருடைய புலமையையும் பெரிதும் மனமுவந்து பாராட்டினார். மிஷனும் நாவலருடைய மொழிபெயர்ப்பையே ஏற்றுப் பிரசுரஞ் செய்தது.

இம்மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டதனால் நாவலர் கிறிஸ்துவமதக் கோட்பாடுகளையும் நன்கு தெரிந்து கொண்டார். பின்னாளில் சைவ சமயப் பிரசாரகராக அவர் ஆற்றிய பணிக்கு இது பெரிதும் பயனளித்தது.

நாவலர் செய்துள்ள தமிழ்ப் பணிகளுள் காலத்துக்கு ஏற்ற வகையிலே தமிழ் உரைநடையை வளரச் செய்வதற்கு அவர் கையாண்ட வழிவகைகள் பாராட்டற்குரியவை. நாவலரது உரைநடையிற் காணப்படும் சிறப்பியல்புகளை நன்கு ஆராய்ந்தறிந்தவர்கள் அவரை 'தற்கால உரைநடையின் தந்தை' என்றும், 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்றும் பாராட்டியுள்ளார்.

- பேராசிரியர் வி. செல்வநாயகம்

# பக்திரசம் ததும்பும் திருவெம்பாவைப் பாடல்கள்

எஸ். இளையதம்பி

வானம் அமுதைக் கொட்டும் மாரிப் பருவ காலத்தில் குளிரூட்டி உடலையும் உள்ளத்தையும் குளுகுளுக்க வைப்பதில் முனைந்து நிற்கும் மாதம்தான் மார்கழித் திங்கள். அதிலும் முக்கிய இடத்தை வகிக்கும் காலம் மார்கழி மாதத்தின் மையப் பகுதியான பத்து நாட்களுமாகும்.

குளுமையும் செழுமையும் கொண்டு எம்மைத் தாலாட்டித் தூங்க வைக்கும் இந்நாட்களில் சூரிய உதயத்திற்கு முன்னுள்ள விடியற் சாமத்தில் போர்வையுள் புகுந்து புலன்களை மறந்து பஞ்சு மஞ்சத்தில் படுத்துப் புரள்வதில் அனுபவிக்கும் ஆனந்தம் அளவிடற்கரியது. அவ்வாறான ஆனந்தத்திலும் மேலான ஆனந்தமே அவ்வேளையில் ஆலயம் சென்று எம்பெருமானான சிவனை நோக்கி அவன் புகழைப் பாடிப் பாடிப் போற்றி வணங்குவதில் கிடைக்கும் பேரானந்தம்.

ஆம், இவ்வாறான பேரானந்தத்தை வழங்கும் இக்காலமாகிய பத்துத் தினங்களுமே திருவெம்பாவைத் திருவிழாத் திருநாட்களாகும்.

உடற்குளுமையும் உள்ளக் குளுமையும் ஒன்றுபட்டு, ஒரு தனி முதல்வனான சிவபிரானை அன்புருகப் பாராட்டி வணங்குவதால் கிடைக்கும் பலன் அனேகமாகக் கன்னிப் பெண்களுக்கே கைகூடுகின்றது. மனதுக்கினிய மாசில்லா மணாளனை மணந்து இல்லற இன்பத்துக்கு வழிகாட்டும் பக்திமார்க்கமே திருவெம்பாவைத் திவ்விய விரதம். கூதலும் குளிரும் பற்றிப் பிடித்துப் பணயமாக வைத்துக் கொண்டிருக்கும் அவ்வேளையில் கன்னிப் பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து குளத்திலோ ஆற்றிலோ குடைந்து குடைந்து திருமுழுக்காடவேண்டும். அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆலயம் சென்று பரமனைப் பாடித் துதித்துப் பரவசமடைய வேண்டும் என்பதற்காக கன்னிப் பெண்கள் தோழிமாரின் வீடுகள் தோறும் சென்று படலையைத் தட்டி அவர்களைத் துயிலெழ வைத்து அழைத்துச் செல்வது போன்ற கற்பனைச் சிறப்பே திருவெம்பாவைப் பாசுரங்கள்.

தித்திக்கத் தித்திக்க திருவாசகம் பாடிய திருவாதவூரடிகளான மணிவாசகப் பெருமானாரின் பக்திப் பரவசத்திலிருந்து ஊற்றெடுத்துப் பெருகிவந்த பாடல்களே இத்திருவெம்பாவை.

ஒரு அழகான செம்பாட்டான் மாம்பழம் கையிலே இருந்து கண்ணைப் பறித்துக் கவர்ந்து கொண்டிருக்கின்றது. மஞ்சள் கலந்த இளம் சிவப்பு நிறத்தில் தோற்றமளிக்கும் வெளிப் பார்வையான தோலும் அக்கனியிலிருந்து வெளிப்படும் சுகந்தமான வாசனையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. எனினும் அவ்வழகான மாம்பழத்தோலின் போர்வையால் மூடப்பட்டிருக்கும் அதன் உள்ளீடான கனி ரசத்தைக் கடித்துச் சுவைக்கும்போதுதான் பழத்தின் முழுமையான சுவையை அனுபவித்து இன்புற முடியும். இது போலவே திருவெம்பாவைப் பாடலின் வெளிப்புறப் போர்வை இசை ஒலி என்பவற்றைக் கண்டு கேட்டு இன்புறும் ஆனந்தத்தை விட அப்பாடல்களின் உள்ளீடான பொருள் உணர்ந்து மகிழ்ந்து பரவசமடைதலே மேலான பேரானந்தமாகும்.

தில்லையுட்கூத்தன், அல்லல்பிறவி, சொல்லிய பாட்டின், செல்வர் சிவபுரத்தில், பல்லோரும் ஏத்த என்று சிவபுராணத்தை முடிக்கும் மாணிக்கவாசகர் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து செல்வர்" என்று எடுத்துக் கூறி முடித்தார். எனவே திருவெம்பாவைப் பாடல்களின் சொல் வடிவழகு, ஓசை ஒலியழகான இவற்றுடன் அப்பாடலுள் பொதிந்துள்ள பொருளையுணர்ந்து பாடுதல் சாலச் சிறந்த பயனையளிக்கும்.

*இந்தக் கட்டுரையை எழுதிய திரு. எஸ். இளையதம்பி மட்டக்களப்பு பெரிய கல்லாறு என்ற இடத்தைச் சேர்ந்தவர். பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய இவர், சில வருடங்களுக்கு முன்னர் காலமாகிவிட்டார். இந்து ஒளி சஞ்சிகையின் அபிமான வாசகரான மட்டக்களப்பு, பெரிய கல்லாறு - 3 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. பூ. யோகேந்திரன், அமரர் எஸ். இளையதம்பி அவர்களது கையெழுத்திலான மேற்படி கட்டுரையை இந்து ஒளி சஞ்சிகைக்காக அனுப்பி வைத்திருப்பதுடன், திருவெம்பாவை பாடல்களையும், அவற்றின் பொருளையும் இந்து ஒளியில் பிரசுரம் செய்வது நல்லது என்றும் எழுதியிருந்தார்.*

*திரு. பூ. யோகேந்திரன் இந்து ஒளி சஞ்சிகைமீது வைத்திருக்கும் பேரபிமானத்திற்கு நன்றி தெரிவிப்பதுடன், திருவெம்பாவை பாடல்களை அவற்றின் பொருள் விளக்கத்துடன் பிரசுரம் செய்வதில் "இந்து ஒளி" பெருமகிழ்ச்சியடைகிறது.*

நாவலர் தாம் மேற்கொண்ட சமயப் பணிக்கும், தமிழ்ப் பணிக்கும் இரண்டு சாதனங்கள் இன்றியமையாதன எனக் கண்டார். ஒன்று கல்விக்கூடம், மற்றொன்று அச்சுக்கூடம். சைவத்தையும் தமிழையும் வளர்த்தது போலவே அச்சுக் கலையையும் வளர்த்தவர். இலங்கையில் தமிழ் மக்களிடையே அச்சுத் தொழிலுக்கு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் நாவலர் விளங்குகிறார்.

– மெய்கண்டான் நா. இரத்தினசபாபதி

இலங்கையிற் தோன்றிய ஞானஞாயிறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். ஞாயிறு, தோன்றிய இடத்திற்கு மட்டும் ஒளியைத் தருவதன்று. உலகம் எங்கும் ஒளியையும் வெப்பத்தையும் தந்து வளர்ச்சியையும் அளிக்கும். அதுபோலவே, இந்த ஞான ஞாயிறும் இலங்கையில் நல்லூரிலே தோன்றினாலும் தமிழகம் எங்கும் ஒளியை வீசிற்று; வெப்பத்தைத் தந்தது; ஞானப்பயிரை வளர்த்தது.

– சித்தாந்தப் பேராசிரியர் ச. தண்டபாணி தேசிகர்



# மாணிக்கவாசக சுவாமிகள்

## திருவண்ணாமலையில் அருளிய

# திருவெம்பாவை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய் ! 1

ஒளி பொருந்திய அகன்ற கண்களையுடைய பெண்ணே! தோற்றமும் இறுதியும் இல்லாதவன் சிவபெருமான்; அரிய பேரொளியானவன். அவனைப் பாடுகின்றோம்; அந்தப் பாடலைக் கேட்டபின்னும் நீ உறங்குகின்றாயோ? உன் செவி என்ன, கேளாத வன்செவியா? தேவதேவனை, கழலணிந்த அவன் திருவடிகளை நாங்கள் வாழ்த்துகின்ற ஒலி வீதியெல்லாம் நிறைந்தது. இதைக் கேட்ட ஒருத்தி பக்தி மேலிட்டால் விம்மி விம்மி மெய்ம்மறந்தாள்; மலர்ப் படுக்கையிலிருந்து புரண்டு விழுந்தாள்; எதற்கும் பயன்படாதவள் போல் நினைவற்றுக் கிடக்கிறாள்! அவள் அல்லவா இறைவனிடம் அன்புடையவள்! எங்கள் தோழியாகிய நீயோ உறங்குகின்றாய். என்னே உன் தன்மை!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர் !
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசுமிடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்! 2

சிறந்த அணிகலன்களையுடைய பெண்ணே! இரவும் பகலும் நாம் பேசும்போதெல்லாம் "பாசும் கடந்து நிற்கின்ற ஒளி வடிவின னாகிய இறைவனுக்கே என் அன்பு" என்று சொல்லுவாய்! அந்த அன்பை இந்த மலர்ப் படுக்கையின் மீது எப்போது வைத்தாய் (என்று வந்தவள் கேட்க, படுத்திருக்கும் பெண் சொல்கிறாள்) சிறந்த அணிகலன்களை நான் மட்டும் அணிந்திருக்கவில்லை! நீங்களும்தான் அணிந் திருக்கிறீர்கள், தோழிகளே! சீ, சீ! நீங்கள் பேசிய இவை கொஞ்சமா? விளையாடி ஏசிக் கொள்ளும் இடம் இதுவா? (இதற்குப் பதிலாக வந்தவள் சொல்கிறாள்) தேவர்களும் வணங்குதற்கு அரியதாகி, அவர்கள் தங்கள் நிலைமைக்கு இரங்கிக் கூச்சப்படுகின்றவாறு உள்ளவை அவன் திருவடிகள். ஒளிமயமான அவன், அந்தத் திருவடிகள் இந்த மண்ணில் படும்படி வந்தருளி நாம் காணுமாறு தந்தருள்வான். அவன் சிவலோகன், திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருப்பவன். நாம் யார்? அவன் அடிமைகளே!

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ! ஈசன் பழ அடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் !3

முத்தினைப் போன்ற வெண்மையான பற்களை உடையவளே! முன்பெல்லாம் நீ, எங்களுக்கு முன் எழுந்து எங்கள் எதிரே வந்து "என் அப்பனே! ஆனந்தனே! அமுதனே!" என்று வாயூறி இனிக்க இறைவனைப் புகழ்வாய்! எழுந்து வந்து உன் வாசற் கதவைத் திற! (என்று வந்தவள் சொல்ல, படுத்திருப்பவள் சொல்கிறாள்) நீங்கள் இறைவனிடம் பற்றுடையவர்கள்; இறைவனுடைய பழைய அடியார்கள்; அவனைப் புகழும் முறைமை பெற்றவர்கள். நான் புதிய அடிமை! உங்கள் பெருமையால் என்னுடைய சிறுமையை நீக்கி ஆட்கொள்ளலாகாதோ? (இதற்குப் பதிலாக வந்தவள் சொல்கிறாள்) உன் அன்புடைமை எங்களுக்குத் தெரியாதா? அதை எல்லோரும் அறிவோம். அழகிய மனமுடையவர்கள் நம் சிவபெருமானைப் பாடாமலிருப்பரோ? உன்னை எழுப்ப வந்தோமே நாங்கள், எங்களுக்கு இவ்வளவு பேச்சும் வேண்டியதுதான்!

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் !4

ஒளி பொருந்திய முத்தினைப் போன்ற பற்களை உடையவளே! இன்னும் பொழுது விடியவில்லையா? (என்று வந்தவள் கேட்க படுத்திருப்பவள்) அழகிய கிளிபோல பேசும் நம் தோழியர் அனைவரும் வந்துவிட்டனரோ? (எனக் கேட்டதற்கு வந்தவள் சொல்கிறாள்) எண்ணிப் பார்த்து உள்ளபடி சொல்கின்றோம்; ஆனால் நேரமாகும். அதுவரையும் கண் உறங்கிக் காலத்தை வீணாக்காதே! தேவர்களுக்கு ஒப்பற்ற அமுதமானவனை, மறைகள் பேசுகின்ற மேலான பொருளை, கண்களுக்கு இனியவனைப் பாடி மனம் கசிந்து, உள்ளம் உடைந்து நின்று உருகுகின்றோம். ஆதலால் நாங்கள் எண்ணிக் கூற இயலாதவர் களானோம். நீயே வந்து எண்ணிக்கொள்! எண்ணிக்கை குறைந்தால் மீண்டும் போய் உறங்கு!

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் ! 5

இறைவன் எல்லையற்ற அருள்மலை; அந்த மலை திருமாலால் அறிய முடியாதது; நான்முகனால் காண இயலாதது. அந்த மலையை நாம் அறிந்துவிட முடியும் என்பதுபோல் மற்றவர்கள் நம்பும்படியான பொய்யை, பாலும் தேனும் ஒழுகப் பேசிய வாயினையுடைய வஞ்சகியே! வாசல் கதவைத் திற! இறைவன் மண்ணுலகினராலும், விண்ணுலகினராலும், பிற

உலகினராலும் காணுதற்கு அருமை யானவன், அவனுடைய திருக்கோலத்தையும், எளியவர்களாகிய நம்மை ஆட்கொண்டு அருளிச் சீராட்டுகின்ற, எளிவந்த பெருங் குணத்தையும் பாடுகின்றோம்; "சிவனே! சிவனே!" என்று உரக்கப் பாடுகின்றோம். இந்த ஒலி கேட்டும் நீ உணர்ந்தாயில்லை! உணர்ந்து விழித்தாயில்லை! மணம் பொருந்திய கூந்தலை உடையவளே! இதுதான் உன் தன்மை போலும்!

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய் ! 6

மான்விழி போன்ற மருட்சியுடைய விழிகளையுடையவளே! "நாளைக்கு நானே வந்து உங்களையெல்லாம் எழுப்புவேன்" என்று நேற்று நீ சொன்னாயே! உனக்கு வெட்கமில்லையா? அந்தச் சொல், எந்தத் திசையில் போயிற்று என்பதைச் சொல்! இன்னும் பொழுது விடியவில்லையா? வானுலகத்தாரும் நிலவுலகத்தாரும் பிறவுலகத்தாரும் அறிதற்கரியவன் இறைவன். அவனுடைய மேலான கழலணிந்த திருவடிகள் எளியவர்களாகிய நமக்குத் தானாகவே வந்து நமைக் காத்து ஆட்கொண்டு அருள்வன. அந்தத் திருவடிகளைப் பாடிவந்த எங்களிடம் வாய் திறந்து பேசினாயில்லை; உன் உடல் உருகினாயில்லை. உனக்குத் தான் இந்நிலை பொருந்தும். எங்களுக்கும் மற்றவர்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானைப் பாடுவாயாக!

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் ! 7

தாயே! நாங்கள் இதுகாறும் கூறியவை கொஞ்சமோ? இறைவன், தேவர்கள் பலராலும் நினைத்துப் பார்க்கவும் அரியவன்; ஒப்பற்றவன்; பெரும் புகழுடையவன். விடியற் காலத்தில் அவனுடைய திருச்சின்னமாகிய இசைக்கருவிகளின் ஒலிகேட்ட அப்பொழுதே "சிவ சிவ" என்று வாய் திறப்பாயே! "தென்னா!" என்று அவன் திருப்பெயரைச் சொல்லும் முன்பே தீயை நெருங்கிய மெழுகுபோல் உள்ளம் உருகுவாயே! அத்தகைய நீ, நாங்கள் எல்லாரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் "என் தலைவனே! என் அரசனே! இனிய அமுதனே!" என்று சொல்வதைக் கேட்ட பின்னும் உறங்குகின்றாயே! இரக்கமற்ற நெஞ்சமுடைய அறிவிலி போல் வாளாக் கிடக்கின்றாயே! உன் உறக்கத்தின் தன்மை தான் என்னே!

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் ! 8

கோழி கூவ, எங்கும் சிறு பறவைகள் ஒலிக்கின்றன; நாதசுரம் ஒலிக்க, எங்கும் வெண்சங்குகள் ஒலிக்கின்றன. நாங்கள் தனக்குவமையில்லாப் பேரொளியை, ஒப்பற்ற பேரருளை, மேலொன்றில்லாத மெய்ப்பொருளைப் பாடினோம். உனக்குக் கேட்கவில்லையா? வாழ்வாயாக! உன் உறக்கம்தான் எப்படிப்பட்டதோ? வாய்திறந்து ஒரு வார்த்தை சொல். அருட்பெருங் கடலாகிய எம்பெருமானுக்கு அன்பு செய்யும் முறை இப்படித்தானோ? ஊழிக்காலத்தில் தனி முதல்வனாய்த் திகழும் ஒப்பற்ற தலைவனை, உமையொரு பாகனையே பாடுவாயாக!

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய் ! 9

முன்னே தோன்றிய பழமையான எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்டிருக்கும் பழமையான மூலப்பொருளே! அவ்வாறே, பின்னே தோன்றும் புதுமைகளுக்கெல்லாம் புதுமையாக மீண்டும் தோன்றும் தன்மையனே! உன்னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள், உன் சிறந்த அடியார்களானோம். ஆதலால், உன் தொண்டர்களின் திருவடிகளை வணங்குவோம்; அங்ஙனமே அவர்களுக்கே உரிமையுடையவர்களாவோம்; அவர்களே எங்கள் கணவர்கள் ஆவர். அவர்கள் விரும்பிக் கூறும் முறையிலேயே அடிமையாகிப் பணி செய்வோம். எங்கள் தலைவனே! இந்த வகையான வாழ்க்கையையே எங்களுக்கு நீ வழங்குவாயானால், எந்தக் குறையும் இல்லாதவர்களாவோம்!

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்! 10

சிவபெருமான் திருக்கோயிலைச் சார்ந்து வாழும் குற்றமற்ற குலத்தில் தோன்றிய கோயிற் பணிப்பெண்களே! பாதாளம் ஏழுக்கும் கீழே, சொற்களைக் கடந்த எல்லையில் உள்ளன. இறைவன் திருவடி மலர்கள், மலர்கள் நிறையச் சூடிய அவன் திருமுடி, எல்லாப் பொருள்களும் கீழ்ப்பட மேற்பட்டுள்ளது. அவன் உமையை ஒரு பாகத்தில் உடையவன்; அதனால் ஒரே திருமேனியுடையவனல்லன். அவன் மறைகளுக்கு முதல்வன்; விண்ணகத்தாரும், மண்ணகத்தாரும் அளவிறந்த காலமாக எந்தெந்த முறையில் பரவிப் புகழ்ந்தாலும், வரையறுத்துப் புகழ முடியாத உயிர்த்துணைவன்; தொண்டர்கள் உள்ளத்தில் உறைபவன்! அவன் ஊர் யாது? அவன் பேர் யாது? அவனுக்கு உறவினர் யார்? அயலார் யார்? அவனைப் பாடும் தன்மை எப்படி? கூறுவீர்களாக!

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் ! 11

நெருப்பைப் போன்ற செம்மை நிறமுடைய சிவபெருமானே! வெண்மையையுடைய திருநீற்றை அணிந்தவனே! எல்லாச் செல்வங்களையும் உடையவனே! சிறிய இடையினையும் மைதீட்டிய அகன்ற கண்களையும் உடைய உமாதேவியின் மணாளனே! ஐயனே! வழிவழியடிமைகளாகிய நாங்கள், வண்டுகள் மொய்க்கின்ற அகன்ற பொய்கையிலே "முகேர்" என்று மூழ்கிக் கைகளால் நீரைக் குடைந்து குடைந்து, கழலணிந்த உன் திருவடிகளைப் புகழ்ந்து பாடி, வாழ்ந்தோம். எங்கள் தலைவனே! நீ ஆட்கொண்டு அருளும் திருவிளையாடலின் வழிப்பட்ட அடியார்கள் செல்லும் நெறியெல்லாம் நாங்களும் சென்று முடித்தோம். நாங்கள் இளைத்துவிடாமல் காப்பாயாக!

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய் ! 12

நன்மை செய்யும் தில்லைச் சிற்றம்பலத்திலே, ஒரு திருக்கரத்தில் தீயை ஏந்தி ஆடுகின்றான் கூத்தப் பெருமான். நம்மைப் பிணித்துள்ள பிறவித் துன்பம் கெடும்படி, நாம் மகிழ்ச்சியுடன் துள்ளி ஆடுதற்குரிய ('மொய்யார் தடம் பொய்கை' என்ற) தீர்த்த வடிவமாக அவன் விளங்குகின்றான். அவன் இந்நிலவுலகத்தை யும், வானத்தையும், நம் எல்லோரையும் படைத்தும், காத்தும், அழித்தும் விளையாடுகின்றவன். (ஐந்தொழிலும் விளையாட்டே) அந்தப் பெருமானுடைய பொருள்சேர் புகழைப் பேசிக்கொண்டு, கை வளையல்கள் ஒலிக்கவும், இடையில் அணிந்துள்ள மேகலைகளின் ஒலி துள்ளவும், மலர்கள் சூடிய கூந்தலின் மேல் வண்டுகள் ஒலிக்கவும், தாமரை பூத்த பொய்கை நீரைக் குடைந்து, நம்மை உரிமையாகவுடைய தலைவனது பொன் போன்ற திருவடிகளைத் துதித்துப் பெரிய சுனைநீரில் நாம் ஆடுவோமாக!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!13

பசுமையான கரிய குவளை மலராலும் சிவந்த தாமரை அழகு மலராலும், அழகிய நீர்ப்பறவைக் கூட்டங்களாலும், மேலும் பாம்புகளாலும் தமது அழுக்கைப் போக்க விரும்புவோர் அங்கு சேர்தலினாலும், எங்கள் தலைவி உமாதேவியாரையும் எங்கள் தலைவன் சிவபெருமானையும் ஒத்திருக்கும் நீர் நிறைந்த பொய்கையில் புகுந்து பாய்ந்து, பாய்ந்து எமது சங்கு வளையல்கள் ஒலிக்கவும், சிலம்புகள் வளையல்களின் ஒலியோடு கலந்து சத்தம் செய்யவும், மார்புகள் குலுங்கவும், முழுகும் நீர் மேலெழவும், தாமரை நிறைந்த அழகிய நீரில் குதித்து நீராடுவோமாக!

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14

பெண்களே! நம் செவிகளில் அணிந்த தோடுகள் ஆட, உடம்பில் அணிந்த பசும் பொற்கலன்கள் ஆட, கூந்தலாட, அக் கூந்தலிற் சூடிய மலர் மாலைகள் ஆட, அந்த மாலைகளில் மொய்க்கின்ற வண்டின் கூட்டம் எழுந்து ஆடக் குளிர்ந்த நீரில் மூழ்குவோம்! எம்பெருமான் ஆடும் திருச்சிற்றம்பலத்தைப் பாடி, மறைப் பொருளைப் பாடி, அம்மறைப் பொருள் ஆமாறு (ஆம் வண்ணம்) பாடி, முச்சுடர்க்கும் ஒளி வழங்கும் ஒளியாகிய இறைவன் திறங்களைப் பாடி, அவன் திருமுடியைச் சூழ்ந்துள்ள கொன்றை மாலையைப் பாடி, அவன் எல்லாப் பொருளுக்கும் இறைவனாய் விளங்கும் முதன்மையையும் (அவனது முழு முதன்மையையும்) முடிவிலா முடிவையும் பாடி, ஏனைய உயிர்களினும் நம்மை வேறுபடுத்திச் சிறப்புற வைத்து மேல் நிலையில் வைத்து அருள்கின்ற, வளையல்கள் அணிந்த திருக்கரங்களையுடைய இறைவியின் திருவடிச் சிறப்பையும் பாடி நீராடுவோமாக!

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 15

கச்சு உருவுமாறு அழகிய அணிகலன்களைப் பூண்ட மார்பினை யுடைய பெண்களே! இவள் ஒவ்வொரு காலத்தும் "எம்பெருமானே! எம்பெருமானே! என்று வாய் ஓயாது அரற்றுகிறாள்; ஒரு சமயம் நம் மகாதேவன் சீரை, வாய் ஓயாமல் பேசுகிறாள். அதனால் ஏற்பட்ட மனமகிழ்ச்சியால் அவள் கண்கள் அருவியைப்போல் நீரைச் சுரக்கின்றன. நிலத்தில் விழுந்து இறைவனை வணங்கியவள் அப்படியே தன்னை மறந்து கிடக்கிறாள்; மற்ற தேவர்களை இவள் வணங்கவே மாட்டாள். பேரரசனாகிய இறைவனுக்குப் பித்தாகும் தன்மை இப்படித்தான் போலும்! இவ்வண்ணம் ஆட்கொள்ளும் அந்த ஒருவர் யார்? ஞானமே வடிவமான இறைவனே அவன்! அவன் திருவடிகளை வாயாரப் பாடி அழகே வடிவமான மலர்கள் நிறைந்த நீரில் பாய்ந்து ஆடுவோமாக! (பேரரையன் – பேரரசன்)

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!16

மேகமே! நீ கடலினை நெருங்கி அதன் நீரை முகந்து அக்கடலைக் குறைத்து, எங்களை ஆளாக உடையவளாகிய உமாதேவியின் சிற்றிடையைப்போல மின்னிப் பொலிவுற்று, எம்பெருமாட்டியின் திருவடிகளில் அணியப்பெற்ற பொற்சிலம்பைப் போலச் சிலம்பி, திருப்புருவம் எனும்படி வானவில் குலவி நம்மையெல்லாம் அடிமையாக உடைய எம்பெருமாட்டியை விட்டுப் பிரியாத எம்பெருமான் அன்பர்களுக்கும் அருள முற்பட்டவள். நமக்கும் முந்தி வந்து நெருங்கிச் சொரிகின்ற அன்னையின் இனிய அருளைப் போலப் பொழிவாயாக!

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் !17

மணம் பொருந்திய கூந்தலை உடையவளே! திருமால், நான்முகன், தேவர்கள் ஆகியவரிடத்தும், வேறு எங்கும் இல்லாத இன்பம் நம்மிடத்ததாக அவன் நம்மைக் குற்றங்கள் நீக்கிக் குணம் கொண்டு கோதாட்டுவான். இவ்வுலகில் நம் வீடுகள்தோறும் எழுந்தருளி வந்து, தன்னுடைய செந்தாமரை போன்ற பொன் மயமான திருவடிகளை வழங்கியருளினான். அந்தச் சேவகனை, அருள் கனிந்த கண்களையுடைய அரசனை, அடிமைகளாகிய நமக்குத் தெவிட்டாத தெளிந்த அமுதமானவனை, நம்முடைய சிவபெருமானைப் பாடி மங்களம் பெருகி விளங்கத் தாமரை மலர்கள் நிறைந்த நீரில் பாய்ந்து ஆடுவோமாக!

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 18

பெண்ணே! திருவண்ணாமலையில் இறைவன் பேரொளிப் பிழம்பாக இருக்கின்றான். அவன் திருவடித் தாமரையில் விழுந்து தேவர்கள் வணங்கும்போது அவர்களுடைய மகுடங்களில் பதிக்கப்பெற்றுள்ள பலவகை இரத்தினங்களின் தொகை, இறைவன் திருவடிப் பேரொளியின் முன் ஒளியிழந்து வீறு அற்று விடுகின்றன. அவைபோல இருள் நீங்கும்படி கதிரவன் எழுந்ததும் விண்மீன்கள் ஒளியிழந்து மறைந்து விட்டன. பொழுது விடிந்து விட்டது. இறைவன் பெண், ஆண், அலி மூன்றுமானவன்; ஒளிதரும் கதிரவனும் மதியும், சுடர்களும் பொருந்திய வானமானவன்; மண் ஆனவன்; இவற்றுக்கு வேறாக உள்ள அனைத்துமானவன். அவன் நம் கண்முன்னே காட்சி தரும் நிறைந்த அமுதமாகி நின்றான். அவனுடைய திருவடிகளைப் பாடி மலர் நிறைந்து விளங்கும் இந்த நீரிலே பாய்ந்து ஆடுவோமாக!

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் !19

எங்கள் பெருமானே! "உன் கையில் உள்ள பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்ற சொல் பழமையானது. அந்தச் சொல்லைப் புதுப்பித்துக் கூற வேண்டிய அச்சம் எங்களுக்குத் தோன்றி யிருக்கிறது. உனக்கு ஒரு விண்ணப்பம் சொல்கின்றோம். அதனைக் கேட்டு அருள்! எங்கள் கொங்கைகள் உன் அன்பர் அல்லாதார் தோளைத் தழுவாதொழிக. எங்கள் கைகள் உனக்கு அல்லாமல் வேறு எந்தப் பணிகளையும் செய்யாதொழிக. எங்கள் கண்கள் இரவும் பகலும் வேறொன்றையும் காணாதொழிக. எங்கள் தலைவனாகிய நீ, எங்களுக்கு இந்தவண்ணம் இங்கு அருள்புரிந்தாயானால், கதிரவன் எத்திசையில் உதித்தாலும் எங்களுக்கென்ன குறை?

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய் !20

இறைவா! எம்மைப் பாதுகாத்து உன்னுடைய தொடக்கமான திருவடி மலர்களை அருள்வாயாக! எம்மைப் பாதுகாத்து உன்னுடைய முடிவான சிவந்த தளிர்போன்ற திருவடிகளை அருளுவாயாக! எல்லா உயிர்களும் தோன்றுவதற்குக் காரணமான பொன் போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க! எல்லா உயிர்களும் அனுபவிக்கக் காரணமான அழகிய திருவடிகள் எமைக் காத்தருள்க! எல்லா உயிர்களுக்கும் முடிவான இரண்டு திருவடிகளும் எம்மைக் காத்தருள்க! திருமாலும் பிரமனும் காணமுடியாத தாமரைத் திருவடிகள் எம்மைக் காத்தருள்க! நாம் உய்ய அடிமைகொண்டு அருள்செய்யும் பொன்போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க! நாம் நீராடும் மார்கழி நீர் எம்மைப் பாதுகாத்தருள்க!

ஆறுமுகநாவலர் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அன்னை யாகவும், பிதாவாகவும் இருக்கின்றார். தமிழ் அறிவை வளரச் செய்தலால் அவர் நமக்கெல்லாம் அன்னை; சமய அறிவை வளரச் செய்தலால் அவர் பிதா. அன்னையும் பிதாவுமான நாவலர் பெருமானை நாம் மறக்கலாகாது. நாவலர் சரித்திரத்தை நாங்கள் படிக்கவேண்டும். நாவலர் பெருமான் தந்த பெரிய புராண வசனம் சமய பக்தியை வளர்ப்பதொரு பண்டசாலை. அந்தப் பண்டசாலையில் பிரவேசிப்பதற்கு நாவலர் சரித்திரம் உபகாரமாயிருக்கும்.

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 1979ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட "ஆறுமுகநாவலர்" என்ற நூலிலிருந்து)

ஆறுமுகநாவலர் தமிழகத்திலே 'நாவலர்' என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். தமிழகத்திலே யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்று நிலைநாட்டியும், சைவப் பிரசங்கமாரி பொழிந்து சைவப் பயிரை வளர்த்தும், சைவ ஆதீனங்களிற் பலருக்குச் சமய அறிவும் தமிழறிவும் ஊட்டியும், அவ்வாதீனங்களைச் சைவப் பணியிலும் தமிழ்த் தொண்டாலும் வழிநடத்தியும், சிவநிந்தனையையும் போலிக் கொள்கைகளையும் நீக்கியும், சிதம்பரத்திலுள்ள சைவ வித்தியாசாலை மூலம் தமிழ்க் கல்வியைச் சமய அடிப்படையில் வளர்த்தும், நாவலர் பதிப்பு என்று எவரும் மதிப்புக் கொடுக்கக்கூடிய முறையில் நூல்களை பிரசுரித்தும் தமிழகத்தை ஈழநாட்டிற்குக் கடமைப்படுத்தியிருக்கின்றார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்.

- பேராசிரியர் சு. வித்தியானந்தன்

# மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் அருளிய திருப்பள்ளியெழுச்சி

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே புலர்ந்தது
பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

என் வாழ்விற்கு மூலப்பொருளே! வணக்கம்! சேற்றில் நின்று தாமரைகள் இதழ் விரிக்கும் குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் அமர்ந்த சிவபெருமானே! உயர்த்திய எருதுக்கொடியுடையவனே! என்னை அடிமையாக உடையவனே! எம்பெருமானே வணக்கம்! பொழுது விடிந்தது. உன் அழகிய திருவடிகள் இரண்டுக்கும் ஒன்றற்கொன்று ஒத்த மலர் கொண்டு தூவினோம்; எங்களுக்கு அருள்புரியும் பொருட்டு உன் திருமுகத்தில் மலரும் அழகிய புன்னகையை எங்கள் உள்ளத்தில் நிறுத்தி, உன்னுடைய திருவடியை வணங்குகின்றோம். துயில் நீங்கி எழுந்தருள்வாயாக.

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலர மற்றண்ணல ங்கண்ணாம்
திரல்நிரை அறுபதம் முரல்வற இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளியெழுந் தருளாயே.

திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! திருவருட் செல்வத்தை வழங்கவரும் இன்ப மலையே! அலைகடலே! அருணோதயம் கிழக்கில் அணுகிற்று. இருள் அகன்று போயிற்று. உன் திருமுகம் ஆன உதயகிரியில் உன் கருணையாகிய சூரியன் மேலே எழுந்தோறும் அண்ணலாகிய தேனை நாடும் (அடியார்களாகிய) வண்டுகளின் திரள்கள் முறையே தோத்திர முழக்கம் செய்கின்றன. இவற்றை உணர். திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமானே, அருளாகிய செல்வத்தைத் தருகின்ற ஆனந்த மலையே! அலைகடலன்ன கருணையே! துயில் நீங்கி எழுந்தருள்வாயாக!

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பினசங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற்செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்
எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே.

மகாதேவா! திருப்பெருந்துறையுறை சிவபெருமானே! எவராலும் அறிதற்கு அரியவனே! எங்களுக்கு அறிந்து அனுபவித்தற்கு எளிமையானவனே! அழகிய குயில்கள் கூவின; கோழிகள் கூவின; பறவைகள் ஒலித்தன; சங்குகள் முழங்கின; விண்மீன்கள் ஒளி குன்றின. உதயக் கதிரொளி தோன்றுகிறது. எம்பெருமானே, துயில் நீங்கி எழுந்தருள்வாயாக! திருவுள்ளத்தில், விருப்பம் கொண்டு எங்களுக்கு நல்ல வீரக்கழல் அணிந்த உன் திருவடி இரண்டினையும் காட்டுவாயாக!

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயல்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே.

திருப்பெருந்துறையுறை சிவபெருமானே! இனிமையான இசையைப் பொழிந்து கொண்டிருக்கும் வீணையுடையவர்களும், யாழினை உடையவர்களும் ஒரு பக்கம்; வேத மந்திரங்களுடன் துதிப்பாடல்களையும் ஓதிக் கொண்டிருப்பவர்கள் ஒருபக்கம்; நெருங்கத் தொடுக்கப்பட்ட மலர்மாலைகளை ஏந்திய கையுடையவர்கள் ஒருபக்கம்; தலைவணங்கித் தொழுபவர்களும், அன்பு மேலீட்டால் அழுபவர்களும், மெய்ம்மறந்து துவள்பவர்களும் ஒருபக்கம்; தலையின்மீது இரு கைகள் குவித்து அஞ்சலி செய்பவர்கள் ஒருபக்கம்; இவ்வாறு அடியார்கள் உன் திருச்சந்நிதியில் விளங்குகின்றனர். ஒரு தகுதியும் இல்லாத அடியேனையும் ஆட்கொண்டு இனிய அருள் வழங்கும் எம்பெருமானே! துயில் நீங்கி அருள்வாயாக!

பூதங்க டோறு நின் றாய் எனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம் பெருமான் பள்ளியெழுந் தருளாயே.

குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் அரசனே! உன்னை ஞானியர்கள், பூதங்கள் எல்லாவற்றிலும் கலந்து நிற்கின்றாய் என்கின்றனர்; அதுமட்டுமல்லாமல் பிறப்பில்லாதவன் இறப்பில்லாதவன் என்று இசைப்பாடல்கள் பாடுகின்றனர்; ஆடுகின்றனர். ஆனால், உன்னை நேரே கண்டு அறிந்தவர்களை நாங்கள் காதால் கேட்டும் அறிந்திலோம். நீ, சிந்தனைக்கும் எட்டாதவனாய் நிற்கின்றாய்! எங்கள் கண்முன்னே வந்து திருக்காட்சி வழங்கி எங்கள் குற்றங்களையெல்லாம் நீக்கி எங்களை அடிமையாக ஏற்று அருள்செய்கின்ற எம்பெருமானே! துயில் நீங்கி அருள்வாயாக!

பப்பற வீட்டிருந் துணரும் நின்னடியார்
பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானிடத்தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்புறு கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே.

உமாதேவியின் மணவாளா! செம்மை நிறம் பொருந்திய தாமரை மலர்கின்ற குளுமையான வயல்கள் சூழ்ந்த திருப்பெருந் துறையிலே எழுந்தருளியுள்ள பெருமானே! பரபரப்பை அறவே விட்டு உட்காட்சியில் உன்னையே கண்டுணரும் மெய்ஞ்ஞானியர் பலரும், இந்த மண்ணுலகிற்கு வந்து பாசக்கட்டுக்களை அறுத்தவர் பலரும், மனித இயல்பிலே நின்று மைதீட்டிய கண்களையுடைய தலைவியர் போல உன்னைத் தலைவனாகக் கொண்டு வணங்குகின்றனர். இந்தப் பிறவியை நீக்கி எங்களை ஆட்கொண்டு அருள் புரியும் எம்பெருமானே! துயில் நீங்கி எழுந்தருள்வாயாக!

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில் திரு உத்தரகோச
மங்கையுள்ளாய் திருப்பெருந் துறையுறை மன்னா
எது எமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே

தேன்சொரியும் மலர்ச்சோலை சூழ்ந்த திருவுத்தரகோச மங்கைத் திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவனே! திருப்பெருந் துறை அரசே! உன் தன்மையாகிய அது பழச்சுவை எனவும், அமுதம் எனவும், அறிந்து கொள்ள முடியாதது எனவும், அறிந்து கொள்ள எளிமையானது எனவும் தேவர்களும் அறியமாட்டார்கள். ஆனால், "இதுவே அவனுடைய திருவுருவம், இவனே அந்தச் சிவபெருமான்" என்று நாங்கள் சுட்டிக்காட்டிச் சொல்லும்படி எளிவந்த கருணையுடன் எங்களை அடிமையாக ஏற்றுக்கொண்டு இந்த மண்ணிலே எழுந்தருள்வாய்! நீ எங்களை ஏவல் கொள்ளும் முறைமை எது? அந்த முறைமையைக் கேட்டு அவ்வாறே ஒழுகுவோம்! எம்பெருமானே! துயில் நீங்கி எழுந்தருள்வாயாக!

முந்திய முதல்நாடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்
ஆரமுதே பள்ளியெழுந் தருளாயே.

எங்கும் நிறைந்த அமுதமே! அனைத்துக்கும் முற்பட்ட முதலும், நடுவும், முடிவும் ஆனவனே! பிரமன், திருமால் உருத்திரன் ஆகிய மூவரும் உன்னை அறிய முடிந்தவர் அல்லர். வேறு யார் அறிவர்? இத்தகைய அருமையுடைய நீ, பந்து வந்து அணைகின்ற விரல்களையுடைய உமாதேவியொடும், உன் அடியவர்களின் பழைய குடிசைதோறும் எழுந்தருளியிருக்கிறாய்! பரம்பொருளே! சிவந்த தழல் போன்ற உன் திருமேனிக் காட்சி தந்து, திருப்பெருந்துறையில் நீ அமர்ந்த திருக்கோயிலையும் காட்டி, என் குருமூர்த்தியாக அந்தண வேடத்தையும் காட்டி, வலிய வந்து, என்னை அடிமையாக ஏற்றாய்! துயில் நீங்கி எழுந்தருள்வாயாக!

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உனதொழும்படி யோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண்திருப் பெருந்துறை யுறைவாய் வழியடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும் படியார்
எண்ணகத்தாய் உலகுக்குயி ரானாய்
எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே.

வானுலகில் உள்ள தேவர்களும் நெருங்கவும் முடியாத மேலான மெய்ப்பொருளே! இந்த மண்ணுலகில் வந்து, உன்னுடைய அடிமைகளாகிய எங்களை வாழச் செய்தவனே! வளம் நிறைந்த திருப்பெருந்துறையில் அமர்ந்தவனே! பரம்பரை அடிமைகளாகிய எங்களுடைய கண்களுக்குள்ளே நின்று, காணும் பொருளில் எல்லாம் நின் வடிவம் காட்டிக் களிப்பை வழங்கித் தித்திக்கின்ற தேனே! பாற்கடலில் தோன்றிய அமுதமே! நெஞ்சில் இனிக்கும் கரும்பே! அன்பு செய்யும் தொண்டர்களின் எண்ணத்துள் நிறைந்தவனே! உலகம் அனைத்துக்கும் உயிரானவனே! எம்பெருமானே! துயில் நீங்கி எழுந்தருள்வாயாக!

புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறைவாய் திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளியெழுந் தருளாயே.

எங்கும் நிறைந்த அமுதமே! சிவபெருமான் உயிர்களுக் கெல்லாம் ஈடேற்றம் வழங்கி ஏற்றுக் கொள்வது, இந்த மண்ணுலகத்தின் வழியாகவே என்னும் உண்மையைத் திருமாலும், நான்முகனும் கண்டனர். மண்ணுலகத்தில் நாம் போய்ப் பிறக்காததால் வாழ்நாளை யெல்லாம் வீணாகக் கழிக்கின்றோமே என்று அவர்கள் இருவரும் ஏங்குகின்றனர். இப்படி, திருமால் விரும்பும்படியாகவும், நான்முகன் ஆசைப்படும்படியாகவும், உன் மலர்ந்த மெய்க் கருணையும் நீயுமாக இம்மண்ணுலகிற்கு வந்து எங்களை ஆட்கொள்ள வல்லவனே! துயில் நீங்கி எழுந்தருள்வாயாக!

## நாவலனைப் போற்றிடுவோம்!

நாவலனை செந்தமிழின் சைவத்திரு நெறியதனின்
காவலனை நூல்கள்பல தந்தபெரும் – பாவலனை
சாற்றரிய தொண்டுகளை ஆற்றியநற் குருமணியை
போற்றுதல் செய்திடுவோம் நாம்!

– நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

பணமானது ஒருவரது கையில் இருக்கும்போது அதன் மதிப்பு ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனால் செலவு செய்யும் விதத்தில்தான் அவரவர் திறமைக்கு ஏற்ப அது கூடவோ, குறையவோ செய்கிறது. அப்படித்தான் மனமும் லட்சியத்திற் கான முயற்சிகளின்போதுதான் அது சுறுசுறுப்படையவோ சோம்பலாகவோ செய்கிறது. (பக்தி)

# மார்கழியின் மகிமை

மாதங்களில் நான் மார்கழி என்று பரந்தாமன் பகவத்கீதையில் சொல்லியிருக்கிறான். அதன் உயர்வுக்கு வேறு சான்றும் வேண்டுமா என்ன? மேலான அந்த மாதத்தின் மேன்மைகளுள் இன்னும் சிலவற்றையும் சொல்லலாம்.

ஸ்ரீ ஆண்டாள் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து திருப்பாவை பாடி பரந்தாமனைப் பணிந்து, அவனைத் திருமணம் புரிந்து அவனோடு ஐக்கியம் ஆனது மார்கழி மாதம்.

இந்திரன், கோபர்கள் மீது சினம் கொண்டு பெரும் மழை பொழியச் செய்தபொழுது கிருஷ்ண பகவான் கோவர்த்தன கிரியை தன் சுண்டு விரலால் குடையாகத் தூக்கிப் பிடித்துக் காப்பாற்றியது இந்த மார்கழியில்தான்.

திருப்பாற்கடல் கடையப்பட்டதும், சிவபெருமான் விஷம் அருந்தியதும் இதே மார்கழியில்தான். மார்கழியில்தான் பாரத யுத்தம் நடந்ததாக மகாபாரதம் கூறுகிறது. மாணிக்கவாசகப் பெருமான் குருந்த மர நிழலில் இருந்து குருநாதரிடம் ஞான தீட்சை பெற்ற பின் பல தலங்களை தரிசித்து திருவண்ணாமலையை அடைந்ததும் மார்கழி மாதத்தில்தான்.

ஜோதிட சாஸ்திரம் மார்கழி மாதத்தை தனுர் மாதம் என்கிறது. மாதங்களில் சிறந்த மார்கழிக்கு மார்க்கசிரம் என்பது சாஸ்திரப் பெயர். மார்க்கசிரம் என்பது மிருகசீரிஷம் நட்சத்திரத்தைக் குறிக்கும். சந்திரன் மிருகசீரிட நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் நாளில் பௌர்ணமி வருவதால் மார்கழி எனவும், சூரியன் தனுர் (தனுசு) ராசியில் பிரவேசிக்கும் மாதம் என்பதால் தனுர் மாதம் எனவும் வழங்கப்படுகிறது.

மார்கழி மாதத்தில் திருப்பாவையும் திருவெம்பாவையும் பாடினால் வீட்டில் மகாலஷ்மி சந்தோஷமாக வருவாள். வீட்டில் நிம்மதி நிரந்தரமாகும். இறைவன் அருள் நிச்சயம் உண்டு என்பது ஆன்றோர் வாக்கு.

மகாவிஷ்ணுவுக்குரிய விசேஷ நாளான வைகுண்ட ஏகாதசியும், நடராஜருக்குரிய திருவாதிரைத் திருநாளும் மார்கழி மாதத்தில்தான் வரும். அனுமன் அவதரித்ததும் இந்த மாதத்தில்தான்.

கன்னிப் பெண்கள் இம்மாதத்தில் விரதம் இருந்தால், மனம் போல மாங்கல்யம் கிட்டும் என்பது ஆண்டாள் வாக்கு. இந்த விரதத்துக்கு பாவை நோன்பு என்று பெயர்.

(நன்றி : பக்தி)

# மாமன்றம் மன்னாரில் நடத்திய ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு

அகில இலங்கை இந்து மாமன்றம் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்துடன் இணைந்து சிவதொண்டர் அணி பயிற்சியையும், ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கையும் கடந்த அக்டோபர் 10ம் 11ம் திகதிகளில் மன்னார் திருக்கேதீஸ்வர தேவஸ்தான மண்டபத்தில் நடத்தியிருந்தது.

முதலாவது நாளான 10ம் திகதியன்று காலை 6.00 மணி முதல் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களது ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நந்திக்கொடி ஏற்றி வைத்தார். மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவிகளது தேவாரத்தின் பின், மங்கள விளக்கேற்றல் நிகழ்வைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் தேசபந்து வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் அவர்கள் அங்கு வருகை தந்திருந்த திருக்கேதீஸ்வர தேவஸ்தான திருப்பணிச் சபைத் தலைவர் திரு. இ. நமசிவாயம் அவர்களை சிறப்புத் தலைமை தாங்கும்படி கேட்டு ஒலிவாங்கியை அவரது கையில் கொடுத்தார். சிறிது நேரம் உரையாற்றிய திரு. இ. நமசிவாயம் அவர்கள், தொடர்ந்து நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி நடத்தும்படி வைத்திய கலாநிதி கதிர்காமநாதனை கேட்டுக் கொண்டார்.

இவரது தலைமையில் இடம்பெற்ற அன்றைய காலை அமர்வின்போது பிரதம விருந்தினர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களது சிறப்புரையைத் தொடர்ந்து கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் "எங்கள் சமயம் ஒரு வாழ்வியல் நெறி" எனும் பொருளிலும், அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் "சிவதொண்டு" எனும் பொருளிலும் உரையாற்றினார்கள்.

10ம் திகதி மாலை அமர்வுக்கு மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள் தலைமை தாங்கினார். கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் "சிவத்திருமேனிகள்" எனும் பொருளிலும், வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் "சிவதொண்டரின் பணிகள்" எனும் பொருளிலும் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் செயல்முறை விளக்கத்துடன் தியானப் பயிற்சிகளை வழங்கினார்.

இரண்டாம் நாளான 11ம் திகதி காலை அமர்வுக்கு மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. க. ஜெகதீசன் தலைமை தாங்கினார். சிறப்பு நிகழ்வாக "ஐயம் தெளிதல்" கேள்வி – பதில் அரங்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், கம்பவாரிதி இ. ஜெயராஜ், அருள்மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன், வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாமன்றப் பிரதிச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன் வழங்கிய நிறைவுரையின் பின் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியச் செயலாளர் திரு.கே. சந்திரகாந்தன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன.

தகவல் : ஆ. அரசக்கோன்

*பொருளாளர்,*

*(மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம்)*

# சிறப்புமிக்க மார்கழித் திருவாதிரையும் திருவெம்பாவையும்

வருடந்தோறும் மார்கழி மாதம் பூரணையும் திருவாதிரையும் சேர்ந்து வரும் காலம் சிறப்பானது. ஏனென்றால் அந்த நட்சத்திரமே சிவபெருமானுக்கு உரியது. இத்தினத்தில் சிதம்பரத்தில் மிக மிக விசேடமான உற்சவமும் அபிஷேகமும் நடக்கும்.

இதற்கு முன்னுள்ள பத்து நாட்களும் திருவெம்பாவை ஓதுவார்கள். மார்கழி மாதம் முழுதுமே விஷேட காலமாகக் கணிக்கப்படும். கோயில்களிலும், வீட்டு வாயில்களிலும் அழகிய பலவகையான சித்திரக் கோலங்கள் அமைத்து, கோமயத்தால் மார்கழிப் பிள்ளையார் என்று விநாயகரை வைத்துப் பூக்கள் சூடி வழிபடுவார்கள். சிலர் ஒன்பது நாளும் ஒரு பொழுது உண்டு விரதம் இருந்து திருவாதிரையில் உபவாசம் இருந்தும் அனுஷ்டிப்பர்.

தேவர்களுடைய காலக் கணக்கின்படி இம்மாதம் பிரம்ம முகூர்த்தமாகும். நமக்கும் ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்குமுன் ஐந்து நாழிகை இரண்டு மணித்தியால காலமும் அந்த முகூர்த்த காலமாகும். அதாவது உஷாக்காலம் என்பது. இக்காலத்தில் நித்திரை விட்டு எழுந்து காலைக்கடன்கள் கழித்து, நீராடி, அனுட்டானம் முடித்து, கடவுள் வழிபாடு, செபம், தியானம் என்பன செய்ய வேண்டும் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. இதனால் தேகமும், மனமும், அனேக நன்மைகளை அடைகின்றன.

இக்காலத்தில் சத்துவகுணம் மேலோங்கி விளங்கும். கரிபமல வாயு குறைந்து, பிராண வாயுவின் வன்மை மிகுந்தும், ஓசோன் என்னும் சஞ்சீவிக் காற்று நிலை ஏற்பட்டும் இருக்கும் என்பர். இக்காலமே தியானம், பூசை வழிபாடு, படிப்பு, சிந்தித்தல் முதலிய நற்காரியங்கள் வசப்படுவதற்கு இயற்கை அன்னை உதவும் நேரமாகும்.

இந்த நுட்பங்களை நம் முன்னோர் அறிந்தே, சூரிய உதயத்துக்கு முன் நித்திரை விட்டெழுதலை வற்புறுத்திக் கடைப்பிடித்து வருகின்றனர். தினமும் பிரம்ம முகூர்த்தம் நமக்கிருப்பது போலவே, தேவர்களுக்கும் உண்டு.

மிகப்பழைய காலம் இருந்து மார்கழி நீராடல் கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறதைச் சங்க இலக்கியங்கள், நிகண்டுகளிலிருந்து தெரியலாம். இதைப் பாவை நோன்பு என்பர். பெரும்பாலும் கன்னிப் பெண்களே, தங்களின் எதிர்கால வாழ்க்கையின் சிறப்பு நோக்கி காத்தியாயினி என்னும் சக்தியை மார்கழி மாதம் முழுவதும் வழிபட்டு வந்திருக்கின்றார்கள்.

சைவ மக்கள் சிறப்பாக மார்கழித் திருவாதிரைக்கு முன்னுள்ள பத்து நாளும், கோயில்கள், வீடுகள் முதலிய இடங்களில் திருவெம்பாவை படித்தலும், திருவாதவூரடிகள் புராணம் படித்தலும், இறைவனை நோக்கி வேண்டுதலும் செய்து வருகின்றனர். நடேசப் பெருமானுக்கே மூர்த்திகளில் விசேடங்கள் யாவும் சிறப்பாய் செய்கின்றனர். மார்கழி மாதம் முழுவதும் திருவாசகமே பெரும்பாலும் வீடுகளில் ஓதுகின்றனர்.

ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள், சிதம்பர தரிசனத்துக்குப் போகும் போது திருவண்ணாமலையிற் தங்கினார். அவர் தங்கின காலம் திருவெம்பாவைக் காலம். அண்ணாமலையில் உள்ள பெண்கள், விடியற் சாமம் எழுந்து வீடுகள் தோறும் சென்று, மற்றைய கன்னிமார்களையும் எழுப்பி, ஆடிப்பாடி நீராடச் சென்ற காட்சியைக் கண்டார். அவர்கள் பாடியதாகவே திருவெம்பாவை பாடினார். ஞானமும் தத்துவார்த்தமும் நிரம்ப அப்பதிகத்தில் அமைந்துள்ளன.

ஸ்ரீ நடேசப் பெருமானும் அந்தணர் வடிவாம் மாணிக்கவாசகப் பெருமானிடம் வந்து, திருவாசகம் முழுவதையும் பாடக்கேட்டு எழுதிய பின் "பாவை பாடிய வாயால் கோவை பாடு" என்று கேட்டதிலிருந்தே அதன் அருமை விளங்கும். "எம்பாவாய்" என்று பாடல்கள் முடிகிறபடியால் அது சக்தி வழிபாடு என்பதும் தெரிய வருகிறது. இவ்வழிபாட்டால் நாட்டுக்கு நீர் வளம் முதலிய பல செல்வங்கள் உண்டாவதுடன், மக்களுக்கும் மிக மேலான நன்மைகள் உண்டாகின்றன. ஆதலால் சைவ மக்களாகிய நாம் சைவச் சிறார்களை ஊக்கப்படுத்தி இனி வரும் இக்காலத்தில் விடியற் காலை நாலு மணிக்கே அவர்களின் கடமைகளை முடிப்பித்து சங்கு, சேமக்கலம், வாத்தியக்கருவி முதலியவற்றுடன் எங்கள் கிராமங்களை ஊர்வலமாய் வந்து ஆடிப்பாடி, கோவில்களில் சென்று பூசை தரிசித்து தெய்வ வழிபாடுகளைச் செய்விக்க ஒவ்வொரு பெற்றோரும் முன்வருவோமாக. சைவ மக்கள் வீடுகள் எல்லாம் பொலிந்து சிறந்து விளங்க, நம் உலகமே மேலோங்கும்.

*(நன்றி : சிவதொண்டன், மார்கழி – 1966)*

## அறிஞர்கோன் ஆறுமுகநாவலர்

ஆறுமுக நாவலனா மறிஞர் கோனா
லணிதிகழும் புலோலியினி லமைக்கப் பெற்ற
வேறுபுகழ்க் கழகத்திற் கற்கு மைந்த
ரிருஞ்சபையிற் காட்டியநூ லியல்பு முற்ற
வூறுமகிழ் வொடுதெரிந்தா மிவருக் கிவ்வா
றொருசின்னா ளிலிற்றேற்ற முதிப்பச் செய்த
மாறுபெறா மதிக்குரவர் முயல்வை யின்னும்
வளர்ந்திடுதல் சிவன்கருணை மாண்ப தாமே!

(ஆறுமுகநாவலர் அவர்களால் புலோலிக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களைப் பரீட்சிப்பதற்காக 1876 புரட்டாதி மாதத்தில் நாவலர் அங்கு சென்றபோது உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர் பாடிய பாடல் இது. இவரது கவிதா ஞானப் புலமைக்காக நாவலர் அவர்களே இவருக்குப் 'புலவர்' பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)



இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. சிறுவர் சிந்தனைக் கதைகள் சிலவற்றை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.

# சிறுவர் ஒளி சிந்தனைக் கதைகள்

## இறைவன் இருக்கும் இடம்

ஒரு தடவை ஒரு கிராமத்து மக்கள் கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்க நினைத்து பயணம் மேற்கொண்டார்கள். அவர்களது மடத்தனத்தைப் போக்க எண்ணிய துறவி ஒருவர், கழுதை மீதமர்ந்து அவர்கள் முன்பு எதையோ தேடுவதுபோல் சென்று கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த மக்கள் "எதைத் தேடுகிறீர்கள் சுவாமி?" என்றனர்.

"என் கழுதையைத் தேடுகிறேன்" என்றார் துறவி.

எல்லோரும் சிரித்தார்கள். "கழுதை மீதுதானே அமர்ந்திருக்கிறீர்கள்!" என்றார்கள்.

"ஏன் சிரிப்பு? அவரவருக்குள்ளேயே கடவுள் இருக்கும்போது நீங்கள் அவரைத் தேடிப் போகிற மாதிரிதான் நானும் என் கழுதையைத் தேடிப் போகிறேன்!" என்றார் துறவி.

யாத்திரை சென்றவர்கள் வெட்கத்துடன் திரும்பினார்கள்.

※※※※※※※※※※※※※※※※※※※※※※※※

## உயர்ந்த உள்ளம்

ஒரு சமயம் குளிரால் நடுங்கியபடி தாயுமானவர் ஓரிடத்தில் அமர்ந்திருந்தார். அவ்வழியே வந்த அரசர், தம் பட்டாடையை அவருக்குப் போர்த்திவிட்டுச் சென்றார். சிறிது நேரத்தில், தாயுமானவரின் எதிரே, ஒரு பிச்சைக்கார வயோதிபப் பெண் குளிரால் நடுங்கியபடி வந்து கொண்டிருந்தாள். அதைக்கண்ட தாயுமானவர் இரக்கப்பட்டு அந்தப் பெண்ணுக்கு அந்தப் பட்டுப் போர்வையைப் போர்த்திவிட்டுச் சென்றார். தான் தாயுமானவருக்குப் போர்த்திவிட்டுப் போன பட்டுப்போர்வையை, பிச்சைக்காரப் பெண் அணிந்திருப்பதைக் கண்டார் மன்னர். தாயுமானவரிடம் சென்று, "நான் தங்களுக்குக் கொடுத்த பட்டுப்போர்வை எங்கே?" என்று கேட்டார்.

"அரசே! என் எதிரில் அன்னை அகிலாண்டேஸ்வரியே கடுங்குளிரில் நடுங்கி வருவதாக நினைத்து, அதை அவளுக்கே போர்த்திவிட்டேன்" என்றார். அதைக் கேட்ட அரசர் எல்லோரையுமே இறைவனாகக் கருதும் தாயுமானவரின் உள்ளத்தைப் போற்றிவிட்டுச் சென்றார்.

※※※※※※※※※※※※※※※※※※※※※※※※

## செல்வத்தால் முடியாதது!

துறவி ஒருவரைச் சந்தித்த செல்வந்தன் ஒருவன் "பணத்தால் வாங்க முடியாத பொருள்கள் ஏதும் உள்ளதா?" என்று கர்வத்துடன் கேட்டான்.

அதற்கு துறவி, "குழந்தையின் முகத்தில் சிரிப்பை வரவழைப்பது, முதுமை அடைந்தவர்க்கு மீண்டும் இளமை தருவது, நல்ல மனிதனின் அன்பைப் பெறுவது, இறையனுபவம் பெறுவது – இந்த நான்கும் செல்வத்தால் வாங்க முடியாதவை" என்று சொன்னார்.

துறவியின் பதிலைக் கேட்ட செல்வந்தன் தெளிவு பெற்றான்.

※※※※※※※※※※※※※※※※※※※※※※※※

## ஓம் எனும் மந்திரம்

போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்ட ஒருவன் அந்த ஊருக்கு வந்த துறவியிடம் சென்று, "நான் இப்பழக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று மனதார விரும்புகிறேன். ஆனாலும் முடியவில்லையே சுவாமி" என்று கதறி அழுதான். "தினமும் எவ்வளவு போதைப் பொருள் சாப்பிடுகிறாய்?" என்று கேட்டார் துறவி. "இவ்வளவு சாப்பிடுகிறேன்" என்று ஒரு அளவைக் கையால் காண்பித்தான்.

உடனே அந்தத் துறவி ஒரு வெண்கட்டியை உடைத்து, "ஒவ்வொரு நாளும் நீ போதைப் பொருளைச் சாப்பிடுவதற்கு முன்பு இந் வெண்கட்டியினால் கரும்பலகையில் 'ஓம்' என்று மூன்று தடவை எழுதிவிட்டு, இந்த வெண்கட்டி அளவு போதைப் பொருளைச் சாப்பிட வேண்டும்" என்றார். 'சரி' என்று சொல்லி விட்டு அன்றைய தினமே அதைச் செய்யத் தொடங்கி, அவன் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செய்துவந்தான். வெண்கட்டி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்ததால் போதைப்பொருளின் அளவும் குறைந்துகொண்டே வந்து ஒருநாள் தீர்ந்தும் போய்விட்டது. அவனுக்குத் தெரியாமலே போதைப் பழக்கமும் போய்விட்டது. 'ஓம்' எழுதும் பழக்கம் பிடித்துக் கொண்டது. நோயும் தீர்ந்துவிட்டது. உடலும் உள்ளமும் சரியாகப் போய்விட்டன.

※※※※※※※※※※※※※※※※※※※※※※※※

## திறந்தே இருக்கிறது

ஞானி ஒருவரிடம் சீடன் கேட்டான். "குருவே இறைவனை அடைய, இடைவிடாமல் அவன் கதவுகளைத் தட்டிக் கொண்டே இருங்கள்; ஒரு நாள் அது திறக்கப்படும் என்று சொல்கிறார்களே! அது உண்மையா?"

ஞானி சொன்னார். "எவ்வளவு நாளைக்குத் தட்டிக் கொண்டே இருப்பாய் – கதவுகள் திறக்கப்படும் என்று? உண்மை என்னவென்றால், அவனது கதவுகள் எப்போதும் பூட்டப்படவே இல்லை. வெறுமனே சாத்தித்தான் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்".

ஞானியின் பதில் சீடனுக்கு பெரும் உண்மையை உணர்த்தியது.

※※※※※※※※※※※※※※※※※※※※※※※※



இது மாணவர்களுக்கான பக்கம். வழமைபோல பெரிய புராணக் கதைகள் இடம்பெறுகின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## மாணவர் ஒளி

# பெரியபுராணக் கதைகள்

## இறைவருக்குப் பொன்மீன் வழங்கியவர்

சோழ நாட்டின் சிறந்த நகரங்களில் ஒன்றாகத் திகழ்வது நாகபட்டினம். இது துறைமுகப் பட்டினமாதலால் பல நாட்டுப் பொருள்களும் இங்கு வந்து நிறைந்து காணும். மக்கள் செல்வச் செழிப்புடையராய்த் திருந்திய வாழ்க்கை நடத்திவந்தனர்.

இங்கு வலை வளத்தால் வளம் பெற்ற குடிகள் நிறைந்தது நுளைப்பாடி ஆகும். இப்பதியில் வலைஞர் குலத்தில் அதிபத்தர் என்று ஒருவர் இருந்தார். இவர் பரதவரின் தலைவராக விளங்கினார். செல்வம் மிகுந்து சீரோங்கிய வாழ்வு கொண்டவர். பல படகுகள் இவருக்குச் சொந்தமாக இருந்தன. இவர் இளம்பிறை சூடிய சிவபெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். அவன் திருவடிகளை மறவாத சிந்தையினர்.

இவர் தம் வலையில் படுகின்ற சிறந்த – தலைமீனை செஞ்சடைப் பெருமானுக்காகக் கடலில் விட்டு விடுவது வழக்கம். ஒரு மீன் கிடைத்தாலும் அம்மீன் இறைவருக்கென்றே இவரால் கடலில் விடப்படும்.

இவ்வாறு செய்து வருகின்ற நாட்களில் அதிபத்தரின் செல்வ வளம் குறைந்தது. எனவே உணவுக்கும் தட்டுப்பாடு வந்தது. உறவினர்கள் உணவின்மையால் வாடித் துவண்டனர். அதிபத்தர் போதிய உணவின்றி மெலிவுற்றார் என்றாலும் இறைவரை நினைந்து அவருக்கு ஒரு மீன் அளிப்பதைத் தவறாது நிறைவேற்றி வந்தார். ஆண்டவர்க்கு அளிக்க மீன் கிடைப்பதில் இவர் பெருமகிழ்ச்சி கொண்டார்.

இறைவர் அதிபத்தரைச் சோதித்தறிய எண்ணினார். ஒருநாள் வலையில் மீன் எதுவும் படாமல் பொன்மீன் ஒன்று அகப்பட்டது. வலைஞர் இப்பொன்மீனைக் கொண்டு தங்கள் வறுமையை ஒழிக்கலாம் என எண்ணி அதை அதிபத்தரிடம் கொண்டுவந்தனர். மீனைக் கண்ட அதிபத்தர் மகிழ்ச்சி கொண்டார். இறைவர் திருவருளை எண்ணி வியப்புற்றார். ''இந்த அழகிய பொன்மீன் இறைவருக்காகக் கிடைத்ததே'' என்று சொல்லி இறைவரை வணங்கி அதைக் கடலில் விடுத்தார். என்னே இவருக்கு இறைவரிடம் இருந்த பற்று!

அந்நேரம் சிவபெருமான் வானில் தோன்றி அதிபத்த நாயனாருக்குத் திருக்காட்சி அளித்தார். அதிபத்தர் வீழ்ந்து வணங்கி இன்பப் பேருணர்வில் திளைத்து நின்றார். இறைவர் அவருக்குச் சிவலோகப் பேற்றைக் கொடுத்தருளினார்.

வேகமாகப் போவது முக்கியமில்லை. சரியான பாதையில் போவதுதான் முக்கியம். அப்போதுதான் நாம் போய்ச்சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவோம். முத்தி அடைவதற்குரிய சாதனைக்கும் இது பொருந்தும்.

(பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா)

## குருதியில் விளக்கேற்ற முனைந்தவர்

தொண்டை நாட்டிலுள்ள சிறந்த திருப்பதிகளில் ஒன்று திருவொற்றியூர். இவ்வூர் சோலைகள் சூழ்ந்தது. தேரோடும் தெருவீதிகள் கொண்டது. வெண்ணிலா தண் கதிர் பொழியும் கடற்கரையைப் பெற்றுக் கவின் விரிப்பது. அக்கடற்கரைச் சோலைகளில் பலவித மலர்கள் மலர்ந்து மணம் கமழும். இவ்வூரிலுள்ள மண்டபங்களில் எந்நேரமும் இசைப் பாட்டொலி மிகுந்திருக்கும். ஆடரங்குகளில் அழகுமங்கையர் ஆடல் ஒருபோதும் ஒழியாதிருக்கும். மடங்களில் அன்னதானம் நடந்தவாறு இருக்கும். வானின் இடி முழக்கமும் கடல் முழக்கமும் எப்போதும் கேட்கும் திருநகர் இது.

இத்தகைய சிறப்பு மிக்க நகரில் சக்கரப்பாடித் தெருவில் செக்கர் குலத்திலே கலிய நாயனார் என்பவர் பிறந்திருந்தார். இவர் செல்வச் செழுமை கொண்டவர். சிவபக்தி மிகுந்தவர். திருக்கோயிலில் திருவிளக்கேற்றுவதே இவரது திருத்தொண்டாக இருந்தது.

தம்மிடம் நீங்காத பற்றுக்கொண்ட இவரது அன்பை இறைவர் உலகுக்கு வெளிப்படுத்தத் திருவுளம் கொண்டார். கலியரின் செல்வநிலையில் மாறுதல் ஏற்பட்டுப் பொருள்வளம் குறைந்தது. என்றாலும் இவரது திருத்தொண்டு நிற்கவில்லை. தம் குலத்தவரிடம் கூலிக்குப் பணியாற்றி அதை எண்ணெயாகப் பெற்றுத் தம் பணியைச் செய்து வந்தார். அதற்கும் வாய்ப்புக் குறைந்தது.

எல்லாப் பொருள்களையும் விற்றுத் திருவிளக்கேற்றும் திருப்பணிக்குச் செலவிட்டுத் தீர்ந்தபடியால் மேல் விற்பதற்கும் பொருளில்லை. அவரது திருத்தொண்டு நடைபெற வேண்டுமே! எனவே தம் மனைவியாரையும் விற்கத் துணிந்தார். என்னே இவரது வீறுமிக்க சிவத்தொண்டு!

நகர் முழுவதும் சுற்றியும் அவ்வம்மையாரை வாங்கிக் கொள்ள யாரும் முன்வரவில்லை. மனம் தளர்ந்த நிலையில் திருக்கோயிலுக்கு வந்த அவர், 'என் தொண்டை எப்படியும் செய்து முடிப்பேன்; இல்லையேல் உயிர் விடுவேன்' என்ற உறுதிப்பாட்டோடு விளக்குகளுக்குத் திரியிட்டார். எண்ணெய் வேண்டுமே! தம் குருதியை விளக்குகளில் நிறைக்கும் முனைப்போடு தம் கழுத்தை அரிய முனைந்தார்.

இறைவர்பால் கொண்டுள்ள மெய்ப்பக்தியால் தம்மையே தியாகம் செய்ய முனைந்தவர் செயலை அவ் இறைவர் பொறுப்பாரோ? அந்நேரம் முக்கண்ணர் பிரானின் திருக்கரம் கலிய நாயனார் கையைப் பற்றித் தடுத்தது. இறைவர் கலிய நாயனாருக்குத் திருக்காட்சி வழங்கினார். ஊறு நீங்கிய நாயனார் உணர்ச்சியில் தோய்ந்த இறைவரை வழிபட்டு நின்றார். முக்கண்ணர் அவரை ஆட்கொண்டு நற்பேறு அளித்தார்.

இறைவருக்குச் செய்யும் திருத்தொண்டுக்காய் தம் கழுத்தையே அரிந்த கலிய நாயனார் வரலாற்றிலிருந்து திருப்பணிக்காக எதையும் செய்யும் அவரது உறுதி வெளிப்படுகிறது.



மங்கையர் ஒளி

# சக்தி வழிபாட்டின் தனித்துவம்

அருள்மொழி அரசி, வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

*"ஏகைவ சக்தி பரமேஸ்வரஸ்ய பின்னா*
*சதுர்த்தா விநியோக காலே*
*போகே பவானி புருஷேஷு விஷ்ணு*
*கோபேது காளி சமரேது தூர்க்கா"*

**சி**வனிடமிருந்து பிரிந்த சக்திகள் நான்காகின. இன்பத்தில் பவானியாகவும், புருஷர்களிடத்தில் விஷ்ணுவாகவும், கோபத்தில் காளியாகவும், போரிலே தூர்க்கையாகவும் செயல்படுகின்றன.

சக்தி மூர்த்தங்களுள் மாரியம்மன் கிராம தேவதையாகவும், காவல் தெய்வமாகவும் கருதப்படுகிறாள். மாரியம்மனின் சிறப்பைக் குறித்து "மாரியல்லது காரியமில்லை" என்று பெரியோர் குறிப்பிடுகின்றனர். மாரி மழை தரும் தெய்வம். திருவள்ளுவர் வான் சிறப்பில் மழையின் இன்றியமையாமையை மிக உயர்வாகக் குறிப்பிடுவார்.

மழையில்லாவிடில் பயிர்கள் வாடும். மாரித்தாயின் கருணையில்லாவிடில் உலக உயிர்கள் வாடும். மழை நமது பிரதி உபகாரத்தைக் கருதிப் பொழிவதில்லை. அதேபோல் அன்னையும் கைமாறு கருதாமலேயே நம்மீது கருணை பொழிகின்றாள்.

மாரியம்மனை ஆகமங்கள் சீதலாதேவி என்று அழைத்துத் துதிக்கின்றன. அன்னையின் அருள் குளிர்ச்சியானது. மக்களின் மனதில் கப்பியிருக்கின்ற "காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்" என்ற கொடிய வெப்பத்தைத் தணிக்கும் ஆற்றல் கொண்டவள். மக்களுக்கு உடல் வெப்பத்தின் மிகுதியால் ஏற்படும் "அம்மை, வைசூரி" போன்ற நோய்களைப் போக்கும் கண்கண்ட தெய்வம்.

இச்சக்தி வழிபாடு தோற்றம் கொண்ட காலத்தைக் கண்டறிய முடியவில்லை. சக்தி வழிபாட்டின் உயர்வை சாக்தர்கள் சிறப்பாக உரைப்பர். சக்தியே மும்மூர்த்திகளாகிய பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் ஆகியோருக்கு வலிமையைத் தருபவள். அவளின்றி ஓர் அணுவும் அசையாது. யாக்கையைத் தந்து இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்த பின் பிறவியை ஒழித்துப் பேரின்பத்தைக் கொடுப்பவள் அவளே.

"மூவர்க்கும் முதற்பொருளாய், முத்தொழிற்கும் வித்தாகி நாவிற்கும் மனதிற்கும் நாடரிய பேரறிவாய்" விளங்குகிற அன்னை பராசக்தி பேசரிய உயிரையெல்லாம்பெற்று நோக்கிப் பெரும் போகம் அவை அளித்துப் பிறப்பினையும் ஒழித்து விடுகிறாள். உயிருக்குள் உயிராகி, அந்தர்யாமியாகிறாள். உலகத்தைக் கடந்தும் அகண்ட ஜோதியாகத் துலங்குகிறாள். சக்தி தத்துவமே உலகின் முதல் தத்துவம். சித்சக்தி, பராசக்தி, இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானாசக்தியென பஞ்ச சக்திகளும் அவளே. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்ற பஞ்ச மூர்த்திகளும் அவளே. நோயும் அவளே! மருந்தும் அவளே! செல்வம் வேண்டுமா? புகழ் வேண்டுமா? வலிமை வேண்டுமா? கல்வி வேண்டுமா? சக்தியைச் சரணடையுங்கள், அனைத்தையும் அருள்பவள் அவளே.

வேதகாலத்திலேயே சக்தி வழிபாடு இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. வேதத்தில் பயிலுகிற, உஷா, அதிதி, புவி, வாக் போன்ற பெண் தெய்வங்களாக சக்தியின் வழிபாடு கால் கொண்டிருந்ததை உணர முடிகிறது. தைத்ரிய உபநிடதத்தில் புவித்தாயைக் காணலாம். வேதங்களிலும் உபநிடதங்களிலும் தெய்வங்களின் குறிப்புகள் காணப்படுவதிலிருந்து ரிக்வேத காலத்திற்கும் முன்பிருந்தே சக்தி வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு நிலவியிருந்ததை உணரலாம். வாக் தேவியை முழுதும் புகழும் சூத்திரம் ரிக்வேதத்திலே உண்டு.

கேனோபநிடதம் உமாதேவியின் துணையினால் இந்திரன் பிரம்மத்தை அறிந்தான் என்று கூறுகின்றது. வாஜசனேய சம்ஹிதையில் உமை உருத்திரனின் சகோதரியாகச் சொல்லப் பட்டிருக்கிறாள். ஸ்ரீகண்டரும், பட்ட பாஸ்கரரும் "ஓம்" என்ற சொல்லினின்று தோன்றியதே 'உமா' என்ற சொல் என்பர்.

**தொல்லியல் ஆய்வு**

தொல்பொருள் ஆய்வுத்துறைப் பேரறிஞர் 'சர் ஜான் மார்ஷல்' சிந்துவெளிப் பகுதியில் கிடைத்த பெண் தெய்வச் சிலைகளை ஆராய்ந்து கி.மு 4000ற்கும் முற்பட்ட காலப் பழைமையை உடையது "சக்தி வழிபாடு" என்று கூறி இருக்கிறார். மேலும் சிந்துவெளிப் பகுதியில் கிடைத்த தேவியின் சிலைகளைப் போன்றே துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்பிரஸ், எகிப்து, கிரீஸ் முதலிய இடங்களில் கிடைத்த சிலைகளும் ஒத்து இருக்கின்றன. "சிந்து நதி தீரத்திலும் சுமேரியாவிலும் இவ் வழிபாடு ஒன்று போலவே இருப்பது வியப்பிற்குரியது" என்பர் வி. ஆர். தீட்சிதர். இரு நாடுகளிலும் தேவியின் வாகனம் சிங்கம். அதுபோலவே சிவனது வாகனம் காளையாகக் காணப்படுகிறது. போருக்குரிய தெய்வமாகிய அவள் கன்னியாகவும், மனைவி யாகவும், மலைகள், காடுகளிலே வசிப்பவளாகவும் கருதப் படுகிறாள். இதனால் சக்தி வழிபாடு உலகந் தழீஇய வழிபாடாகக் காணப்படுகின்றது.

**தந்திர நூல்களின் சக்தி**

கி. பி 4ம் நூற்றாண்டுக்குப் பின் சக்தி வழிபாட்டை விளக்கிப் பல தந்திர நூல்கள் எழுந்தன. அவற்றின் எண்ணிக்கை 64 என்று கூறுவர். வேதநெறிகளுள் கர்ம காண்டம் விதித்த சடங்குகளின் வளர்ச்சியைத்தான் பெரும்பாலான தந்திர நூல்கள் சுட்டுகின்றன. சியாமள ரகசியம், சாரதிலகம், காளிகா தந்திரம், குலசூடாமணி குலார்ணவம் போன்ற சாக்த தந்திர நூல்கள் சாக்தமதப்பிரிவாகிய வாமசாரம் ரக்ஷிணா சாரம் பற்றி சிறப்பாகக் கூறுகின்றன.

இன்று உள்ளதை ஒழுங்காகச் செய், நாளையைப் பற்றி எண்ணாதே. உன்னால் இயலாவிட்டால் உனக்காக நாளைக்கு வேண்டியதைப் பற்றிய வேலையை இறைவனே ஏற்றுக்கொண்டு தேவையானதை செய்வான். நாளையைப் பற்றி உனக்கேன் கவலை". (ஸ்ரீராமகிருஷ்ணர்)

**ஆதிசங்கரரின் தொண்டு**

அன்னை வழிபாட்டில் ஒளிநெறியை ஊட்டியவர் ஆதி சங்கர பகவத் பாதர். வாம மார்க்கத்திலே கட்டுண்டிருந்த மக்களை அன்பு வழியாகிய தக்ஷிணாசார நெறியிலே இட்டுச் சென்றார். ஸ்ரீவித்யையின் தத்துவத்தை மக்களிடையே பரப்பினார். தேவி உபாசகர்கள் தம்மை தேவியாகவே பாவித்து, தாய்மைக்குரிய பொறுமை, சகிப்புத்தன்மை, அடக்கம், கருணை முதலியவற்றையே அணிகலன்களாகக் கொண்டனர். லலிதா தியான சுலோகமும், "அஹமித்யேவ பாவயே பவானீம்" என்று கூறுகின்றது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் இந்த பாவனநிலையின் அதி உன்னத நிலையை எட்டியவர். இந்த பாவனை யான், எனது என்ற எண்ணம் அடங்க மனம் அடங்கும் மார்க்கத்தைக் காட்டுகின்றது.

"யான் எனது என்று அற்ற இடமே திருவடியாய்" என குமரகுருபரரும் கூறுவார். அடங்காத மனமே ஒருவனுக்கு மரணத்தை உண்டுபண்ணுகின்றது. அடங்கிய மனமே அவனை முக்தி நிலைக்குக் கூட்டுவிக்கின்றது.

*அலையு மனத்தை யகத்தடக்குமவனே சரியை கடந்தோனாம்*
*அலையு மனத்தை யகத்தடக்குமவனே கிரியை முடித்தோனாம்*
*அலையு மனத்தை யகத்தடக்குமவனே யோக தற்பரனாம்*
*அலையு மனத்தை யகத்தடக்கு மவனே ஞானியதி சூரன்*

தேகமே யக்ஞசாலை, ஞானேந்திரியங்கள் யக்ஞ பாத்திரங்கள். கர்மேந்திரியங்கள் உபகரணங்கள். சுகத்தையும், துக்கத்தையும் சமமாக நோக்கும் சமதிருஷ்டியே தீக்ஷை. இந்திரியங்களுக்கு உரிய தேவதைகளே அந்தணர்கள். ஜீவனே யஜமான், புத்தியே பத்னி, கோபம் யாகப் பசு.

*"யஜதோ புருஷோ யஜமாண் புத்திம் பத்னீம்*
*பரிக்ருஹ்யதாம் தீஷாம் ஸந்தோஷம் தீந்திரியாணி*
*யக்ஞபாத்ராணி கர்மேந்திரியாண் யுபகரணாநி*
*ஸத்ரெ சரீரகே தத்தத்தேவதா ஏவத்விஜஜஸ்*
*தடஸ்தா வெ யதாதேசம் பிரயஜமான மனுயஜங்தே"*

என்று கர்போபநிஷதமும் மனம் அடங்க வேண்டும் என்றே உபதேசிக்கின்றது.

ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரி, மூகரின் மூக பஞ்சசதி, லலிதா சஹஸ்ர நாமம் இம் மூன்றும் ஸ்ரீ வித்தையின் பிரஸ்தானத்ரயங்கள். ஆதிசங்கரர் இமயத்திலிருந்து குமரிவரை சாக்த வழிபாடாம் சக்தி வழிபாட்டு முறையை விதைத்துச் செழிக்கச் செய்தார்.

**உலகின் முதல்**

சக்தி தத்துவமே உலகின் முதல் தத்துவம். இதன் அடிபொற்றியே ஏனைய தத்துவங்கள் முகிழ்ந்தன. சக்தியே நாதம் முதல் மண் ஈறாக முப்பத்தாறு தத்துவங்களோடு இயைந்து நிற்கிறாள். சக்தனாகிய பரமசிவன் நினைத்தவற்றை ஈடேற்றுபவள் அம்பிகையே.

*"சக்திதான் நாதம் ஆதி தானாகும் சிவமும் அந்த*
*சக்திதான் ஆதியாகும் தரும் வடிவான எல்லாம்*
*சக்தியும் சிவமும் ஆகும் சக்திதான் சத்தனுக்குச்*
*சக்தியாம் சத்தன் வேண்டிற்றெல்லாம் ஆம் சக்திதானே"*

இதனை மாணிக்கவாசகப் பெருமான் திருப்பொற் சுண்ணத்தில்,

*"எம்பெருமான் இமவான் மகட்குத்*
*தன்னுடைக் கேள்வன் மகன், தகப்பன்*
*தமையன் எம் ஐயன் தாள்கள் பாடி"* என்றும்
திருக்கோவையாரில்,
*"தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல்*
*தன் ஒரு பாலவள் அத்தனும், மகனுமாம்"* என்றும்
குமரகுருபரர்,

*"கனகமார் கவின்செய் மன்றில்*
*அனக நாடற்கு எம் அன்னை*
*மனைவி, தாய், தங்கை, மகள்"* என்றும் கூறுவார்கள்.
அபிராமிப்பட்டரும்
*"தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்*
*அவளே அவர்தமக்கு அன்னையும் ஆகினள்"*

என்று சக்தியின் ஏற்றத்தையும், முதன்மையையும் குறிப்பிடுவார்கள்.

**முப்பெருஞ்சக்தி**

மூவர்க்கும் முதலாகி முத்தொழிற்கும் வித்தாகி நாவிற்கும் மனதிற்கும் நாடறிய பேரறிவாய் விளங்கும் அன்னை பகவதி (தர்மம், கீர்த்தி, செல்வம், ஆளுந்தன்மை, வைராக்கியம், அன்பு ஆறு செல்வங்கள்) வீரத்தையும் வெற்றியையும் அருளுவதில் கொற்றவையாகவும், செல்வத்தையும் செழிப்பையும் அருளுவதில் கலைமகளாகவும் இலங்குகின்றாள். வீரம், செல்வம், கல்வி மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள். இம்மூன்றினுள் ஒன்று இல்லாவிட்டாலும் வாழ்வு முழுமை பெறாது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ செயலூக்கம் தேவை. செயலூக்கத்தின் சின்னமே மகிஷாசுரமர்த்தனி. தாமதம், சோம்பல், மடமையை பாதத்தின் கீழிட்டு நிமிர்ந்து நிற்கும் ஞானத்தின்பேருரு, மனித வாழ்க்கையின் அற்புத விளக்கம். ஏழரை சனி தோஷம் குறைய விநாயகரையும், ஆஞ்சநேயரையும் மனம் உருகிப் பிரார்த்தித்தால் ஏழரைச் சனியின் தோஷம் குறையும்.

சுருங்கக் கூறின் ஒருவனுடைய பிறவியின் இறுதி நிலையிலேயே, இனிப் பிறவாத பெருநிலை வந்துறும் பொழுதே ஒருவனுக்கு சக்தி வழிபாட்டில் நாட்டம் ஏற்படுகிறது. அன்னை வழிபாடே ஒருவனை மிக விரைவாக முக்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றது. அன்னையின் பதமலர் பணிந்து நலம் பல பெறுவோம்!

## அமரர் 'கல்கி'யின் கண்ணோட்டத்தில் நாவலர்

வி. லாவண்ணியா

ஈழநாட்டில் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே குடியேறினார்கள். எப்போதுமே எங்கள் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக விளங்கினர். தமிழையும் தமிழர் நாகரிகத்தையும் சமயத்தையும் வளர்த்தவர்கள்.

சில காலமாக தமிழ் மறுமலர்ச்சிபற்றி அடிக்கடி கேள்விப்பட்டு வருகிறோம். தமிழ் மறுமலர்ச்சிக்கு காரணமானவர்கள் என்று பலருடைய பெயர்களும் சொல்லப்படுகின்றன. ஆனால் உண்மையில் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆதிகாரண புருஷர் யார் என்று ஆராய்ந்து பார்த்தோமானால் அவர் ஈழநாட்டைச் சேர்ந்த ஆறுமுகநாவலர் என்பது தெரியவரும்.

பழைய காலத்தில் தமிழ் வசனம் அபூர்வமாயிருந்தது. அப்படி அபூர்வமாயிருந்த வசனமும் சங்கச் செய்யுள் நடையைவிட கடினமான நடையில் இருந்தது. இல்லையென்றால், இலக்கண வழுக்கள் நிறைந்த கொச்சைத் தமிழில் ஒரு பக்கம் முழுவதையும் ஒரே வாக்கியத்தினால் நிறைக்கும் அசம்பாவித வசன நடையாயிருந்தது. பிழையில்லாத எளிய தமிழ் வசன நடையை முதன்முதலில் கையாண்டு காட்டி வெற்றி பெற்ற பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே ஆவார்.

*(அமரர் கல்கியின் 'யார் இந்த மனிதர்கள்' கட்டுரையிலிருந்து)*



# அறமுணர்த்தும் நந்தி

கம்பவாரிதி இ. ஜெயராஜ்



உலகை என்றும் உய்விப்பது நம் சைவசமயம்.
ஸ்தாபகர் இல்லாத பெருமை இதற்குரியது.
காலங்கடந்த சைவத்தின் வீரியமே,
இதன் உண்மைத் தன்மைக்காம் சான்று.
காலாகாலமாய் இச்சமயத்தை
வெல்லவும், கொல்லவுமாய் பலர் முயன்றும்
முடியாது தோற்றனர்.
இயற்கையுடன் பொருந்திய நம் சைவத்தை
எவராலும், எதனாலும் விழுங்க முடியவில்லை.
எவ்வித பரபரப்புமின்றி,
சைவம் காலங்கடந்து நடைபோடுகிறது.
எதிர்க்க நினைத்த சமயங்களையும்,
அழிக்க நினைக்காமல்,
அவற்றின் மூலக் கருத்தினையும் உள்வாங்கி,
அவற்றிற்கும் சிரஞ்சீவித்தன்மையை ஈந்தது நம் சைவம்.
இத்துணை பெருமைகளும் சைவத்தைச் சார,
அச்சமயத்தின் அடிப்படை அமைப்பே காரணமாம்.
அவ் அடிப்படை யாது?

* * *

இயற்கையை இறையின் வடிவாய் அறிந்ததால்,
அவ் இயற்கையுடன் பொருந்தி நடத்தலே,
வாழ்வின் உயர்வுக்காம் அடிப்படை என உணர்ந்தனர்
நம் சைவ மூதாதையர்.
அவ் இயற்கையுடன் பொருந்தி நடத்தலையே,
அறம் என அவர்கள் வகுத்தனர்.
வாழ்வின் கூறுகள் அனைத்தையும் விளங்கி,
அவர்கள் வகுத்துத் தந்த அறவழி,
இறைவனை நோக்கிய ஆன்மீகப் பாதையின்
முதற்படியாம்.
இம் முதற்படி இயங்கும்படியாய் (Moving Step) இருந்து,
தன்னில் ஏறிய எவரையும்
இறைவனை நோக்கி இட்டுச் சென்றது.
இவ் அறப்படியில் ஏறுதல் ஒன்றே,
இறைவனை நோக்கிச் செல்லத்
தலைப்படுவார்தம் வேலையாம்.
அங்ஙனம் அவ் அறப்படியில் ஏறிவிடின்,
அதுவே அவரை அடுத்தடுத்த படிகளினூடு நகர்த்தி,
இறைவனிடம் சேர்ப்பிக்கும்.
இவ் அற்புத வழியை நம் மூதாதையர் உணர்ந்தனர்.
இவ் ஒப்பற்ற கருத்தை,
திருக்குறளும் நமக்கு உணர்த்துகிறது.

* * *

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை**
**விழுப்பத்து வேண்டும் பனுவற் துணிபு**
இந் நீத்தார் பெருமை அதிகாரக் குறளுக்கு,
உரைசெய்யும் பரிமேலழகர்,
மேற்சொன்ன விடயத்தைத் தெளிவுபடுத்துகிறார்.
அறத்தின் வழி நிற்க ஒருவர்க்குப் பாவம் தேயும்.
பாவம் தேய அறியாமை நீங்கும்.
அறியாமை நீங்க,
நிலைத்தவை எவை, நிலையாதவை எவை
என்பது பற்றிய வேறுபாடுகள் தோன்றும்.
அவ் வேறுபாடுகள் தோன்ற,
அழியும் இயல்புடைய,
இம்மை, மறுமை இன்பங்களில் வெறுப்புண்டாகும்.
அவ் வெறுப்பு உண்டாக,
பிறவித்துன்பம் அறியப்படும்.
அது அறியப்பட பிறவிக்குக் காரணமான
பயனில் முயற்சிகள் நீங்கி
வீட்டுக்குக் காரணமான யோகமுயற்சி உண்டாகும்.
அது உண்டாக மெய்யுணர்வு பிறக்கும்.
மெய்யுணர்வு பிறக்க,
நான், எனது எனும் அகங்கார, மமகாரங்கள் நீங்கும்.
அவை நீங்க இறைவன் திருவடிப்பேறு கிட்டும்.
பரிமேலழகர் உரைக்கும் இவ் அடிப்படை உணரின்,
அறத்தில் நிற்றலே,
இறைபேறு அடைதற்காம் வழி என்று உணரலாம்.

* * *

இப்பேருண்மையை உணர்ந்த நம் சைவசமயம்,
இறைவனுக்கும் அறத்திற்குமான தொடர்பினை,
உலகத்தார் அறிந்து உய்தற்பொருட்டே,
நந்தி எனும் வடிவத்தை உருவாக்கியது.
சிவ வாகனமாய் நம்சைவம் உரைக்கும் நந்திவடிவம்,
அறத்தின் குறியீடே.
நந்தியை தருமத்தின் வடிவமாகவே,
சைவப் பெருமக்கள் உரைத்தனர்.
நந்தியைத் தர்மத்தின் வடிவாய் உணர்ந்து நோக்க,
நம் சைவப்பெரியோர் உரைத்த பல செய்திகளுக்கான,
புது விளக்கங்களைப் பெறலாம்.
அவற்றுள் ஒரு சில காண்பாம்.

* * *

இறையாம் சிவன்,
இடபவாகனத்தூர்பவன் என்பது,
சைவம் தரும் செய்தி.
'வெள்ளை எருதேறி', 'விடையேறி' என்றெல்லாம்,
திருமுறைகள் இச்செய்தியை உறுதி செய்யும்.
இறைவன் நந்தியில் வருவான் என்பதற்கான உண்மைப்பொருள்,
இறைவன் தர்மத்தில் உறைவான் என்பதே.
தர்மம் இலா இடத்தில் இறை தரிசனம் கிட்டாதென்பதையே,
மேற்செய்தி உறுதி செய்கிறது.

* * *

நந்திக்கும் லிங்கத்திற்கும் குறுக்கே செல்வது,
ஆலயத்தில் செய்யத்தகாத குற்றங்களில் ஒன்றாம்.
நல்லூர் ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடை,
இக்கருத்தை வலியுறுத்துகிறது.
இக்கருத்து ஆகம அடிப்படையிலானது.
நந்தியைத் தர்மசொரூபமாய் விளங்க,
லிங்கத்திற்கும் நந்திக்கும் இடையே செல்வதான செயலை,
அறக்குறுக்கீடு செய்து இறைவழிபாடு இயற்றுதற்காம்
குறியீடாய் உணரலாம்.
அங்ஙனம் அறம் மீறி இறைவழிபாடு செய்வார்க்கு,
இறையருள் கிட்டாது ஒழிவதோடு,
பாவமும் சேரும் என்பதையே,
நந்திக்குக் குறுக்கே செல்வார்,
நரகம் செல்வார் எனும் கருத்தால்
நம் மூதாதையர் வலியுறுத்தினர்.

* * *

பிரதோஷ விரதகாலங்களில்,
நந்திதேவரின் கொம்புகளினூடே சிவனை வழிபடுதல்,
விரத விதியாம்.
இக்கருத்தும்,
நந்தியை அறமாய் நமக்கு உணர்த்த உரைக்கப்பட்டதே.
நந்தியின் கொம்புகளினூடு சிவனை வழிபடுவதென்பது,
தர்ம எல்லையின் உள்நின்று
இறையை வழிபடுதலை உணர்த்தும் காரியமே.

* * *

சிவன் ஏறுகிற நந்திவாகனம்,
வெள்ளை நிறமுடையது என்பது வழக்கு.
வெள்ளை நிறம் தூய்மையை உணர்த்துவது.
அறமும் தூய்மையின் வடிவமேயாம்.
ஆதலால் நந்தியின் வெள்ளைநிறம் குறிப்பது,
அறத்தூய்மையையே என்று அறிக.

* * *

கயிலையின் முதற்கோபுர வாயிலில்,
நந்தி தேவரின் பொற்பிரம்புடன் காவல்செய்து நின்று,
கயிலாயத்தில் சிவனை வழிபடவென வருகின்ற தேவர்களை,
ஒழுங்கு செய்து உள் அனுப்புவார் என்பது,
புராணச் செய்தி.

**நெற்றியிற் கண்ணர் நாற் பெருந்தோளர்**
**நீறணி மேனி அநேகர்**
**பெற்றம் மேற்கொண்ட தம்பிரான் அடியார்**
**பிஞ்ஞகன் நன்னருள் பெறுவார்**
**மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்**
**மலர்கையில் கரிகையும் பிரம்பும்**
**கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்**
**காப்பதற்(கு) கைலைமால் வரைதான்.**

என்று இச்செய்தியைப் பெரியபுராணம் உறுதி செய்யும்.
நந்தியின் அருள் பெறாதவர் கயிலையுள் சென்று,
இறைதரிசனம் பெறல் இயலாதாம்.
இங்கும் நந்தியைத் தர்மமாய்த் தரிசிக்க,
தர்ம அங்கீகாரம் பெறாதார்.
கயிலைக்காட்சி பெறார் எனும் பேருண்மை வெளிப்படும்.

* * *

மேலும் சற்று ஆழமாய் ஆராய,
மற்றொரு பேருண்மையை நாம் அறியலாம்.
உண்மையில் நந்தி என்பது,
சிவனுக்குரிய நாமமேயாம்.
**'நந்தி நாமம் நமச்சிவாய'** எனும் தேவாரத்தாலும்,
**'நங்கள் நாதனாம் நந்தி'** எனும் திருமந்திரத்தாலும்
இவ்வுண்மையை அறிகிறோம்.
இச்செய்தியால் நந்தியும் சிவனும் ஒருவரே என்பதும்,
சிவரூபம் தர்மரூபமே என்பதும் தெரியவரும்.

* * *

சக்தி சிவனினின்று வேறுபட்டிருப்பினும்,
எங்ஙனம் சிவனிற் பிரிவில்லாததோ,
அங்ஙனமே நந்தியும் சிவனிற் பிரிவில்லாததாம்.
சக்தி சிவத்தின் ஆற்றல்.
நந்தி சிவத்தின் இயல்பு.
ஆற்றலும், இயல்பும் குறித்த நேரங்களில்,
ஒருவரிடம் வெளிப்பட்டுத் தோன்றும்.
மற்றைய நேரங்களில் அவை, அவருள் உள்ளடங்கியிருக்கும்.
அங்ஙனமே ஆற்றலும், இயல்புமாய் இருக்கும் சக்தியும், நந்தியும்
சிவத்தில் வெளிப்பட்டும் உட்பொதிந்தும் இருத்தல் இயல்பாம்.
சக்தியைச் சிவம் தன்னுட் பொதித்து இருக்கும் நிலையை,
**பெண்ணுறு ஒரு திறன் ஆகின்று, அவ்வுறுத்**
**தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்** எனும்,
புறநானூற்றுக் கடவுள்வாழ்த்துப் பேசும்.
அங்ஙனமே நந்தியையும் இறைவன் தன்னுள் அடக்குவான்.
இக்கருத்தைப் பெரியபுராணத்தின்,
இளையான்குடிமாற நாயனார் வரலாற்றிற் காணலாம்.
அடியார்க்கு விருந்திட்டு வறுமைப்பதம் எய்திய,
இளையான்குடிமாற நாயனார் வீட்டுக்கு,
சிவன் நள்ளிரவில் விருந்தாய் வருகிறார்.
அச்செய்தியை உரைக்கும் சேக்கிழார்,
திருமாலும் பிரமனும், பன்றியும், அன்னமுமாய்,
தேடியும் அறியமுடியாத சிவனார்,
ஊர்கின்ற நந்தியுமின்றி உமையுமின்றி,
தவவேடத்தோடு வந்தார் என்கிறார்.

**மற்று அவர் செயல் இன்ன தன்மையதாக**
**மால், அயன் ஆன அக்**
**கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத**
**கொள்கைய ராயினார்**
**பெற்றம் ஊர்வதுமின்றி நீடிய பேதையாள்**
**உடன் இன்றி ஓர்**
**நற்றவத் தவவேடமே கொடு ஞாலம்**
**உய்திட நண்ணினார்.**

மேற்பாடலுக்கு உரை செய்த அறிஞர் பலரும்,
நந்தியும் உமையும் இன்றி இறைவன் வருதல்,
சாத்தியமின்றாம் ஆதலால்,
அவற்றை தன் உட்பொதித்து,
இறைவன் எழுந்தருளினார் என்றே உரைசெய்தனர்.
இதன்மூலம் நந்தியும், சக்தியும்
சிவனிற் பிரிவின்றி இருக்கும் உண்மையை அறிந்துகொள்கிறோம்.
அது அறிய, சக்தியைப் போலவே நந்தியும்,
சிவனுட் கலந்து நிற்பது எனும் உண்மை தெரியவரும்.
அவ்வுண்மை தெரியவர,
தர்மமும் இறையின் வடிவே என அறியலாம்.

* * *

மேற்கூறிய உண்மைகளால்,
நந்திவடிவம் தர்மக்குறியீடு என்பதும்,
நந்தியின் அருளின்றி இறைவனை அடையமுடியாதென்பதும்,
சக்தியைப் போலவே நந்தியும் இறையுட் கலந்தது என்பதும்,
நந்தியும் சிவமும் ஒன்றே என்பதும் தெரியவரும்.

* * *

இத்துணை பெருமைகள் உடைய நந்தியே,
சைவத்தின் அடையாளமாய்,
சிவத்தின் அடையாளமாய்,
தர்மத்தின் அடையாளமாய்,
நம் சைவக்கொடியில் பொறிக்கப்படுகிறது.

* * *

நந்தியே சைவத்தின் கொடிச் சின்னமாம்.
இக்கருத்தை ஒருசிலர் ஐயுறுவர்.
அவர்தமக்காய்,
மேற்செய்திக்கான தக்க மேற்கோள் காட்டுதல் அவசியம்.
இஃது காண்பாம்.

* * *

புறநானூற்றுக் கடவுள்வாழ்த்தாய் அமைந்த,
பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றிய சங்கப்பாடல்,
நந்தியே சிவனின் கொடிச்சின்னம்
என்பதை உறுதி செய்கிறது.
சங்கநூல்களுள் அமைந்த செய்தியாதலால்,
இச்செய்தியின் தொன்மையை நாம் உணர்கிறோம்.
அப்பாடலில் சிவனைப் புலவர் வர்ணிக்கிறார்.
அனைத்து உயிர்களுக்கும் காவலாகும்,
சிவனின் அருளுடைமையைக் காட்ட,
தவமுதிர்ச்சியின் சான்றாய்த் திகழும்,
தாழ்சடையும், நீர் வற்றாக் கமண்டலமும்
அவனிடத்து உள்ளன.
அச்சிவன்,
தன் தலையிலும், மார்பிலும்
கொன்றைப் பூவினை அணிந்தவன்.
தனது வாகனமாகவும், கொடியாகவும்
தூய ஆன் ஏற்றைக் கொண்டிருப்பான்.
அவன் கழுத்தை நச்சுக்கறை அழகு செய்கிறது.
வேதம் ஓதும் அந்தணரால் அது புகழப்படுகிறது.
பெண்ணுருவைத் தனது ஒரு பாகத்திலே
வெளிக்காட்டியும் இருப்பான்.
அவளைத் தன்னுள் அடக்கித் தனித்தும் அவன் விளங்குவான்.
அவனது நெற்றிக்கு அழகுதரும் பிறை,
பதினெண் தேவர்களாலும் போற்றப்படுகிறது என்பதாய்,
அப்பாடலின் பொருள் அமைகிறது.

**கண்ணி கார் நறுங்கொன்றை, காமர்**
**வண்ண மார்பின் தாரும் கொன்றை**
**ஊர்தி வால் வெள்ளேறே, சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப**
**கறைமிடறு அணியலும் அணிந்தன்று, அக்கறை**
**மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே**
**பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று, அவ்வுருத்**
**தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்**
**பிறைநுதல் வண்ணம் ஆகின்று, அப்பிறை**
**பதினென் கண்ணும் ஏத்தவும் படுமே.**
**எல்லா உயிர்க்கும் ஏமமாகிய**
**நீரறவு அறியாக் கரகத்துத்,**
**தாழ்சடை பொலிந்த அருந்தவத் தோற்கே.**

மேற்பாடலில் வரும்,
**ஊர்தி வால் வெள்ளேறே, சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப** எனும் அடிகளால்,
நந்தியே சிவனின் வாகனமும் கொடியும்
ஆகிறது எனும் உண்மை,
சித்தாந்தப்படுத்தப்படுகிறது.

* * *

சிவனது வாகனமே நந்தியாம்.
பின்னாளில் மற்றைத் தெய்வங்களின் ஊர்திகளும்
ஆலயங்களின் பலிபீடத்தின் முன் அமைக்கப்பட்டன.
அவையும் நந்தி என்றே அழைக்கப்பட்டன.
ஆயினும் நந்தி என்ற சொல்,
சிவனது வெள்ளேற்றையே குறிக்கும்.
சிவமே சைவத்தின் முழுமுதற் கடவுளாதலால்,
அச்சிவத்தின் கொடியே சைவத்தின் கொடியாம்.
மூல தெய்வத்தின் கொடியாதலால்,
நந்திக் கொடியினைச் சைவக்கொடியாய் ஏற்று,
உப தெய்வங்களின் ஆலயங்களிலும் ஏற்றுதல் பொருந்துமாம்.
சைவத்தின் பொதுக்கொடியாய் கருதத்தக்கது
நந்திக்கொடியே என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.
நந்தி சைவத்தின் கொடி என்பதற்கான அர்த்தம்,
தர்மமே சைவத்தின் அடிப்படை என்பதேயாம்.

* * *

## தீபாவளி தினத்தன்று பிரார்த்தனை

அகில இலங்கை இந்து மாமன்றம் அதன் அங்கத்துவ சங்கங்களுடனும், ஏனைய இந்து நிறுவனங்களுடனும் இணைந்து தீபாவளி தினமாகிய அக்டோபர் 17ம் திகதி சனிக்கிழமையன்று காலை 10.00 மணிமுதல் பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரார்த்தனை நிகழ்வொன்றை நடத்தியது.

பலவித இழப்புகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் மத்தியில் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு விமோசனமும், வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும் அமைந்த சிறப்பான எதிர்காலத்திற்கு இறையருளை வேண்டி இந்தப் பிரார்த்தனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இந்நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்த மகராஜ், அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்கள். மாமன்ற காலாண்டிதழான "இந்து ஒளி" தீபாவளி சிறப்பிதழும் இந்நிகழ்வின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

**மாமன்றத்தின் புதிய இணையத்தள முகவரி:**
www.hinducongress.lk



# மனிதப் பிறவியின் மகத்துவம்



*சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஒளவையார். எனவே எமக்குக் கிடைத்திருக்கும் இந்த மனிதப் பிறவி ஒரு புனிதப் பிறவியாகும். இது இருக்கும் போதே நாங்கள் நல்லனவற்றைச் செய்துவிட வேண்டும். இந்த மனித உடலிலிருந்து உயிரானது பிரிந்து சென்றுவிட்டால் பிறகு இவ்வுடம்புக்கு மதிப்பு இருக்கமாட்டாது. இத்தனை நாளும் பெயர் சொல்லியே அழைத்தவர்கள் "பிணம்" என்று பெயரிட்டு விடுவார்கள். நீர்க்குமிழிக்கு நிகரானது இந்த யாக்கை.

ஆகவே, புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த நாங்கள் நேர்மை, நீதி, நியாயம், உண்மை, அன்பு, இன்சொல் என்பனவற்றைக் கைக்கொண்டு எமது வாழ்க்கையை நேரிய சீரிய வழியில் இட்டுச்செல்ல வேண்டும். நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமை செய்யாதிருக்க வேண்டும். எப்போதும் உண்மை பேச வேண்டும். "என் தாய் மீது ஆணை. நான் என்னதான் துன்பம் வந்தாலும் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் பொய் பேசமாட்டேன். எப்போதும் உண்மையே பேசுவேன்" என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரிச்சந்திர மகாராஜாவுடைய வாழ்க்கைச் சரிதத்தை எடுத்துப் பாருங்கள். உண்மைக்காகத் தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்தவன் அரிச்சந்திரன். விசுவாமித்திர முனிவர் என்னவெல்லாம் செய்து பார்த்தார். அவன் அசையவில்லை. மனைவி, மக்கள், மந்திரியை இன்னும் எத்தனையோ இழந்தும் அவன் உண்மையையே பேசினான். அதனால் அவன் உயர்ந்த நிலையை அடைந்தான்.

நாங்களும் ஏன் அவ்வாறு வாழக்கூடாது? இன்றிருப்பாரை நாளைக்கிருப்பர் என்று எண்ணவோ திடமில்லை. நொடிப் பொழுதில் உடம்பைவிட்டு உயிர் பிரிந்துவிடும். அதனால் நாம் எமது வாழ்க்கையில் நல்லவற்றையே செய்ய எண்ண வேண்டும்; செய்ய வேண்டும். ஒரு போதும் நீதி, நியாயம், உண்மை, நேர்மை தவறி நடக்கக்கூடாது. முக்கியமாக மற்றவர் மனம் புண்படும்படி பேசக்கூடாது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும்; இரக்கம் இருக்க வேண்டும்.

"கடவுள் ஒருவர் இருக்கின்றார்; அவர் நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் பார்த்துக்கொண்டே இருக்கின்றார்" என்ற உணர்வு நம் அடிமனத்தில் எப்போதும் இருக்க வேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமாக நடத்தல் கூடாது. உண்மைக்குப் புறம்பாக எதையுமே செய்தல் தகாது.

காகங்களைப் பாருங்கள். தமக்குக் கிடைத்த உணவைத் தான் மாத்திரம் உண்ணாது தன்னினத்தைக் 'கா கா' என்று கரைந்து அழைத்துச் சேர்ந்தே உண்ணும். ஒருநாளும் தனித்து உண்ணாது. எறும்பைப் பாருங்கள், ஒரே வரிசையில் சீராக நேராக ஊர்ந்து செல்கின்றன. புறாக்கள் யாவும் ஒற்றுமையாகச் சேர்ந்து பறந்தபடியால்தான் வேடன் விரித்த வலையிலிருந்து தப்பித்துக் கொண்டன. நாயைப் பாருங்கள். ஒரு சிறு ரொட்டித் துண்டு போட்டமைக்காகத் தன் வாலை ஆட்டி நன்றி செலுத்துவதுடன் நம்மை மறக்காமல் நினைவிலும் வைத்திருக்கின்றது.

ஆனால், இந்த மனிதனைப் பாருங்கள். இவனை எந்த ரகத்தில் சேர்ப்பது? கதவைப் பூட்டி வைத்துச் சாப்பிடுகின்றான். பொது இடங்களில் வரிசையாகச் செல்லாமல் எப்படியாவது ஏதோ ஒரு பொய்க் காரணத்தைச் சொல்லிக் கொண்டு வரிசையைக் குழப்பித் தனது காரியத்தைப் பார்த்துக் கொண்டு போய்விட எத்தனிப்பான். ஒருவர் செய்த உதவியை மறந்துவிடுவான்.

இது ஏன்? கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல் வேண்டும். உயிர்களை மதிக்க வேண்டும். மறந்தும் பிழை செய்யக் கூடாது. ஒருவர் செய்த உதவியினை வாழ்நாள் முழுவதும் நினைத்து நடக்க வேண்டும். அதற்குப் பிரதி உபகாரமாக ஏதாவது தருணம் பார்த்துச் செய்ய வேண்டும்.

ஒரு நோக்கோடு, ஒரு குறிக்கோளோடு, ஓர் இலட்சியத்தோடு வாழத் தொடங்கும்போதுதான் வாழ்க்கையில் ஒரு நிறைவு இருக்கும். பூர்வ ஜென்ம புண்ணிய பயனாகக் கிடைத்திருக்கும் இந்த மானுடப்பிறவி மகத்தானது. ஆகவே, புண்ணியப் பேற்றினை அனுபவிக்க நாம் பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் நன்மைகளைச் செய்ய வேண்டும். நன்மைகளை நாம் நாள்தோறும் செய்யச் செய்ய புண்ணியம் வந்து சேரும். புண்ணியமாம் பாவம் போம்; போன நாட் செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள். இதை நாம் மனத்திலே நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, நாம் சேமித்து வைக்கும் பணத்தைப் பாதுகாக்க வங்கி ஒன்றில் ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கிறோம். எப்போதாவது ஒருநாள் எமக்குப் பணம் தேவைப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அப்போது நாங்கள் என்ன செய்கின்றோம்? வங்கிக் கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வங்கிக்குப் போகின்றோம். அங்கே படிவத்தை நிரப்பிக் கொடுத்துப் பணம் கேட்கின்றோம். வங்கியாளர் எமது கணக்கில் சேமிப்பிலிருக்கும் பணத்தைச் சரிபார்த்து எமக்குத் தருகின்றார்.

இதில் ஒரு விடயம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். எமது கணக்குப் புத்தகத்தில் நாம் போட்டு வைத்த பணம் சேமிப்பில் இருந்தால்தான் எமக்குப் பணம் கிடைக்கும். பணம் இல்லா விட்டால் ஒன்றுமே கிடைக்காது. அதேபோலத்தான் மேலுலகம் என்ற வங்கியில் 'புண்ணியம்' என்ற பணத்தைச் சேமித்து வைத்தால் தான் நாம் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியும். பாவத்தை மூடையாகச் சேர்த்து வைத்திருந்தால் துன்பத்தையும் துயரத்தையும் தான் அனுபவிக்க நேரிடும்.

ஆகவே, மனித வாழ்வில் புண்ணியமே செய்யத்தக்கது; பாவம் விலக்கப்பட வேண்டியது. எப்போதும் உண்மையே பேசி வந்தால் வேறு விபரீதங்களுக்கு இடமில்லை. புண்ணியம் தானாகவே வந்து சேர்ந்துவிடும். இதனை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

ஒரு பசுவிலிருந்து பால் பெறவேண்டுமாயின் அதனுடைய மடியிலிருந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டும்; செவியையோ அல்லது வாலையோ பிடித்து இழுத்தால் பால் வருமா? வராது. அதேபோலத்தான் கடவுள் இந்த உலகில் எல்லா இடத்திலும் இருந்தாலும் கோயிலில் அவனை வழிபட்டால் மாத்திரமே திருவருளைப் பெறமுடியும். கடவுள் அருள் சுரக்கும் இடமும் ஆலயந்தான். புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் நாம் வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபாடு செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் பிறவி எடுத்ததன் பயனை அனுபவிக்க முடியும்.

எனவே, எப்போதும் உண்மையாக வாழ்ந்து உண்மை பேசி வந்தால் அதுவே வாழ்வில் உச்ச நிலைக்கு வழிவகுக்கும். இதை மறக்கக் கூடாது.

## மாமன்றத்தின் அஞ்சலி

### மூத்த சிவதொண்டராகப் போற்றப்படும் பெரியார்



சைவத் தமிழ் உலகின் பெருமதிப்பிற்குரியவராகத் திகழ்ந்த பெரியார் சி. சரவணமுத்து அவர்களது மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது. இவர், கடந்த அக்டோபர் 29ம் திகதியன்று தனது 94 வயதில் காலமானார்.

இவர், இந்து மாமன்ற முகாமைப் பேரவையிலும் அறங்காவலர் சபையிலும் உறுப்பினராக இருந்து மாமன்றத்தின் வளர்ச்சிக்கும், சிறப்பிற்கும் ஆற்றிய பணிகள் என்றென்றும் மறக்கப்பட முடியாதவை. சிவதொண்டர் அணியை மாமன்றம் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வம் காட்டி, அத்தகைய பயிற்சியொன்றுக்கு வித்திட்டவர் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் பல சிவதொண்டர்கள் உருவாகுவதற்கும் வழிகாட்டியாகவிருந்த பெருமைக்குரியவர். இத்தகைய பெரும்பணிக்காக இவருக்கு மாமன்றம் "மூத்த சிவதொண்டர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்திருப்பதும் வரலாற்றுப் பதிவாகும்.

அவர் கொழும்பு விவேகானந்த சபை, திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை போன்றவைகளிலும் பொறுப்பான பல பணிகளைச் செய்த பெருமகன். கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் பொதுச் செயலாளர் உட்பட பல பதவிகளை வகித்த திரு. சரவணமுத்து தமிழன்னைக்கு அரிய பல சேவைகள் செய்தவராவார். பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராகவும் நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் ஒலிபரப்புச் சேவை தோற்றம் பெற்ற போது, (தபாற் தந்திப் போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் இயங்கிய காலத்தில்) பெரியார் சரவணமுத்து சில காலம் அங்கு கடமையாற்றியதன் ஊடாக ஒலிபரப்புத் துறையிலும் தன் முத்திரையைப் பதித்து பெரும் பங்களிப்பை வழங்கியவர். பின்னாளில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய பெருமையும் இவருக்கு உண்டு. அவரை "வானொலி மாமா" என இளம் சந்ததியினர் அன்பாக அழைத்து உரிமை கொண்டாடி வந்தனர் என்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவரது ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறது.

### இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம்



பல்துறைப் புலமையாளராகத் திகழ்ந்த இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம் அவர்களின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது. இவர் நவம்பர் 18ம் திகதியன்று காலமானார்.

இவர் இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர். மாமன்றத் தலைமையகக் கட்டிடம் பூர்த்தியான போது (1996) வெளியிடப்பட்ட சிறப்பு மலருக்கு "தலைநகரில் இந்து மக்கட்கோர் தலைமையகம்" என்ற தலைப்பில் நீண்டதொரு கவிச்சரம் தந்து அனைவரினதும் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்டவர் என்பதை என்றென்றும் மறக்கமுடியாது.

அரச சேவையில் பல பதவிகளை வகித்த அமரர் குணரத்தினம் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய வேளையிலும், அதன் பின்னரும்கூட ஆற்றிய அரும்பணிகள் சிறப்பாகப் போற்றத்தக்கன. கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் தலைவராகவுமிருந்து செய்த சேவைகளும் என்றென்றும் மறக்கமுடியாதவை.

தமிழ் அறிஞராக, எழுத்தாளராக, கவிஞராக நம் நாட்டு கலை, இலக்கியத் துறையில் முத்திரை பதித்த இவர் வானொலியில் மட்டுமல்ல, மேடை நிகழ்ச்சிகளிலும் பல கவியரங்குகளுக்கு தலைமை தாங்கி நடத்தியிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இந்து மாமன்றம் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவரது ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறது.

நினைவுக்கு ஒரு கவித்துளி

**தலைநகரில் இந்து மக்கட்கோர் தலைமையகம்**

**இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம்**

விண்ணிறைந்த நெடுமாடம் மேன்மை கொள்ளும்
விறலீசன் பெருநெறியே மேவும் அன்பர்
கண்ணிறைந்த பலமாடிக் கட்டிட மாய்க்
கவினழகு சிற்பமைதி காணும் நெஞ்சின்
பண்ணுயர்ந்த பரம்பொருளின் பான்மை போற்றிப்
பரவுவார் தொழுதேத்தும் நலங்கள் வாய்ப்ப
எண்ணிறைந்த கலையழகு கவின்கொள் காட்டி
எழில்மாடம் இந்துமா மன்றம் கண்டார்!

*(மாமன்ற தலைமையகக் கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலர் – 1996)*

# முதிர்ந்த வயதிலும் இளமைத்துடிப்புடன் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய பெரியார் சரவணமுத்து

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்

கடந்த இரு தசாப்தங்களில் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை, கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றில் எங்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்த 94 வயது 'இளைஞரை' இழந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தும் துர்ப்பாக்கியசாலி களாக இருக்கிறோம்.

சிறியேன் பொதுச் செயலாளராக அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பொறுப்பெடுத்த வேளையில் அப்போதே எழுபதாவது அகவையைத் தாண்டிவிட்ட சரவணமுத்து ஐயாவின் தீவிர கருத்துக்களுக்கு ஈடுகொடுத்துப் பணிபுரிவதே கஷ்டம் எனக் கண்டேன். தொண்ணூறுகளில் நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் அவலப்பட்ட நிலை – வடகிழக்குத் தொடர்புகள் அற்ற நிலை – பல நிவாரணப் பணிகள் செய்யவேண்டிய அவசியம் – எழும்பாதிருந்த மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கவேண்டிய பொறுப்பு. அந்தக் காலகட்டத்தில் மாமன்ற நிர்வாகத்தின் பங்காளியாக பல இன்னல்களின் மத்தியில் பொறுப்பேற்றிருந்த பணியை மேலெடுக்கவேண்டிய நிலை.

சரவணமுத்து ஐயா, நிர்வாகத்திற்கு என்றும் கேள்விகளைத் தொடுக்கும் ஓர் ஊன்றுகோலாக விளங்கினார். அவரைச் சமாளிப்பதே மிகவும் சிரமம். சிவதொண்டர் அணி அமைக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தார். என்னிலும் பார்க்க பல வருடங்களால் முதியவரான அவரை பொறுமை காக்க வேண்டி வந்தேன். தலைமையகம் பூர்த்தி செய்யப்பட்டு மாமன்ற செயற்பாடுகள் மக்கள் பணிகளாகப் பரிணமித்து விசாலித்த சமயம் அவரின் ஆசையை நிறைவேற்றி வைத்தோம். சிவதொண்டர் அணி அமைத்து அவரை 'மூத்த சிவதொண்டர்' எனப் பட்டம் வழங்கிக் கௌரவித்து அவரின் விதந்துரைப்புக்கு அங்கீகாரம் வழங்கிக் கொடுத்தோம். (மேலும், சிவதொண்டர் அணிப் பணிகள் விரிவடைய வேண்டும்.) என்றும் வெள்ளைச் 'சவாரி' அணிந்து பகிரங்கப் போக்குவரத்து வாகனங்களில் 'சவாரி' செய்து வந்த சரவணமுத்து ஐயா எந்த ஓர் நிகழ்வுக்குமோ கூட்டத்திற்குமோ ஏன் மரணச் சடங்குகளுக்குக்கூட தவறாது வந்து விடுவார். அது அவரின் கடமை உணர்வை எடுத்தியம்பியது. கூட்டங்களுக்கு வருவதுடன் மட்டும் நின்று விடாது தயங்காது தன் கருத்துக்களைத் துணிந்து எடுத்துரைப்பார்.

> செல்வம் ஒன்றை மட்டுமே மதித்து நடக்கும் அகந்தை உடையவர்களுடன் அமர்ந்து உணவு உண்ணாதீர்கள். அப்படி உண்பதைவிட ஓர் ஊமையின் அருகில் அமர்ந்து உட்கொள்வது சாலச் சிறந்தது. (வள்ளலார்)

எங்கள் இருவருக்குமிடையே ஓர் ஒற்றுமை. அவரும் நானும் எங்கள் மனதில் பட்டதைப் பட்டென எடுத்துரைத்துவிடுவோம். மற்றவர்களுக்கு எங்கள் இருவரிடையே வேற்றுமை என ஓர் அபிப்பிராயம். ஆனால், இருவரும் அன்புடன் ஒருவரை ஒருவர் மதித்தோம், நேசித்தோம். நான் செய்தது, சொல்லியது ஏதும் தவறு என அவர் மனதில் பட்டால்கூட கூட்டங்களில் மட்டுமல்ல தொலைபேசியில் கூட உரிமையுடன் அழைத்து என்னுடன் அளவளாவி வந்த ஓர் 'முதிய' நண்பர் அவர். சில விடயங்களில் கருத்து முரண்பாடு இருந்தாலும் இருவரும் பல விடயங்களில் ஒத்த கருத்துக்கள் கொண்டிருந்தோம். அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்களின் குரலாக ஒலிக்க வேண்டும் என்பது அதில் முக்கியமானது. எமது மக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் எழுந்த சமயங்களில் அவர்கள் சார்பில் குரல் கொடுக்க என்றும் ஊக்கம் தந்து ஆக்கமான அறிவுரைகளும் தந்த பெரியவர் அவர்.

2000ஆம் ஆண்டு ஜனவரி முதல்வாரத்தில் ஆஸ்பத்திரி ஒன்றில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மரணப்படுக்கையில் என் இதயத்துடிப்பு மிகவும் குறைந்த நிலையில் படுத்திருந்தேன். என்னைப் பார்க்க யாரையும் அனுமதிக்காத நிலையிலும் சரவணமுத்து ஐயா எப்படியோ அனுமதி பெற்று உள்ளே வந்துவிட்டார். நான் கண்மூடியிருந்த சமயம் என் கையை ஓர் ஆதரவான அன்புக் கரங்கள் எடுத்து மெல்லத் தடவிவிட்ட மெய்சிலிர்க்கும் அந்தக் கணங்களை என்றும் மறக்கமுடியாது. எனக்கு கதைக்கும் உடற்பலன் இருக்கவில்லை. கதைக்க வேண்டாம் என சமிக்ஞை காட்டிவிட்டு 'நீலகண்டன் பயப்படாதீர்கள் நீங்கள் எல்லாம் எங்கள் சமூகத்திற்குத் தேவை. ஆண்டவன் காப்பாற்றுவான்' என ஆசீர்வாதம் தந்துவிட்டு மெல்ல மெல்ல எழுந்து சென்றார் சரவணமுத்து ஐயா. அவரைப் பார்க்கவே எனக்கும் பரிதாபமாக இருந்தது. என்னைப் பார்க்க அவருக்குப் பரிதாபம். அதுவும் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்ட ஓரிரு தினங்களில் அச்சம்பவம் நடந்தது. பொன்னம்பலத்தின் மறைவு ஐயாவை எப்படித் தாக்கியிருக்கும் என எனக்குத் தெரியும். குமார் பொன்னம்பலம் போன்றோருடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார் அவர்.

அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்களுக்காக இன்னும் பல செய்ய வேண்டும் என்று இளமைத்துடிப்புடன் இடித்துரைத்து எங்களை இயங்கவைத்த மூத்த சிவதொண்டரை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவராக, இறுதியாக மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அங்கத்தவராக நியமித்து மாமன்றம் பெருமை தேடிக் கொண்டது.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையில் பல ஆண்டுகள் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர் சரவணமுத்து. திருக்கேதீச்சர ஆலயத்தில் மீண்டும் பூஜைகள் ஆரம்பிக்கப் பல வழிகளில் முயற்சி செய்தார். வெற்றியும் கண்டார்.

பாராளுமன்றத்தில் அவசரகால நீடிப்புப் பிரேரணை விவாதம் நடந்த சமயத்தில் ஒருமுறை வேறு மதத்தவரான யோசப் பரராஜசிங்கம் (மட்டக்களப்பு அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களுக்கு திருக்கேதீச்சரம் சம்பந்தமான வரலாற்று உண்மைகளைத் தொகுத்து எடுத்துரைக்க வழி செய்தவர் எங்கள் சரவணமுத்து ஐயா.

எங்கள் வரலாற்றை மறுத்து இந்நாட்டில் சரித்திரத்தைப் பொய்யாக எடுத்துரைக்கும் நயவஞ்சகர்களைப் பற்றி சரவணமுத்து ஐயாவின் மனம் என்றும் வெந்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தின் சிரேஷ்ட தமிழ் மொழி பெயர்ப்பாளராக இருந்த நிலையைப் பாவித்து யோசப் பரராஜசிங்கம் மூலம் திருக்கேதீச்சரத்தின் வரலாற்றையும் நிலையையும் எடுத்துரைக்க வழி செய்தார். எமது சமுதாயம் பல வேதனைகளையும் சோதனைகளையும் எதிர்நோக்கும் காலகட்டத்தில் பல இடங்களிலும் சந்தர்ப்பங்கள் உள்ளவர்கள் தங்கள் சுயநலத்தை மறந்து எமது இனத்தின் மேம்பாட்டிற்காகப் பணியாற்ற வேண்டும் என்பதற்கு ஐயா நல்ல உதாரணமாக விளங்கினார்.

மூத்த சிவதொண்டராக சிறந்த சைவனாக வாழ்ந்த சரவணமுத்து ஐயாவை திருக்கேதீச்சரத்தில் மேலாடையின்றி வேட்டியும் சால்வையும் அணிந்து பணிபுரியும் பணியாளராகக் காணலாம். மகா சிவராத்திரி தினங்களில் திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் மூன்று ஆண்டுகளில் ஐயாவுடன் சேர்ந்து நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகின்ற சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அப்போது சரவணமுத்து ஐயாவுக்கும் நமசிவாயம் ஐயாவுக்கும் இடையிலான நட்புறவைக் காணக் கூடியதாக இருந்தது. இருவரும் நண்பர்களாகக் கருத்து மோதலில் ஈடுபடும்போது அந்த நட்பு, நெருப்பில் இட்ட பொன்னாக இன்னும் மிளிரும்.

ஐயாவின் வரலாற்றில் இன்னும் ஒரு முக்கிய அத்தியாயம் அவரின் தமிழ்ப்பணி. மொழிபெயர்ப்புத்துறை மூலம் தமிழன்னைக்கு அளப்பரிய சேவை செய்த அவர் 'வானொலி மாமா' வாக சிறுவர் மலர் நிகழ்ச்சியில் இளம் தமிழ் உள்ளங்களில் தாய்மொழி வேட்கையை வளர்த்தெடுத்தார். பாராளுமன்றத்தில் எல்லோரும் போற்றும் சிரேஷ்ட தமிழ் மொழிபெயர்ப்பாளராக உயர்ந்தார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பொதுச் செயலாளராக பல ஆண்டுகள் பணிபுரிந்த அவர் பதவிகள் முக்கியமில்லை சேவை செய்யலாம் என்ற செய்தியை இளம் தலைமுறை யினருக்குத் தரும் வண்ணம் தொடர்ந்து ஆர்வத்துடன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து இருந்தார். தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் ஆபத்து வரும் என்றஞ்சிய வேளையில் உரியவர்களை உற்சாகப்படுத்திக் குரல் கொடுக்க வைத்தார்.

பாராளுமன்றத்தில் அவர் கொடுத்த சமகால மொழி பெயர்ப்புகள் அவரின் ஆங்கிலப் புலமையையும் பறைசாற்றின. அவரின் மொழிபெயர்ப்பைக் கேட்க பல அரசியல் தலைவர்கள் ஆசைப்பட்டார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சரவணமுத்து ஐயா இந்நாட்டின் ஒலிபரப்புத் துறையிலும் சாதனைகள் பல படைத்தவர். 1939ஆம் ஆண்டு (70 ஆண்டுகளுக்கு முன்) இளைஞனாகவே வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதாக 1999 செப்டெம்பர் வானொலி மஞ்சரியில் வெளியான பேட்டி ஒன்றில் 'வானொலி மாமா' சரவணமுத்து கூறியிருக்கிறார்.

எலிசபெத் மகாராணி இலங்கைக்கு விஜயம் செய்தபோது இடம்பெற்ற வானொலி நேரடி வர்ணனை மற்றும் பல திருவிழாக்கள், விளையாட்டு நிகழ்ச்சிகளையும் நேரடி விமர்சனம் செய்த ஒலிபரப்புத் துறையின் தலைமகன் இவர்.

சரவணமுத்து ஐயா ஒரு தபாலதிபராகவே தன் வாழ்வை ஆரம்பித்தார். Postmaster and Signaller ஆக இரண்டாம் மகா யுத்த காலத்தில் Ship to Shore Radio Station (C.L.O) ஆகவும் பணியாற்றி இருக்கிறார்.

சரவணமுத்து ஐயாவின் பன்முக வரலாற்றினைப் பல பக்கங்களில் எழுதலாம். எல்லாவற்றுக்கும் மேலாக அவரின் சில குணாதிசயங்களும் பண்புகளும் என்றும் நினைவு கூரப்பட்டு போற்றப்படவேண்டியவை. என்றும் வெள்ளை உடையையே உடுத்தி அவரின் உள்ளமும் வெள்ளை உள்ளம். வாதிடுவார், கருத்து மோதலில் துணிந்து தயங்காது ஈடுபடுவார். மனதில் பட்டதை அப்படியே எடுத்துரைப்பார். ஆனால், வஞ்சம் தீர்க்கும் கபட குணம் இல்லாதவர். அவருடன் கருத்து மோதலில் ஈடுபட்டவர்களுடன் கூட அன்பாக நேசித்து உறவாடுவார். கடந்த ஒன்பது ஆண்டுகளாக என்றும் என் மனதை நெகிழவைத்த ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு நிறைவு செய்ய விரும்புகிறேன். 2000 ஜனவரியில் என்னை மரணப்படுக்கையில் அவர் வந்து பார்த்து ஆசீர்வதித்த நிகழ்வை மேலே குறிப்பிட்டிருக்கிறேன்.

அதன்பின்னர் அவர் என்னைக் கண்டித்துப் பேசுவதையோ என்னுடன் கருத்து மோதலில் ஈடுபடுவதையோ தவிர்த்தே வந்தார். சிலவேளைகளில் என் செயற்பாட்டுடன் ஒத்துவராதிருந்தாலும் குறைகூற அவர் விரும்பாததை நான் உணர்ந்தேன். நேசத்துடன் என் உடல்நிலை பற்றி ஆர்வத்துடன் விசாரிப்பார். நாளாந்தம் பல மணித்தியாலங்கள் கூட தொண்ணூறைத் தாண்டியபின்பும் நடந்து வந்த அந்த இளைஞர் சுகதேகி. பல ஆண்டுகளால் அவரிலும் இளையவராகிய நான் நோயாளியாக இருப்பது அவருக்கு வேதனையாகவே இருந்தது. என் உடல்நிலை நன்றாக இருக்க வேண்டும் என அவர் விரும்பினார். அது மட்டுமல்லாமல் நான் செய்யும் பணிகள் நல்லவையாக அவரின் மனதிற்குப் பட்ட வேளைகளில் தயங்காது மனதாரப் பாராட்டி உற்சாகம் தந்தார். அத்தகைய பெரியவர் மறைந்தது மிகவும் வேதனை தருகிறது. அவரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீகௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமான் அருள்வாராக.

* * *


## இந்து ஒளி
### (காலாண்டிதழ்)

இந்து சமய அறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகள், கவிதைகள், ஆன்மீக புராணக் கதைகள் உட்பட பல பயனுள்ள அம்சங்களுடன் காலாண்டிதழாக கடந்த பதின்மூன்று வருடங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.

| | |
|---|---|
| *பிரதி ஒன்றின் விலை* | *:ரூபா 30.00* |
| *வருடாந்த சந்தா* | *:ரூபா 120.00* |
| *தபாற் செலவு (நான்கு இதழ்களுக்கு)* | *:ரூபா 180.00* |

பிரதிகள் தேவைப்படுவோர் அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# மணிவிழா கண்ட மனோகரன்

## மாமன்றம் வாழ்த்துகிறது



அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும், மாமன்ற கல்விக் குழுச் செயலாளரும், மாமன்ற அங்கத்துவ நிறுவனமான அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கப் பொதுச் செயலாளருமான திரு. தர்மலிங்கம் மனோகரன் இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் மணிவிழா கண்ட பெருமையுடன், இம்மாதம் (டிசம்பர்) 4ம் திகதியன்று தனது பதவியிலிருந்தும் ஒய்வு பெற்றுள்ளார்.

1968ம் ஆண்டில் அரச சேவையில் ஒரு எழுது வினைஞராக இணைந்து கொண்ட திரு. த. மனோகரன் சுகாதார அமைச்சிலும், பரீட்சைத் திணைக்களத்திலும் பின்னர் தொழிற் திணைக்களத்திலும் கடமையாற்றியிருக்கிறார். அரசசேவையில் மொத்தமாக 41 வருடங்கள் பணிபுரிந்த பெருமை இவருக்குண்டு. இவர் ஓய்வுபெறும் பொழுது தொழிற் திணைக்களத்தின் கைத்தொழில் நீதிமன்றப் பதிவாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

இவர் எழுத்துத் துறையிலும் பெரும் பங்களிப்புச் செய்து வருகிறார். இவரது கவிதைகள், கட்டுரைகள் என்பன நம்நாட்டுப் பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுவரையில் இரண்டு கவிதை நூல்களையும் வெளியிட்டிருக்கிறார். வானொலி, தொலைக்காட்சி சேவைகளில் இந்து சமயம் தொடர்பான பேச்சுக்களை தமிழிலும் சிங்களத்திலும் நிகழ்த்தி வந்திருப்பதுடன், பல கலந்துரையாடல் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியிருக்கிறார்.

ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கிறார். அறநெறிப் பாடசாலைகளிலும் சமயப் போதனை ஊடான இவரது பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மாமன்றத்தின் கல்விக் குழுச் செயலாளர் என்ற வகையில் இவரது பங்களிப்புடன் நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான செயலமர்வுகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பெரிதும் பயன்படத்தக்கதாக மாமன்றத்தால் வெளியிடப்பட்ட "இந்து நாகரிகம்" என்ற கைநூலை வடிவமைத்துத் தொகுப்பதில் திரு. மனோகரன் ஆற்றிய பெரும்பணி பெரிதும் பாராட்டத்தக்கது. மாமன்றக் காலாண்டிதழான 'இந்து ஒளி'யின் ஆசிரியர் குழுவில் இணைந்திருந்து ஆற்றிவரும் சேவைகளும் போற்றத்தக்கன.

மணிவிழா கண்ட திரு. மனோகரன் அவர்களுக்கு மாமன்றம் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆரோக்கியமான உடல்நலத்துடன் வாழ்ந்து பணியை மேலும் சிறப்பாகத் தொடர திருவருள் துணைநிற்க வேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

# சுவிஸ் வாழ் பக்தர்களது அன்பளிப்பு

கடந்தகால போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்த நிலையில் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு, சுவிஸ் வாழ் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் பக்தர்கள் அன்பளிப்பாக வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகளை வழங்கியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவரும், மாமன்ற சமூக நலன் குழுத் தலைவருமான திரு. சின்னத்துரை தனபாலா தகவல் தருகையில், சுவிஸ் வாழ் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் பக்கதர்கள் அங்கிருந்து அனுப்பிவைத்திருந்த நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியுதவியுடன், இங்கு கொள்வனவு செய்யப்பட்ட வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகள், வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் அவயவங்களை இழந்த பலருக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடனும், சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் உதவியுடனும் கடந்த மாதம் (நவம்பர்) 20ம் திகதியன்று வழங்கப்பட்டது என்று தெரிவித்தார்.

சக்கர வண்டிகளை கையளிக்கும் நிகழ்வில் திரு. சின்னத்துரை தனபாலா அவர்களுடன், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஆ. சிவசோதி, திரு. ரி. கிரிதரன், இந்து குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் (ஈஸ்வரக் குருக்கள்) மற்றும் சிவஸ்ரீ க.கி. நாராயணக் குருக்கள், சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சை சேர்ந்த திரு. ரி. ஜெயானந்தன் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

வவுனியா நலன்புரி முகாம்களுக்கு நேரில் சென்று, சக்கர வண்டிகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும், சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களது பிரத்தியேகச் செயலாளர் திரு.கே.என். தயானந்தா அவர்கள் செய்து கொடுத்திருந்தார் என்றும், சுவிஸ் வாழ் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் பக்தர்களின் நிதியுதவி சிவஸ்ரீ ஈஸ்வரக் குருக்கள் அவர்களின் ஊடாகவே கிடைக்கப் பெற்றதாகவும் திரு. சின்னத்துரை தனபாலா மேலும் தெரிவித்தார்.

# வைகுண்ட ஏகாதசி

மகாவிஷ்ணுவாகிய எம்பெருமான் பிரளய சமுத்திரத்தில் ஆலிலைமேல் பள்ளி கொண்டு தம்முடைய நாபிக் கமலத்திலிருந்து பிரம்மாவை படைத்தார்.

அந்த பிரம்மாவுக்கு நான் என்ற அகங்காரம் ஏற்பட்டது. அப்போது எம்பெருமான் காதுகளிலிருந்து இரண்டு அசுரர்கள் தோன்றி பிரம்மாவைக் கொல்ல முயற்சித்தார்கள். பிரம்மாவைக் கொல்ல வேண்டாம் என்று சொன்ன எம்பெருமானிடமும் அசுரர்கள் அகங்காரம் கொண்டு கர்ஜித்தார்கள். இப்படி அகங்காரமாகப் பேசும் நீங்கள், என்னால் கொல்லப்பட்டு அரக்கர்களாகப் பிறப்பீர்கள் என்று பெருமான் கூறினார்.

அவ்வாறு எங்களைத் தண்டிக்கக்கூடாது. உம்மோடு ஒரு மாதம் போர் புரிந்து முடிவில் உம்முடைய அனுக்கிரகத்தால் நாங்கள் மோட்சம் பெற வேண்டும் என்று அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

பிரார்த்தனையின் பயனாக மார்கழி மாதம் சுக்லபட்சம் ஏகாதசியன்று வடக்கு வாசலைத் திறந்து அவ்வசுரர்களை எம்பெருமான் வைகுந்தத்தில் சேர்த்துக் கொண்டார்.

எங்களுக்கு பரமபதத்தில் இடம் அளித்ததைப் போல் மார்கழி மாதம் சுக்லபட்சம் ஏகாதசியன்று சொர்க்கவாசல் வழியாக நுழைந்து தங்களை வழிபடும் எல்லோருக்கும் நல்லருள் புரிய வேண்டும் என்று அந்த அசுரர்கள் எம்பெருமானை வேண்டிக் கொண்டனர்.

அதன்படி வைகுண்ட ஏகாதசி நாளில் வைணவத் தலங்களில் சொர்க்கவாசல் வழியாக நுழைந்து இறைவனை வழிபடுபவர்கள் அனைவரும் பிறவிப் பெரும் நோய் நீங்கி பிறவாப் பெரும் பயன் என்னும் பரமபத பதவியைப் பெறுகின்றனர்.

ஏகாதசியன்று உண்ணாமலும் உறங்காமலும் இருந்து ஒரே சிந்தனையுடன் இறைவன் திருவடிகளைத் தியானித்து இன்பம் பெறுகிறார்கள்.

ஒரு சமயம் திருமங்கையாழ்வார், தான் பிறந்த கார்த்திகை நட்சத்திரத்தில் நடக்கும் விழாவில் தான் அருளி திருநெடுந்தாண்டகம் என்னும் பிரபந்தத்தை திருவரங்கன் முன் பண் இசைத்துப் பாட, மனம் மகிழ்ந்த அரங்கன் உமக்கு வேண்டிய வரம் பெற்றுக் கொள்ளும் என்று வாழ்த்த, மார்கழி மாதந்தோறும் நடக்கும் வேதம் ஓதுதல் விழாவில் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி பிரபந்தத்தையும் தாங்கள் கேட்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். பெருமான் அவ்வண்ணமே அருள் புரிந்தார்.

அதன்படி திருமங்கை ஆழ்வார், ஆழ்வார் திருநகரியிலிருந்து விக்ரகமாக உள்ள நம்மாழ்வாரையும் மதுரகவி ஆழ்வாரையும் திருவரங்கத்திற்கு எழுந்தருளச் செய்து, பெருமான் முன்னிலையில் சமஸ்கிருத வேதத்துடன், தமிழ் வேதமாகிய திருவாய்மொழி பிரபந்தத்தையும் சேர்த்துப் பாடச் செய்து மார்கழி மாதம் சுக்லபட்சம் ஏகாதசி முதல் பத்து நாட்களுக்கு இரவில் விழாவாக நடத்தி வரலானார். இவ்விழா, திருவாய்மொழித் திருநாள் என்றும், இரவுக் காலங்களில் இந்த உற்சவம் நடப்பதால் ராப்பத்து உற்சவம் என்றும் பெயர் பெற்றது. ராப்பத்து உற்சவத்தின் கடைசி நாள் நம்மாழ்வாரை பெருமான் தம் திருவடிகளில் சேர்த்துக் கொண்டு பரமபதம் அருள்வதாக ஐதீகம்.

பூர்வாச்சாரியார்களில் முதலாமவரான நாத முனிகள் வைகுண்ட ஏகாதசிக்கு முன் பத்து நாட்கள் பகல் பொழுதில் நடக்கும் உற்சவத்தை ஆரம்பித்து வைத்தார்.

பெரியாழ்வார் அருளிய திருமொழி, ஆண்டாள் நாச்சியார் அருளிய நாச்சியார் திருமொழி, குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழி, திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழி ஆகிய திருமொழிப் பாசுரங்கள் பாடப்படுவதால் திருமொழித் திருநாள் எனவும், பகல் பொழுதில் நடப்பதால் பகல் பத்து உற்சவம் என்றும் வழங்கப்படுகிறது.

பகல் பத்து, ராப்பத்து என்ற இருபது நாட்களுடன் இயற்பா திருநாள் எனச் சேர்த்து இருபத்தொரு நாட்கள் கொண்டாடப்பட்டு வரும் வைகுண்ட ஏகாதசி விழா, மோட்சம் கிட்டச் செய்யும் புண்ணிய விழா என்பதோடு, தமிழ்ப் பாசுரங்கள் பாடப்படுவதால், தமிழ் வேதத் திருவிழாவுமாகும்.

*(நன்றி : பக்தி)*

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாமன்றத்தின் நிதியுதவி

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து ஏற்கனவே வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம் திரும்பிய பட்டதாரி மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் நிதியுதவி செய்துள்ளது. வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக இவர்கள் ஒவ்வொருவருக்கும் 10,000/– ரூபாவீதம் மாமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து முதற்கட்டமாக யாழ். பல்கலைக் கழகம் வந்து சேர்ந்த மாணவர்களுக்கு கடந்த அக்டோபர் 4ம் திகதியன்றும், இரண்டாவது கட்டமாக வந்து சேர்ந்த மாணவர்களுக்கு அக்டோபர் 16ம் திகதியன்றும், நல்லூரிலுள்ள மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் வைத்து மேற்படி கொடுப்பனவு வழங்கப்பட்டது. இது தொடர்பான வைபவங்கள் மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றன. இந்த இரு நிகழ்வுகளின்போதும் மொத்தமாக 154 மாணவர்கள் மாமன்றத்தின் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து யாழ். பல்கலைக்கழகம் திரும்பிய மேலும் 128 பட்டதாரி மாணவர்களுக்கு கடந்த மாத (நவம்பர்) ஆரம்பத்தில் வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக ஒவ்வொருவருக்கும் ரூபா 10,000/= வீதம் வழங்கப்பட்டிருப்பதுடன், ஏற்கனவே கொடுப்பனவைப் பெற்றுக் கொண்ட 154 மாணவர்களுக்கு இரண்டாவது தடவையாகவும் ரூபா 10,000/= வீதம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய கொடுப்பனவுக்காக லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவல் சபையினர் 13230 ஸ்ரேர்லிங் பவுண் நிதியுதவியை செய்திருக்கிறார்கள்.

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகம் திரும்பிய 27 பட்டதாரி மாணவர்களுக்கும் கடந்த மாதத்தில் (நவம்பர்) வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக ஒவ்வொருவருக்கும் ரூபா 10,000/= வீதம் மாமன்றம் நிதியுதவி செய்துள்ளது.

## இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன்கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிவீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பதினொரு ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது சிறப்புக்குரிய விடயம். தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக "சக்தி இல்லம்" என்ற பெயரில் இன்னொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் மேற்படி இரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருப்பதுடன் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து மேலதிகமாக 273 பிள்ளைகள் விடுதியில் இணைந்திருக்கிறார்கள். கடந்த கால போர்ச் சூழ்நிலைகளினால் பல வகையிலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளே (ஆண்கள் 154, பெண்கள் 119) விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்த தினமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் வதியும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் போசனம் வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம். விடுதி மாணவர்களது தொகை இப்போது அதிகரித்துள்ளதால் போசனம் வழங்குவதற்கான செலவினங்களும் அதிகரித்துள்ளது. எனவே, இதற்கான நன்கொடைத் தொகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்.

**மாற்றப்பட்ட நன்கொடை விபரம் பின்வருமாறு அமைகிறது:**

| | | |
|---|---|---|
| காலைப் போசனம் | : | 20000/− ரூபா |
| மதிய போசனம் | : | 30000/− ரூபா |
| | | 40000/− ரூபா (விசேடம்) |
| இரவுப் போசனம் | : | 30000/− ரூபா |
| | | 40000/− ரூபா (விசேடம்) |
| மாலை தேநீர்/ சிற்றுண்டி | : | 20000/− ரூபா |

போசனத்திற்கான நன்கொடை அல்லது வேறு வகையில் உதவ விரும்புபவர்கள் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல : 011 – 2625588) அல்லது அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல : 011-2434990, தொலைநகல் இல : 011-2344720

## மாமன்ற வெளியீடுகள்

- இந்து ஒளி (காலாண்டிதழ்) ரூபா 30.00
- மாமன்ற பொன்விழா சிறப்பு மலர் ரூபா 1500.00
- இந்து மக்களுக்கு ஒரு கையேடு ரூபா 100.00
- இலங்கையில் இந்து சமயம் ரூபா 600.00
- கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலர் ரூபா 150.00
- திருக்கேதீச்சரம் ரூபா 150.00
- இந்து நாகரிகம் ரூபா 250.00
- புதுமைக்கும் வழிகாட்டும் சைவ சமயம் ரூபா 100.00
- GLORIES OF SHAIVAISM ரூபா 30.00
- AN ELUCIDATION OF THE TIRUPPASURAM ரூபா 50.00
- THE ELEMENTS OF SAIVA SIDDHANTAM ரூபா 100.00
- ஆறுமுகநாவலர் வரலாறு - ஒரு சுருக்கம் ரூபா 150.00
- தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும் ரூபா 500.00

மாமன்றத்தின் வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அல்லது ஏதாவது விடயங்கள் சம்பந்தமாக மாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுவதற்கு பின்வரும் முகவரிக்கு எழுதலாம்.

பொதுச் செயலாளர்

அகில இலங்கை இந்து மாமன்றம்

91/5, சேர் சிற்றம்பலம் ஏ. காா்டினா் மாவத்தை, கொழும்பு-2,

தொலைபேசி இல:- +94 011 2434990,

தொலைநகல் இல:- +94 011 2344720

மின்னஞ்சல் :- hinducongress@gmail.com

இணையத்தள முகவரி :- www.hinducongress.lk

## "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்"

(சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது சமய சமூக நலப் பணிகளையும் எடுத்துச் சொல்லும் நூல் இது. அம்மையாரின் வாழ்விலிருந்து சில நிகழ்வுகள் புகைப்படங்களாகவும் இணைக்கப்பட்டுள்ளன)

**விலை :- 500/= ரூபா (தபாற் செலவு 170.00 ரூபா)**


மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்

தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டு தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த பெரியார் நாவலர்

– எஸ். வையாபுரிப்பிள்ளை


# சுவிஸ் வாழ் பக்தர்களது அன்பளிப்பு






வவுனியா நலன்புரி முகாம்களில் அவயவங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தங்கியிருப்பவர்களுக்கு சுவிஸ் வாழ் மேல்வருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் பக்தர்களது அன்பளிப்பாக வலுவிழந்தோருக்கான முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்ட நிகழ்வு. (செய்தி விபரம் 32ம் பக்கம்)





இவ்வருட (2009) ஆடி அமாவாசை தினத்தன்று வவுனியா உள சமூக மன்றம், அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய அறங்காவலர் சபையினரின் அனுசரணையுடன் நடத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையின் போது ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தை முதலாவது படத்திலும், மாமன்றத்தின் நிதியுதவியுடன் வவுனியாவில் அமைக்கப்பட்டு வரும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய யாத்திரிகர் அன்னதான மடத்தின் தோற்றத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.


# மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் தீபாவளி அன்பளிப்பு











கடந்தகால யுத்த அனர்த்தங்களால் உடல்நலம் பாதிக்கப்பட்டு மன்னார் மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருபவர்களுக்கும், மன்னார் சிறுவர் இல்லப் பிள்ளைகள் மற்றும் திருக்கேதீஸ்வரத்திலுள்ள முதியோர் இல்லத்தில் வதிபவர்கள் ஆகியோருக்கு இவ்வருட தீபாவளி தினத்தன்று மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் புதிய உடுப்புகளையும், சத்துணவு பால்மா பொருட்களையும் வழங்கியது.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன், வைத்திய கலாநிதி ஆ. அரசக்கோன், ஒன்றியத்தின் சிவதொண்டர் அணி முதலுதவிப் பணியாளர்கள், மருத்துவ அதிகாரிகள், முதியோர் இல்லப் பொறுப்பாளர் மற்றும் பணியாளர்கள் மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் புலவர் அ. திருநாவுக்கரசு ஆகியோரை படங்களில் காணலாம்.

இங்கு வழங்கப்பட்ட உடுப்பு வகைகளை லண்டன், ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையினர் லண்டனிலிருந்து அனுப்பிவைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் சிவதொண்டர் அணி பயிற்சியும் ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கும் (10.10.2009, 11.10.2009)



பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.



தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நந்திக் கொடியை ஏற்றி வைக்கிறார்கள்.



மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை மங்கள விளக்கேற்றுகிறார்.



மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. க. ஜெகதீசன் இறைவணக்கம் செலுத்துகிறார்.



திருக்கேதீஸ்வர தேவஸ்தான திருப்பணிச் சபைத் தலைவர் திரு. இ. நமசிவாயம் உரையாற்றுகிறார்.



மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் தலைமையுரையாற்றுகிறார்.

[மேற்படி நிகழ்வு சம்பந்தப்பட்ட படங்கள் கடந்த இந்து ஒளி (தீபம் - 13 சுடர் - 04) இதழிலும் வெளிவந்துள்ளன.]

## தீபாவளி சிறப்புப் பிரார்த்தனை (17.10.2009)





கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற பிரார்த்தனை நிகழ்வின் போது பூசை வழிபாடு.

## மன்னாரில் ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு - (10.10.2009, 11.10.2009)





## இடம்பெயர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாமன்றத்தின் நிதியுதவி





## அமரர் ச. சரவணமுத்து - நிகழ்வின் நினைவு (23.04.2005)





காலஞ்சென்ற ச. சரவணமுத்து அவர்களுக்கு மாமன்றம் "மூத்த சிவதொண்டர்" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்த நிகழ்வு.

UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL : +94 11 2330195